விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்

Thamil Naatham

'கல்வி ஒளி' இலவச இணைப்பு உள்ளே...

இராகம் 01 | தாளம் 36 | வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 24 புதன்கிழமை (08.08.2012) | பக்கங்கள்: பதினாறு + 8



இரண்டு இழுவைப் படகுகளில் சட்டவிரோதமான முறையில் அவுஸ்ரேலியா செல்ல முற்பட்ட 26 பேர் நேற்று கிழக்குக் கடலில் வைத்து கடற்படையி-னரால் கைது செய்யப்பட்டனர். அதிலொரு படகினைப் படத்தில் காணலாம்.

## தமிழ் அரசியல் கைதிகளை மனிதர்களாக பார்க்க மறுக்கின்றனர்

**சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி.**



எல்லா சிறைச்சாலைகளிலும் சிறைக் கைதிகளும் மனிதர்களே என்று எழுதி வைத்துள்ளார்கள். ஆனால் அங்குள்ள தமிழ் அரசியல் கைதிகள் எக்காலத்திலும் அவர்களுக்கு மனிதர்களாகத் தெரிவதில்லை என்று தமிழத் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமசந்திரன் தெரிவித்தார்.

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதி-களை விடுவிக்க வேண்டும். அத்துடன் அவர்கள் மீதான தாக்குதல், படுகொலைக்கு காரணமானவர்களும் விசாரிக்கப்பட வேண்டும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

கறுப்பு ஜூலையை முன்னிட்டும் நிமலரூபன்

02

## கரணவாய் மூத்த விநாயகர் ஆலயத்தில் 20 பவுண் நகை கொள்ளை

(பருத்தித்துறை)

கரணவாய் மூத்த விநாயகர் ஆலயத்தின் மூலஸ்தானத்துக்குள் புகுந்த திருடர்கள் இருபது தங்கப்பவுண் நகைகளையும், வெள்ளிப் பொருட்களையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். கடந்த திங்கட்கிழமை இரவு மூலஸ்தானத்தின் வடக்குப் பகுதிக் கதவை உடைத்து உள்ளே சென்ற கொள்ளையர்களே இவற்றை அபகரித்துச் சென்றுள்ளனர்.

நேற்றுக்காலை பூசை

02

## பிளேக்கை சந்திப்பேன்



இந்த வாரம் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ள தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் றொபர்ட் ஓ பிளேக்கை தான் கொழும்பில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

திருகோணமலை, சூரநகர்ப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற

02

# பாராளுமன்றத்தின் சிறப்புரிமையை மீறினாராம் மன்னார் நீதிவான்

**சபையில் பிரச்சினை கிளப்பினார் ஹுனைஸ் பாரூக் எம்.பி**



பாராளுமன்றத்தில் பேசிய விடயம் குறித்து மன்னார் நீதிமன்றத்தில் வைத்து மன்னார் நீதவான் தன்னிடம் விசாரித்ததன் மூலம் தனது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாக வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஹூனைஸ் பாரூக் நேற்றுப் பாராளுமன்றத்தில் தெரிவித்தார். தான் பாராளுமன்ற உறுப்பினராகவும், சட்டத்தரணியாகவும் இருப்பது தெரிந்தும்கூட நீதிவான் கடுமையாக நடந்து கொண்டதன் மூலம் பாராளுமன்றத்தை அவமதித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்றுச் சிறப்புரிமைப் பிரச்சினையொன்றினை எழுப்பிப் பேசிய ஹூனைஸ் பாரூக் எம்.பி. கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்.

கடந்த ஜூலை 31ஆம் திகதி ஐந்து சட்டத்தரணிகளுடன் நான் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தேன். இங்கு எனது பெயர் குறிப்பிடப்பட்ட போது "என்னைப் பார்க்க வேண்டும்" என்று சத்த மான குரலில் நீதவான் குறிப்பிட்டார்.

02

## பாராளுமன்றத்தில் எம்.பி.க்கள் பேசும் விடயம் குறித்து எவரும் கேள்வி கேட்க முடியாது

**சபாநாயகர் சமல் ராஜபக்ஷ**



"பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் பேசும் விடயங்கள் குறித்து எவருக்கும் எங்கும் கேள்வி எழுப்பவோ, அச்சுறுத்தவோ உரிமை கிடையாது. ஹூனைஸ் பாரூக் எம்.பி. யின் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதோடு இந்த விடயம் குறித்து சிறப்புரிமை குழுவினாலும் ஆராய முடியும்" என்று சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

02

## கைது செய்யப்பட்ட சீன மீனவர்கள் தூதரகத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்

இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டிருந்த 37 சீன மீனவர்கள் சீன நாட்டு தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். சீன அதிகாரிகளிடம் இவர்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளதை இலங்கை கடற்படையின் பேச்சாளர் கோசல வர்னகுலசூரிய பி.பி.சி.க்கு உறுதிப்படுத்தியுள்ளார்.

கடந்த ஞாயிறன்று இரவு மட்டக்களப்பு கடற்பிராந்தியத்தை அண்மித்த பகுதியில் இரண்டு இழுவைப் படகுகள் மூலம் சட்டவிரோதமான முறையில் மீன் பிடித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் 37 சீனமீனவர்கள் மற்றும் இரண்டு

02

## டெசோ மாநாட்டுக்கு பஸ்வான் செல்வதை தடுக்க இலங்கைத் தூதர் முயற்சியாம்

டெசோ மாநாட்டில் லோக் ஜனசக்திக் கட்சித் தலைவர் ராம் விலாஸ் பஸ்வான் பங்கேற்பதை தடுக்க டெல்லியில் உள்ள இலங்கை தூதர் பிரசாத் கரியவாசம் முயற்சித்ததாக பஸ்வான் கூறியுள்ளார். எதுவாக இருந்தாலும் கலைஞரிடம் பேசிக் கொள்ளுங்கள் என்றுதான் பதில் அளித்ததாக தெரிவித்தார்.

02

## புதுக்குடியிருப்பில் வெள்ளியன்று 635 பேர் மீள்குடியமர்த்தப்படுவர்

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு கிழக்கில் 206 குடும்பங்கள் நாளை மறுதினம் 10ஆம் திகதி மீள்குடியமர்த்தப்படவுள்ளன. இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் திட்டப் பணிப்பாளர் பவானி கணேசமூர்த்தி தெரிவித்தார்.

வவுனியா மெனிக் பார்ம் நலன்புரி நிலையத்திலுள்ள புதுக்குடியிருப்பு கிழக்கு பிரதேசத்தைச் சேர்ந்த 206 குடும்பங்களைச் சேர்ந்த

02

## பயில்நிலைப் பட்டதாரிகளின் வகுப்பு பகிஷ்கரிப்பு ஒரு தொடக்கப் புள்ளியே

**உயர் தொழில்நுட்பவியல் டிப்ளோமா பட்டதாரிகள்**

"ஏற்கனவே நான்கு வருடங்கள் செலவழித்துப் படித்து டிப்ளோமா பட்டம் பெற்றுவிட்டு, தொழில் வாய்ப்பின்றித் திரியும் எங்கள் நிலை கண்டு எமக்கு ஆதரவாகப் பயில்நிலைப் பட்டதாரிகள் மேற்கொள்ளும் வகுப்புப் பகிஷ்கரிப்பு ஒரு தொடக்கப் புள்ளியே" இவ்வாறு யாழ்.மாவட்ட உயர் தேசிய கணக்கியல், வர்த்தக முகாமைத்துவ பட்டதாரிகள் சங்கம் நேற்று விடுத்த

02

# அரசியல்வாதிகளுக்காக நாடு வருடாந்தம் 1000 கோடி ரூபாவுக்கு மேல் செலவிடுகிறது

பாராளுமன்றம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிச் சபைகளில் அங்கம் வகிக்கும் அரசியல்வாதிகளுக்காக வருடாந்தம் ஆயிரம் கோடி ரூபாவுக்கு மேல் செலவழிக்கப்படுகிறதென்று ஐக்கிய தேசிய பிக்குகள் முன்னணியின் பொதுக்காரியதரிசி வணதின்யவல பாலித தேரோ கூறினார்.

சுமார் 600 முன்னாள் எம்.பி.க்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுக்கு வருடாந்தம் 160 கோடி ரூபா ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. சாதாரண அரசாங்க ஊழியர்களுக்கு ஓய்வூதியமாக வருடாந்தம் 140 கோடி ரூபாவே வழங்கப்படுகிறது என்றும் பாலித தேரர் கூறினார்.

இலங்கை அரசியல்வாதியொருவர் பி.எம்.டபிள்யு. சொகுசுக்காரை நாற்பது இலட்ச ரூபாவுக்கு வாங்க முடியும். ஆனால் அதன் உண்மையான விலை நான்கு கோடி ரூபாவாகும். எம்.பி.க்களால் மொன்ரேறோ வாகனமொன்றினை முப்பது இலட்ச ரூபாவுக்குக் கொள்வனவு செய்யமுடியும். ஆனால் அதன் உண்மையான விலை ஒரு கோடியே 26 இலட்சமாகும்.

மக்கள் பிரதிநிதிகளென்று தம்மைக் கூறிக் கொள்பவர்கள் ஓய்வூதியத்தைப் பெறுவதிலேயே அக்கறை கொள்கிறார்கள். எந்த வகையிலாவது தேர்தலில் வெற்றி பெற அவர்கள் முயற்சிப்பதற்கு இதுவே காரணம் என்றும் தேரர் சொன்னார்.

# இஸட் புள்ளிச் சிக்கல் குறித்து பாராளுமன்றில் ரணில் கேள்வி

இஸட் புள்ளி பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு நியாயம் வழங்கும் வகையில் அதிகாரிகள் நடவடிக்கையில் ஈடுபடுவதாகத் தெரியவில்லை என எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார். பாராளுமன்றில நேற்று விசேட உரையாற்றிய போது ரணில் இவ்வாறு கூறினார்.

இஸட் புள்ளி பிரச்சினைக்கு தீர்வுகாண பாராளுமன்ற தெரிவுக் குழு ஒன்றை அமைக்கும்படி அரசாங்கத்திற்கு இதற்கு முன்னர் வலியுறுத்தினோம். அரசு அதனை கருத்தில் எடுக்காமல் செயற்படுவதால் இன்னும் நியா யம் கேட்டு பலர் நீதிமன்றம் சென்று கொண்டிருப்பதாக எதிர்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் இஸட் புள்ளி பிரச்சினை தொடர்பில் உரிய பதில் அளிக்கும்படி எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்ர மசிங்க உயர் கல்வி அமைச்சரிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

முதலில் வெளியிட்ட இசெட் புள்ளி அடிப்படையில் பல்கலைக் கழகம் அனுமதி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை யாது? நீதிமன்ற தீர்ப்பின்படி வெளியிடப்பட்ட இஸட் புள்ளியை அடுத்து பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை யாது? முதலாவது கேள்விக்கான விடைபடி பல்கலைக்கழக அனுமதி பெற்று இரண்டாம் கேள்விக்கான விடையில் பல்கலைக்கழக அனுமதி இழந்தோரின் எண்ணிக்கை யாது?

அவ்வாறு அனுமதி கிடைக்காத மாணவ, மாணவிகளுக்கு நியாயம் வழங்கவென எடுத்துள்ள நடவடிக்கை என்ன? என்றும் கேட்டார்.

## 46 பேர் தாயகம் திரும்பினர்

யுத்த காலத்தின் போது இந்தியாவுக்குச் சென்று திருச்சியில் தங்கியிருந்த இலங்கை அகதிகளில் 46பேர் நேற்று மீண்டும் நாடு திரும்பினர்.

15 குடும்பங்களைச் சேர்ந்த இவர்கள், திருகோணமலை, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் மன்னார் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று செவ்வாய்க்கிழமை, இவர்கள் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த நிலையில், தங்களது ஊர்களுக்குத் திரும்பியுள்ளனர்.

## காந்தி சிலை உடைப்பு: சந்தேக நபர்களுக்கு பிணை

அரியாலை, காந்தி சனசமூக நிலையத்திற்கு முன்னால் அமைக்கப்பட்டிருந்த காந்தி சிலையை உடைத்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு விளக்கமறியலில் கைக்கப்பட்டிருந்த இரு இளைஞர்களையும் பிணையில் செல்ல யாழ். நீதிவான் நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை அனுமதித்துள்ளது.

கடந்த ஜூலை 25ஆம் திகதி காந்தி சிலை உடைத்தாக குற்றஞ்சாட்டப்பட்ட குறித்த இரு நபர்களும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

மேற்படி வழக்கு யாழ். நீதிவான் நீதிமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது, நீதிபதி மா.கணேசராஜா இரு நபர்களையும் தலா 50,000 ரூபா சரீரபிணையில் விடுதலை செய்யதார்.

## பாராளுமன்றத்தில்...(தொடர்)

பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை தொடர்பில் மன்னார் நீதவான் தன்னிடம் விசாரணை செய்ததினூடாக தனது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாகக் கூறி ஹுனைஸ் பாரூக் எம்.பி. நேற்று சபையில் சிறப்புரிமைப் பிரச்சினையொன்றினை முன்வைத்தார்.

இதற்குப் பதிலளித்தபோதே சபாநாயகர் மேற்கண்டவாறு கூறினார்.

சகல பாராளுமன்ற உறுப்பினர்களினதும் உரிமைகளையும் கௌரவத்தையும் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பதாகவும் சபாநாயகர் கூறினார். இங்கு பேசும் விடயம் தொடர்பில் எம்.பி. ஒருவரை அச்சுறுத்த எவருக்கும் உரிமை கிடையாது எனவும் அது அவரின் சிறப்புரிமையை மீறுவதாகும் என்றும் சபாநாயகர் குறிப்பிட்டார்.

## பிளேக்கை சந்தி...(தொடர்)

தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

இதேவேளை, திருகோணமலை மாவட்டத்தின் பூநகர், புன்னையடி, கூனித்தீவு ஆகிய பகுதிகளிலும் ஞாயிற்றுக்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் நடைபெற்றன. இவற்றில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் திருகோணமலை மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்னசிங்கம், வேட்பாளர்களும் கலந்துகொண்டனர்.

## கைது செய்யப்பட்ட சீன...(தொடர்)

இலங்கையர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். பின்னர் இவர்கள் திருகோண மலை துறைமுகப் பகுதிக்கு கொண்டுவரப்பட்டனர்.

இந்தப் படகுகளுக்கு இலங்கை மீன்பிடித்துறை அமைச்சால் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக மீன்பிடித்துறை அமைச்சின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றாலும் கூட இலங்கைக் கடற்பரப்பில் 200 கடல் மைல்களுக்கு அப்பால் இவாகள் மீன்பிடிப்பதற்கே அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

## புதுக்குடியிருப்பில் வெள்ளியன்று...(தொடர்)

635 பேர் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர். இவர்கள் மெனிக்பார்மிலிருந்து அழைத்து வரப்பட்டு கைவேலி கணேச வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டு 10ஆம் திகதி அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியமரத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து புதுக்குடியிருப்பு மேற்கில் மீள்குடியேற்றம் செய்யவுள்ளோம். மீள்குடியமர்த்தப்படும் குடும்பங் களுக்கு மீள்குடியமர்த்தப்பட்ட தினத்திலிருந்து மூன்று தினங் களுக்கு சமைத்த உணவு வழங் கப்படும். இதனை விட யூ.என். எச்.சீ.ஆர். வழங்கும் 20,000/- ஒவ் வொரு குடும்பத்துக்கும் வழங்கப் படும். உலக உணவுத் திட்டத் தின் உலருணவு நிவாரணமும் இவர்களுக்கு வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## டெசோ மாநாட்டுக்கு...(தொடர்)

தி.மு.க தலைவர் கருணாநிதி தலைமையில் டெசோ அமைப்பின், ஈழத் தமிழர் வாழ்வுரிமை மாநாடு சென்னை ராயப்பேட்டை வை.எம்.சி.ஏ. மைதானத்தில் [illegible]ம் 12ஆம் திகதி நடைபெறவுள்ளது.

## பயில்நிலைப் பட்டதாரிகளின்...(தொடர்)

அறிக்கையில் தெரிவித்துள்ளது. இலங்கை உயர்தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் பட்டதாரிகளான நாங்கள் போர்ச் சூழல் மற்றும் பல நெருக்கடிகளுக்கு மத்தியில் எமது பட்டப்படிப்பை நிறைவு செய்தோம். இந்நிலையில் வேலையற்ற பட்டதாரிகளிற்கென உருவாக்கப்பட்ட பட்டதாரிப் பயிலுநர் நியமனத்தில் வடமாகாணத்தில் மட்டும் நாம் புறக்கணிக்கப்பட்டோம். எமது போராட்டத்துக்கு ஆதரவாகவும் வேறு சில கோரிக்கைகளை முன்வைத்தும் தற்போது பயில்நிலைப்பட்டதாரிகள் வகுப்பு பகிஷ்கரிப்பில் ஈடுபடுவது அவர்களால் உரிய நேரத்தில் எடுக்கப்பட்ட சரியான முடிவென எமது சங்கம் கருதுகிறது.

பலர் தங்களது சம்பள முரண்பாடுகளைத் தீர்ப்பதற்காகவும் பதவி முன்னேற்றங்களுக்காகவும் தமது உரிமைகளைப் பெற்றிட பல போராட்டங்கள் நடத்துகின்றனர். இந்நிலையில் தாம் பல வருடங்களை செலவழித்து படிக்கும் படிப்பு, அங்கீகாரத்திலிருந்து விலக்கப்படுவதை எதிர்த்தும் தமது படிப்புக்கான சரியான நிலையை அல்லது பெறுமதியை கண்டு கொள்ளவும் பயில்நிலைப் பட்டதாரிகள் மேற்கொள்ளும் நடவடிக்கை சட்டத்திற்கு புறம்பானதல்ல. எனவே உரிய தரப்புக்கள் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி போராட்ட உரிமையை நசுக்கா மல் உரிய தீர்வை பெற்றுக் கொடுக்க மட்டுமே முயற்சி செய்ய வேண்டும் என நாம் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கரணவாய் மூத்த...(தொடர்)

வழிபாட்டு பூசை வழிபாட்டுக்காக கோயிலுக்கு உள்ளே சென்ற ஆலயப் பூசகர் மூலஸ்தானத்திலிருந்த பெறுமதி மிக்க பொருட்கள் திருட்டுப் போனதை அறிந்து பொலிஸில் புகார் செய்துள்ளார்.

கொள்ளையிடப்பட்ட ஆபரணங்களின் பெறுமதி பத்து இலட்சம் ரூபாவுக்கும் அதிகமானதென மதிப்பிடப்பட்டுள்ளது.

## பாராளுமன்றத்தின் சிறப்புரிமையை...(தொடர்)

"நீ என்னைப்பற்றி பாராளுமன்றத்தில் பேசினியா? மன்னார் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் நீயும் இருந்தியா? என்று அவர் கடுமையான தொனியில் கேள்வி எழுப்பினார். பத்திரிகைகளில் இது தொடர்பான செய்தி இருந்ததாகவும் அவர் கூறினார். "இந்த விடயம் தொடர்பிலான சட்டப்பிரச்சினை குறித்துப்பேச வேண்டும்" என நான் கூறிய போது நீதவான் என்னை பார்த்துச் சத்தமிட்டார். இதன்போது சிராஜ் நூர்தீன் எனும் சட்டத்தரணி தலையிட்டார். அவர் ஒரு சட்டத்தரணி அத்துடன் பாராளுமன்ற உறுப்பினரும் கூட. எனவே அவ்வாறு பேசுவது உகந்ததல்ல என்ற போது "உங்களுடன் ஆலோசனை தேவையில்லை" என்று நீதவான் கூறினார்.

பாராளுமன்ற உறுப்பினரின் சிறப்புரிமைக்கு முரணாகவே நீதவான் நடந்து கொண்டார். அதனால் இந்த சிறப்புரிமையை சபையில் முன்வைக்கிறேன். மன்னார் மாவட்ட மக்கள் பிரதிநிதியான நான் அப்பகுதியில் நீண்ட காலமாக செயற்பட்டு வருகிறேன். நான் சட்டத்தரணி எனத் தெரிந்திருந்தும் நீதவான் அவ்வாறு நடந்துகொண்டதன் மூலம் பாராளுமன்றத்திற்கு அவமதிப்பு செய்யப்பட்டுள்ளது. பாராளுமன்ற சிறப்புரிமையும் மீறப்பட்டுள்ளது என்றார்.

எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க கூறியதாவது, மன்னார் நீதவான் தொடர்பிலான இந்தப் பிரச்சினை பாரதூரமான விடயமாகும். எமது உறுப்பினர் ஒருவரின் உரிமை தொடர்பிலான பிரச்சினையில் நான் தலையிட்டு குரல்கொடுப்பேன். ஆனால் இங்கு வேறு பிரச்சினையே உள்ளது என்றார்.

ஏ.எச்.எம். அஸ்வர் எம்.பி. கூறியதாவது எதிர்க்கட்சித்தலைவர் சகல நிலையியற் கட்டளை சட்டங்களையும் மீறுகிறார். நீதவான் ஒருவரினால் எம்.பி. ஒருவரின் சிறப்புரிமை மீறப்பட்டது தொடர்பில் இங்கு பேச அவருக்கு உரிமை உள்ளது. இங்கு பேசும் விடயம் குறித்து வேறு இடத்தில் கேள்வி எழுப்ப முடியாது.

மன்னாரில் இருந்து முஸ்லிங்களை துரத்தும் சதித்திட்டத்தில் எதிர்கட்சித் தலைவரும் ஒரு பங்காளியாக உள்ளார் என்பதை சபையில் நிரூபித்துள்ளார். ஆனால் கிழக்கிற்கு சென்று முஸ்லிம்களிடம் வாக்கு கேட்கிறார் என்றார்.

## தமிழ் அரசியல்...(தொடர்)

மரணத்துக்கு கண்டனம் தெரிவித்தும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும் "அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான அமைப்பு" ஏற்பாடு செய்த நிகழ்வொன்று கொழும்பு பொது நூலகத்தில் நேற்று பிற்பகல் இடம்பெற்றது.

அங்கு உரையாற்றிய சுரேஸ் எம்.பி கூறுகையில்,

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி பல்வேறு தரப்பினரும் பல்வேறு போராட்டங்களை நடத்தினர். அத்துடன், கைதிகளின் விடுதலைக்காக முன்னெடுக்கப்பட்ட அனைத்து வித நடவடிக்கைகளின் போதும் அவர்களின் விடுதலைக்கான கோரிக்கை அரசாங்கத்திடம் பல முறை முன்வைக்கப்பட்டது. ஆனால் இன்றுவரை இதற்காக அரசாங்கம் எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை. இது கவலைக்குரிய விடயமாகும்.

சிறைக்கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் விடுவிக்கப்பட வேண்டும். வவுனியா சிறைச்சாலைக் கைதிகள் மிகவும் கோரமான முறையில் தாக்கப்பட்டனர்.

ஆனால் இது தொடர்பில் இதுவரையில் எந்தவித விசாரணையும் நடத்தப்படவில்லை. இந்தத் தாக்குதல்கள் தொடர்பாக அல்லது இச்சம்பவத்துக்கு காரணமானவர்கள் தொடர்பாக அல்லது, இந்த சம்பவத்துக்கான காரண காரியங்கள் தொடர்பாக என்ன விசாரணை இதுவரையில் நடைபெற்றுள்ளது?

எல்லா சிறைச்சாலைகளிலும் சிறைக் கைதிகளும் மனிதர்கள் என்று எழுதி வைத்துள்ளார்கள். ஆனால் அங்குள்ள தமிழ் அரசியல் கைதிகள் எக்காலத்திலும் அவர்களுக்கு மனிதர்களாகத் தெரிவதில்லை.

அவர்கள் எந்த விதமான சூழ்நிலையிலும் கொல் லப்படலாம் என்ற துர்பாக்கிய நிலைமையே அங்கு காணப்படு கின்றது. இவ்வாறு சுரேஷ் பிரே மச்சந்திரன் கூறினார்.




புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் புனித பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த கல்லூரியின் பொற்காலத்தை நினைவுகூரும் பேருலா ஒன்று கடந்த 06 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்றது. இதில் கல்லூரியின் புகழ்பூத்த அதிபராகக் கடமையாற்றிய அருட்தந்தை ரி.எம்.எவ்.லோங் அடிகளாரின் கல்வெட்டு அமைந்துள்ள யாழ்.பொது நூலக வளாகத்தில் இருந்து பண்பாட்டுப் பேரணி ஆரம்பமாகி பிரதான வீதியூடாக கல்லூரியைச் சென்றடைந்தது. இதில் தமிழர் கலாசாரத்தைப் பிரதிபலிக்கின்றன ஊர்திகள், மாணவர்களின் கலை நிகழ்வுகள் என்பன இதில் இடம்பெற்றன. இதில் உலகின் பல நாடுகளில் உள்ள பழைய மாணவர்கள் கலந்து சிறப்பித்ததுடன் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

# பதவி விலகுமாறு அழுத்தமா? இல்லை என்கிறார் ந.வி.பிள்ளை

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையை பதவி விலகுமாறு அமெரிக்கா கோரியதாகத் தெரிவிக்கப்படும் கருத்துக் ... நவநீதம்பிள்ளை மறுத்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனும், அமெரிக்காவும் நவநீதம்பிள்ளையை பதவி விலகுமாறு கோரியதாக இன்னர் சிட்டி பிரஸ் ஊடகம் தெரிவித்துள்ளது. எனினும், இதனை நவநீதம்பிள்ளை மறுத்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பில் வேறு உயர் பதவி ஒன்றை வழங்குவதாகத் தெரிவித்து, இவ்வாறு பதவி விலகுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாகவே நவநீதம்பிள்ளையின் இரண்டாம் தவணைப் பதவிக்காலம் குறைக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.



## இலஞ்சம் பெற்றாராம்:

# பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு இறைச்சிக் கடைக்காரர் அடிஉதை

இலஞ்சம் பெற்றார் என குற்றஞ்சாட்டி பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை இறைச்சிக் கடைக்காரர்கள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்த சம்பவம் ஒன்று நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

நற்பட்டிமுனையில் மாட்டு இறைச்சி வெட்டி கல்முனை மகளிர் பாடசாலைக்கு அருகாமையில் உள்ள இறைச்சி கடைக்கு காலை 6.00 மணியளவில் முச்சக்கரவண்டியில் எடுத்துச் சென்றபோது குறித்த பாடசாலையில் க.பொ.த உயர்தர பரீட்சைக்கு காவல் கடமையில் இருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் இறைச்சியை எடுத்துச்சென்ற முச்சக்கரவண்டியை நிறுத்தி இவ்வாறு இறைச்சியை எடுத்துவரமுடியாது என பயமுறுத்தி 10 ஆயிரம் ரூபா இலஞ்சமாக கேட்டுள்ளார்.

இதன்பின்னர் இறைச்சியை எடுத்துச் சென்றவர் ஆயிரம் ரூபாவை இலஞ்சமாக வழங்கியுள்ளார்.

இதனையடுத்து இறைச்சிக் கடைக்கு இறைச்சியை குறித்த நேரத்திற்கு பின்னர்

# துமிந்த சில்வா நாடு திரும்பவில்லை நீதிமன்றுக்கு சட்டத்தரணி அறிவிப்பு

## சிங்கப்பூரில் தொடர்ந்து சிகிச்சையாம்

ஜனாதிபதியின் ஆலோசகரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமானபாரத லக்ஷமன் பிரேமசந்திரவின் கொலைச் சம்பவத்தின் சந்தேகநபரான நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா, இதுவரையில் நாடு திரும்பவில்லை என்றும்,

அவருக்கு இன்றைய (நேற்று) தினம் சிங்கப்பூர் வைத்தியசாலையில் சத்திரசிகிச்சையொன்று மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் அவர் சார்பில் மன்றில் ஆஜராகிய ஜனாதிபதி சட்டத்தரணி ஹேமந்த வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த கொழும்பு மேலதிக நீதவான் பிரசன்ன அல்விஸ், பாரத லக்ஷமனின் கொலைச் சந்தேகநபரான துமிந்த சில்வாவை கைது செய்துமாறு தான் ஏற்கனவே விடுத்த உத்தரவு இன்றும் அலுலில் உள்ளது என்று குறிப்பிட்டார்.

# வடமாகாணத்தில் கடும் வரட்சி சிறுபோக நெற்செய்கையில் பாதிப்பு

வடமாகாணத்தில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக சிறுபோக நெற்செய்கை பெருமளவில் பாதிக்கப்பட்டிருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

குடிநீருக்காக மக்கள் நீண்ட தூரம் அலைய நேரிட்டிருக்கின்றது. கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடு குளத்தின் கீழ் மூவாயிரம் ஏக்கர் நெற்செய்கை இதுவரையில் நீரின்றி கருகியிருப்பதாக விவசாயிகள் தெரிவித்திருக்கின்றனர். இதனை அதிகாரிகளும் உறுதி செய்துள்ளனர்.

சிறுபோக நெற்செய்கைக்கு இம்முறை சீரான நீர்விநியோகம் செய்யப்படவில்லை என்றும் இதுவே இந்தப் பாதிப்புக்குக் காரணம் என்றும் விவசாயிகள் குறிப்பிடுகின்றனர். அத்துடன் இரணைமடு குளத்தில் இருந்த நீரின் அளவுக்கு ஏற்ப நெற்செய்கைக்கான பரப்பளவை அதிகாரிகள் தீர்மானிக்காததும் பயிரழிவுக்கு முக்கிய காரணம் என அந்த விவசாயிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இது குறித்து கருத்து வெளியிட்ட கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன பிரதி பணிப்பாளர் பொறியியலாளர் நவரட்ணம் சுதாகரன், இரணைமடு குளத்தில் 29 அடி நீர் இருந்தபோது அதற்கேற்ற வகையில் 8000 ஏக்கர் பரப்பளவில் சிறுபோகம் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது என தெரிவித்தார்.

# மின்சார சபை தொழிற்சங்கங்கள் மீண்டும் பகிஷ்கரிப்பில் குதிக்க திட்டம்

## 10ஆம் திகதி போராட்டம் ஆரம்பம் என அறிவிப்பு

இலங்கை மின்சார சபையினர் ஒன்றிணைந்த தொழிற்சங்கச் சம்மேளனம் எதிர்வரும் 10ஆம் திகதியில் இருந்து பூரண பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளது.

இலங்கை மின்சார சபையின் அனைத்து தொழிற்சங்கங்களும் இந்த பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளதாக சம்மேளனத்தின் செயற்குழு உறுப்பினர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்தார்.

கடந்த ஜூலை 6ஆம் திகதி பகல் 12 மணிக்கு ஆரம்பமான பணிப்பகிஷ்கரிப்பு நிர்வாக அதிகாரிகளுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கம் இதுவரை நிறைவேற்றப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதனால் மீண்டும் பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொள்ளத் தீர்மானித்ததாக அவர் குறிப்பிட்டார்.

இலங்கை மின்சார சபை ஊழியர்கள் அடக்குமுறைக்கும் பழிவாங்குதலுக்கும் உட்படுத்தப்படுவதாக ரஞ்சன் ஜயலால் தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் இந்தியாவின் வாகன உற்பத்தி, மருந்தாக்கல் தொழிற்சாலைகள்

இலங்கையில் இந்தியாவின் முதலீட்டு நடவடிக்கைகளை அதிகரிக்கும் திட்டத்தின் ஓர் அங்கமாக இரண்டு பொருளாதார வலயங்களை இங்கு நிர்மாணிக்கவுள்ளது. அத்துடன் இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக நடவடிக்கைகளை இரட்டிப்பு மடங்காக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இலங்கையில் இந்தியாவின் முதலீட்டு நடவடிக்கைகளை அதிகரிக்கும் நோக்கில் அமைக்கப்படவுள்ள இருதரப்பு செயலனிக் குழுவுக்கு இந்தியா ஏழு உறுப்பினர்களைச் சிபார்சு செய்துள்ளது. மூன்று மாதங்களுக்குள் இந்தியாவின் விசேட முதலீட்டுத் திட்டங்களை இனம் காணுவதற்காகவே இந்த செயலணிக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்திய அமைச்சர் இலங்கையை விட்டுப் புறப்படுவதற்கு முன்னர் நேற்று முன்தினம் இந்தியத் தரப்புப் பிரதி நிதிகள் ஏழு பேரின் பெயரையும் வெளியிட்டார்.

## இன்றைய இராசி பலன் (08.08.2012)

**நந்தன வருடம் ஆடித் திங்கள் 24 ஆம் நாள்**
**புதன்கிழமை**

**நட்சத்திரம்** : அச்சுவினி பின்னிரவு 6.01 வரை
**திதி** : சஷ்டி காலை 10.52 வரை அதன் பின் ஸப்தமி
**சுபநேரம்** : 4.34 - 6.04 **இராகுகாலம்** : 12.04 - 1.34
(இந்த நேரங்கள் இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்)

**மேடம்** : குடும்ப சுகம், அந்நியர் வருகை, திருமணப் பேச்சு
**இடபம்** : பொருள்வரவு மத்திமம், எதிர்பாராத பிரயாணம், தூக்கமின்மை
**மிதுனம்** : காரிய சித்தி, தேக ஆரோக்கியம், மூத்தோர் உதவி
**கடகம்** : மனச்சஞ்சலம், வாக்கு கலகம், வயிற்றுரோகம்
**சிங்கம்** : தொழில் முன்னேற்றம், விவாக முயற்சி, நண்பர் உதவி
**கன்னி** : வழக்கு விவகாரம், பிரயாண சஞ்சலம், உறவினர் துன்பம்
**துலாம்** : பொருள் விரயம், நண்பர்களால் பிரச்சினை, மனைவி வழியால் செலவு
**விருச்சிகம்** : குடும்பச் சிறப்பு, வாகன நன்மை, மனக்குறை
**தனுசு** : காரிய சித்தி, பணவரவு, அயலவர் உதவி
**மகரம்** : தொழில்நன்மை, மனச்சந்தோசம், நற்காரிய செலவு
**கும்பம்** : தேகநலம் பாதிப்பு, பிரயாணத்தில் கவனம், எதிர்பாராத செய்தி
**மீனம்** : குடும்ப மகிழ்ச்சி, உறவினர் வருகை, போசன சுகம்

- **ஜோதிடர் பால.இரத்தினசேகர்**

# மூன்று மாகாணங்களிலும் பாரதூரமான தேர்தல் வன்செயல்கள் எதுவும் இதுவரை இல்லை



தேர்தல்கள் நடைபெறவுள்ள மூன்று மாகாணங்களிலும் இது வரை பாரதூரமான வன்முறைகள் எதுவும் இடம்பெறவில்லையென்று தேர்தல் ஆணையாளர் குறிப்பிட டார்.

தேர்தலை நீதியாகவும், சுதந்தி ரமாகவும் நடத்துவதற்கு ஏதுவாக அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களில் விசேட முறைப்பாட்டு பிரிவுகளை தேர்தல்கள் ஆணையாளர் அமைக் கவுள்ளார்.

நடைபெறவிருக்கும் மூன்று மாகாண சபைகளுக்கான தேர் தல்கள் குறித்து ஒழுக்கக கோவை தயாரிக்கப்பட்டு வருவதாகவும், இது விரைவில் கட் சிகள், வேட் பாளர்கள் மற்றும் ஊடகங்களுக்கு வெளியிடப்படும் எனவும், கட்சிச் செயலாளர்கள் சந்திப்பில் தேர் தல்கள் ஆணையாளர் கூறியி ருந்தார்.

தேர்தல்கள் நடைபெறும் பகுதி களுக்குச் தனித்தனியாக விசேட குழுக்களை அனுப்பி அங்குள்ள நிலைவரங்கள் குறித்து அறிந்து கொண்டதாகவும், தற்போது அங் குள்ள அமைதியான நிலை மைக்கு அமைய வெளி நாட்டுக் கண்காணிப் பாளர்களுக்கான அவசி யம் இல்லையென்றும் தேர்தல்கள் ஆணையாளர் இச் சந்திப்பில் குறிப்பிட்டதாகவும் ரோஹன ஹெட்டியாராச்சி தெரி வித்தார்.

எனினும், தேர்தல் நிலைமை-கள் மோசமடையும் பட்சத்தில், வெளிநாட்டு தேர்தல் கண்காணிப் பாளர்களை நாட்டுக்கு வரவ ழைப்பது பற்றி ஆராயப்படும் என் றும் தேர்தல்கள் ஆணையாளர் கட்சிச் செயலாளர்களுடான சந் திப்பில் கூறியிருந்தார்.

இதேவேளை, மூன்று மாகாண சபைத் தேர்தல்களிலும் வாக்க ளிப்பதற்குத் தகுதி பெற்று ஆள டையாளங்களை உறுதிப்படுத்த எந்தவிதமான அடையாள அட் டைகளும் இல்லாதவர்கள் தற்கா லிக அடையாள அட்டையை விரை வில் பெற்றுக்கொள்ள வேண்டும். இம்மாதம் 20ஆம் திகதிக்கு முன் னர் தற்காலிக அடையாள அட் டைக்கு விண்ணப்பிக்க வேண்டும் என்றும் பவ்ரல் அமைப்பின் நிறை வேற்றுப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

# நவநீதம்பிள்ளையைப் பதவி விலகுமாறு அமெரிக்கா வற்புறுத்தல்



ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் ஆணையாளர் நவ நீதம்பிள்ளையை பதவி விலகு மாறு அமெரிக்கா கோரியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனும், அமெரிக்காவும் நவநீதம் பிள்ளையை பதவி விலகுமாறு கோரியதாக இன்னர் சிட்டி பிரஸ் ஊடகம் தெரிவித்துள்ளது. எனி னும், இதனை நவநீதம பிள்ளை மறுத்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பில் வேறு உயர் பதவி ஒன்றை வழங்கு வதாகத் தெரிவித்து, இவ்வாறு பதவி விலகுமாறு கோரிக்கை விடுக் கப்பட்டதாகத் தெரிவிக்கப்படு கிறது.

# காற்று மின் உற்பத்தி தேசிய மின் கட்டமைப்புடன் இணைகிறது

காற்று சக்தி மின் உற்பத்தி நிலையங்களில் மூன்றில் உற் பத்தி செய்யப்படும் 30 மெகா வாட் திறன், எதிர்வரும் 9ஆம் திகதி வியாழக்கிழமை, தேசிய மின் கட்ட மைப்புக்கு இணைத்துக் கொள் ளப்படும் என மின்வலு, எரி சக்தி அமைச்சு அறிவித்துள்ளது.

7200 ரூபா மதிப்பீட்டில் இந்த தேசிய முதலீடு நிர்மாணம் செய் யப்பட்டுள்ளது.

இந்த காற்று சக்தி மின் உற்பத் திக்கான தொழில் நுட்பத்தையும், மனித வளத்தையும் தேசிய பொ-றியியலாளர்களே முழுமையாக வழங்கியுள்ளனர்.

# புதிய கட்சி ஆரம்பித்தார் முன்னாள் எம்.பி. தங்கேஸ்வரி



தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பி னரான தங்கேஸ்வரி கதிராமன், கிழக்கு தமிழ் மக்களின் அடை யாளத்தை ஊக்குவிப்பதற்காக புதிய கட்சியொன்றை உருவாக் கியுள்ளார்.

தமிழ் மக்களின் சுதந்திரக் கட்சி என இக்கட்சிக்கு பெயரிடப்பட்டுள் ளது. தேர்தல் திணைக்களத்தில் பல தமிழ் கட்சிகள் பதிவுசெய் யப்பட்டுள்ள போதிலும் அவற் றில் எதுவும் கிழக்கு மக்களின் சமூக, கலாசார, மொழி அடையா ளங்களுக்காக செயற்படவில்லை என அவர் கூறினார்.

"கிழக்கு தமிழ் மக்களுக்காக ஒரு கட்சி வேண்டும். கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் சுயேட்சைக்குழு வாக எமது வேட்பாளர்களை கள மிறக்கியுள் ளோம். அரசாங்கத்துடன் ஒத்து ழைத்து, மக்களுக்கு சேவை யாற்ற நாம் விரும்புகிறோம்" என அவர் தெரிவித்தார். தமிழ் மக்களை தமிழ் தேசியக்கூட்டமைப்பு ஏமாற்றி யுள்ளது எனவும் அவர் கூறினார்.

# முதியோருக்கான மாதாந்த உதவிப்பணம்

சமூக சேவை அமைப்பின் மூலம் முதியோருக்கு வழங்கப்ப டும் மாதாந்த உதவிப் பணம் 1000 ரூபாவை பெற்றுக்கொள்ளு மாறு பிரதேசசெயலகம் கேட்டுக கொண்டுள்ளது.

இதுவரையில் தம்மைப் பதிவு செய்து கொள்ளாத 70 வயதிற்கு மேற்பட்டவர்கள், தமது கிராம அலுவலர்கள் ஊடாக பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள் ளப்படுகின்றனர்.

பதிவிற்காக முதியோர் அடை யாள அட்டை, தேசிய அடை யாள அட்டை, குடும்ப அட்டை ஆகிய வற்றை கிராம அலுவலர் களிடம் எடுத்துச் செல்ல வேண் டும்.



நல்லூர் வடக்கு சமுர்த்தி செயலணி நடாத்திய பொது அறிவுப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவனுக்கு நல்லூர் பிரதேச செயலர் பி.செந்தில்நந்தனன் பரிசில் வழங்குவதனைப் படத்தில் காணலாம்.

(உடுவில் [illegible]ர்)



# கழுகுக் கண்கள்

நாட்டின் சில அரசியல்வாதிகள் புரிந்துவரும் குற்றச் செயல்களை ஆகாயத்தில் பறந்து கொண்டிருக்கும் போது அவதானித்த எனக்கு முழு நேர அரசியலில் ஈடுபடுபவர்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் நேர்மையாக நடந்து கொள்ளக்கூடிய வகையில் அவர்களுக்கென ஓர் ஒழுக்க நெறியை ஏற்படுத்துவதன் அவசியம் இன்று எங்கள் நாட்டில் ஏற்பட்டுள்ளது என்று உணர்ந்து கொண்டேன்.

நான் சிறு பிள்ளையாக இருந்த போது எனது பெற்றோர் கூறிய சில தகவல்கள் எனக்கு இன்றும் ஞாபகத்தில் இருக்கின்றது. அவர்கள் டி.எஸ்.சேனநாயக்க, எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரந-ாயக்க, டட்லி சேனநாயக்க, டி.ஏ.ராஜபக்ஷ, எம்.டி.பண்டா போன்ற அரசில் தலைவர்கள் அப்பழுக்கற்ற ஒழுக்க சீலர்களாகவும், நேர்மையான-வர்களாகவும் இந்நாட்டு மக்களுக்கு முன்மாதிரியாக இருந்தார்கள். இவர்களின் வழியில் இன்றைய ஜனாதிபதி அவர்களும் தனது 42 ஆண்டு அரசியல் வாழ்க்கையில் பல்வேறு துன்பங்களை அனுபவித்ததுடன் செய்யாத குற்றத்திற்காக சிறை-றயில் அடைக்கப்பட்டிருந்தார் என்று எனது தந்தை ஒரு தடவை கூறினார்.

கடந்த ஓரிரு வருடங்களாக எங்கள் நாட்டின் சில அரச-ியல்வாதிகள் தாங்கள் மக்களின் பிரதிநிதிகள் என்பதை மறந்து, சட்டத்தை கையில் எடுத்து பல்வேறு குற்றச் செயல்களை புரிந்து வருவது பாராளுமன்ற ஜனநாயக உரிமையின் மீது நம்பிக்கை கொண்டுள்ள மக்களின் உள்ளங்களை வேதனைக்குட்படுத்தி வருகின்றது.

சில தினங்களுக்கு முன்னர் மத்திய மாகாணசபையின் சுகாதார அமைச்சர் கண்டியில் அரசாங்க வைத்திய அதிகாரி ஒருவரை அடித்து துன்புறுத்தியும் இன்னுமொரு பெண் அதிகாரியை தகாத வார்த்தைகளினால் ஏசியும் சட்டவிரோதமாக நடந்து கொண்டமைக்காக பொலிஸார் சம்பந்தப்பட்ட அமைச்சரை கைது செய்துள்ளனர்.

இப்படியான செய்திகளை கேட்கும் சட்டத்தையும் ஒழுங்கையும் மதித்து நடக்கும் இந்நாட்டு மக்கள், பொதுவாக அரசியல்வாதிகள் மீது நம்பிக்கை இழந்து அவர்கள் மீது வெறுப்புணர்வை அடைவதற்கு ஏதுவாக அமைகின்றன.

சில அரசியல்வாதிகள் கொலை, கொள்ளை மற்றும் சிறுபிள்ளைகளை பாலியல் ரீதியில் துஷ்பிரயோகம் செய்த சம்பவங்களிலும் குற்றவாளிக-ளாக காணப்பட்டு கைதாகி விளக் கமறியலிலும் வைக்கப்பட்டுள்ளார். இது போன்று கடந்த வெள்ளிக்கிழமை பதுளை பிரதேச சபையின் அங்கத்தவர் ஒருவர் தேசிய நீர்விநியோக வடிகால் அமைப்பு சபையின் அதிகாரி ஒருவரை தாக்கியுள்ளார். இப்போது அந்த அதிகாரி ஆஸ்பத்திரிய-ில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இத்தகைய குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் அமைச்சர்களாகவும், பிரதி அமைச்சர்களாகவும், பாராளுமன்ற உறுப்பினர்களாகவும், மாகாணசபை உறுப்பினர்களாகவும், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களாகவும் இருப்பது மிகவும் வேதனையை அளிக்கிறது. அரசாங்க கட்சியை சேர்ந்தவர்கள் மட்டுமன்றி ஐக்கிய தேசிய கட்சியை சேர்ந்தவர்களும், ஏனைய அரசியல் கட்சியை சேர்ந்தவர்களும் இத்தகைய குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருவதாக பொலிஸார் அறிவிக்கின்றனர்.

கடந்த 12 மாதங்களில் மாத்திரம் இத்தகைய குற்றச் செயல்களில் ஈடுபட்ட 40 அரசியல்வாதிகளை கைதுசெய்துள்ள பொலிஸார், அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இந்தியா போன்ற உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாட்டிலும் இவ்விதம் அரசி யல்வாதிகள் சட்டத்தை கையில் ஏந்தி, ஆட்கடத்தல், கொள்ளை, கொலை, பெண்களை மானபங்கப்படுத்தல் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடுவதுண்டு.

ஆயினும் இந்தியாவில் அரசியல்வாதிகள் இவ்விதம் குற்றச் செயல்களில் ஈடுபடும் போது அவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அவசியமாயின் அவர்களை அரசாங்கத்தில் வகிக்கும் அமைச்சர், பிரதி அமைச்சர் பதவிகளில் இருந்து நீக்கி விடுவதற்கும் இந்திய ஆட்சியாளர்கள் தயங்குவதில்லை.

பின்னர் இத்தகைய குற்றம் புரிந்த அரசியல்வரிகளுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படுகின்றது.

திராவிட முன்னேற்ற கழகத்தைச் சேர்ந்த இந்திய மத்திய அரசாங்கத்தின் அமைச்சர் ராஜா, ஸ்பெக்ரம் மோசடியில் சம்பந்தப்பட்டார் என்பதற்காக அவரை இராஜினாமா செய்ய வைத்த இந்திய அரசாங்கம், அவரை கைது செய்து விளக்கமறியலிலும் வைத்தது.

எங்கள் நாட்டின் பொதுமக்களுக்கு மன நிறைவை ஏற்படுத்த வேண்டுமானால் குற்றச் செயல்களில் ஈடுபடும் அனைத்து அரசியல்வாதிகளையும் தண்டிக்க வேண்டும். அவர்கள் செய்யும் குற்றங்கள் பற்றிய தகவல்களை நான் துப்பறிந்து பொலிஸாரிடம் கொடுத்து இந்த மனிதர்களை சட்டப்படி தண்டிப்பேன் என்ற உறுதிமொழியை எடுத்துக் கொண்டு நான் என் கூட்டுக்கு பறந்து சென்றேன்.

# நியமனக் கடிதங்களில் குறித்தபடி பணிக்கு செல்லாத ஆசிரியர்களுக்கு சம்பளம் இல்லை

## ஜனாதிபதி அறிவிப்பு

நியமன கடிதங்களில் குறிக்கப்பட்டபடி பாடசாலைகளுக்கு கடமைக்கு சமூகம் தரும் ஆசிரியர்களின் சம்பளம் வழங்கப்பட மாட்டாது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

தேசிய மற்றும் மாகாண சபைகளுக்கிடையில் ஆசிரியர்கள் முறையாகப் பகிரப்பட்டு ஆசிரியர் பற்றாக்குறை பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப்பட வேண்டுமென வலியுறுத்திய ஜனாதிபதி இச்செயற்பாட்டுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

ஆசிரியர்கள் பற்றாக்குறை பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் அரசாங்கம் புதிய ஆசிரியர் நியமனங்களை பாடசாலைகளில் பெயர் குறித்து வழங்குகிறது. அரசியல்வாதிகளின் செல்வாக்குகளை உபயோகித்து சில ஆசிரியர்களிள் இதனை மீறி செயற்படுகின்றனர். உரிய பாடசாலைகளுக்குக் கடமைக்குச் செல்லத்தவறும் ஆசிரியர்கள் விடயத்தில் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பதுளை மாவட்ட விசேட அபிவிருத்தி கூட்டத் நேற்று முன்தினம் ஊவா மாகாண சபை கேட்போர் கூடத் தில் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது ஊவா மாகாணத்தின் பல பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக் குறை தொடர்பில் ஜனாதிபதியின் கவனதத்துக்குக் கொண்டுவரப்பட் டது. இதற்குப் பதிலளித்தபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர்கள் பசில் ராஜபக்ஷ, நிமல் சிறிபால டி சில்வா, அநுர பிரியதர்ஷன யாப்பா, மஹிந்த சமரசிங்க உட்பட அமைச்சர்கள், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தலைமையிலான மகாண அமைச்சர்கள், அரச அதிகாரிகள், அரச அதிகா ரிகள் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

### ஊழியர் சேம இலாப நிதிய விவகாரம்:

# விசாரணை செய்ய பாராளுமன்ற தெரிவுக்குழு அமைக்க வேண்டும்

ஊழியர் சேமலாப நிதியை பங்குச்சந்தையில் முதலீடு செய்ததில் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படும் மோசடிகள் குறித்து விசாரணை நடத்த பாராளுமன்றத் தெரிவுக்குழுவொன்று அமைக்கப்பட வேண்டும் என சுதந்திர வர்த்தக வலய மற்றும் பொது சேவைச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அப்பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் கண்காணிப்பாளர்களாக தொழிற் சங்கத் தலைவர்களை நியமிக்கும்படியும் கோரிக்கை அரசாங்கம் ஜனாதிபதியிடம் விடுத்துள்ளதாக சங்கத்தின் செயலாளர் அன்டன் மாகஸ் தெரிவித்துள்ளார்.

2011ஆம் ஆண்டில் மாத்திரம் ஊழியர் சேமலாப நிதி பங்குச் சந்தையில் முதலீடு செய்யப்பட்டு 16 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதன் காரணம் காட்டியே ஊழியர் சேமலாப விவகாரத்தில் பாராளுமன்றத் தெரிவுக் குழு அவசியம் என அச் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

ஊழியர் சேமலாப நிதியினை பங்குச் சந்தைகளில் அரசாங்கம் முதலீடு செய்ததாகவும், இதில் பல்வேறு மோசடிகள், குளறுபடிகள் இடம்பெற்றிருப்பதாகவும் குற்றம் சாட்டிய எதிர்க்கட்சிகளும், தொழிற்சங்கங்களும் இது அப்பாவி ஊழியர்களை பாதிப்புக்கும், ஏமாற்றத்துக்கும் உள்ளாக் கியிருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளன

# பரீட்சை முடிவுகளின் பின்னரே இசற் புள்ளி

இப்போது நடைபெற்று வரும் ஜீ.சீ.ஈ உயர்தரப் பரீட்சைகளின் முடிவுகள் வெளியிடப்பட்ட பின்னரே இசற் புள்ளிகளைப் புறம்பாக வெளியிடும் சாத்தியம் பற்றி அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது. இந்த முறைமையை அமுல்படுத்துவதன் மூலம், பரீட்சை முடிவுகள் வெளிவரும்போது ஏற்படக் கூடிய நெருக்கடிகளைச் சமாளிக்க முடியுமென நம்பப்படுகிறது. ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்காவுடன் கல்வியமைச்சு அதிகாரிகள் நடத்திய பேச்சுவார்த்தையின்போது இந்த முடிவுகள் எடுக்கப்பட்டன.

இதற்கிடையில் உயர்தரப் பரீட்சை தொடர்பான புதிய இசற் புள்ளி வெளியிடப்பட்ட பின்னர் ஏற்பட்டுள்ள தற்போதைய சர்ச்சை தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண சட்ட மா அதிபர் திணைக்களம் முயற்சிகளை மேற்கொள்ளுமென்று சட்ட மா அதிபர் பாலித பெர்னாண்டோ தெரிவித்தார்.

# பரீட்சைக்குச் செல்லவேண்டிய மாணவன் படுக்கையில் மரணம்

கா.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு நேற்றுச் சமூகமளிக்க வேண்டிய மாணவன் நித்திரையிலேயே உயிரிழந்த சம்பவமொன்று சம்மாந்துறையில் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவம் சம்மாந்துறை முழுவதும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

சம்மாந்துறை சென்னெல் சாஹிராவில் கல்வி கற்ற முகம்மட் இஸ்மாயில் ஆசிக் (19) எனும் மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கருவாட்டுக்கல் கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த இம் மாணவன் மாலை நேன்பு துறந்ததும் உணவருந்திவிட்டு தூங்கிச்சென்றுள்ளார். மறுநாள் அதிகாலை நோன்பு பிடிப்பதற்காக இம் மாணவனை எழுப்பிய போதே இம் மரணச் சம்பவம் பற்றி தெரியவந்துள்ளது.

மரண விசாரணைகள் பொலிஸ் புலனாய்வு பெறுப்பதிகாரி அமரசிறி, பொலிஸ் பரிசோதகர் காதர் ஆகியோரின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டன.

பிரேத பரிசோதனை மேற்கொண்ட வைத்தியர்கள் உணவு ஒவ்வாமை காரணமாகவே இம்மரணம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

# எரிபொருள் பவுசர் பள்ளத்தில் பாய்ந்து விபத்து

எரிபொருள் கொள்கலன் ஒன்று 15 அடி ஆழமான பள்ளத்தில் நேற்று முன்தினம் திங்கிழமை இரவு வீழ்ந்துள்ளதாகவும் இதனால் கசிந்துவரும் எண்ணெய் மஹாவலி ஆற்றில் கலந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு, முத்துராஜவலையிலிருந்து கொட்டகலைக்கு 33,000 லீற்றர் டீசலை ஏற்றிவந்த இந்தக் கொள்கலன் பள்ளத்தில் வீழ்ந்ததன் காரணமாக சுமார் 15,000 லீற்றர் டீசல் கசிந்துள்ளன.

# வணிகநாதம் நூல் வெளியீடு

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் கலை, வர்த்தக மாணவர் மன்றத்தினால் வருடந்தம் வெளியிடப்பட்டு வருகின்ற வணிக நாதம் 12 ஆவது இதழின் வெளியீட்டு விழா கலை, வர்த்தக மாணவர் மன்றத் தலைவர் ஜெ.நிதர்சன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு வரவேற்புரையை சி.துளசியும், ஆசியுரையை செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகனும் நிகழ்தினார்.

பிரதம விருந்தினராக பேராசிரியராக க.தேவராசா கலந்துகொண்டார்.

# பல்கலை விரிவுரையாளர் விவகாரம் இனியும் காலம் தாழ்த்தக் கூடாது

## கலாநிதி மஹிம் மெண்டிஸ்

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பிரச்சினையை தீர்க்க மேலும் பேச்சுவார்த்தைகளை நடத்தி காலம் கடத்த வேண்டிய அவசியம் இல்லை என பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது.

கல்வித் துறையில் காணப்படும் பிரச்சினைகளைத் தீர்க்க பல தடவைகள் உரிய யோசனைகளை முன்வைத்துள்ளதாக சம்மேளனத்தின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி மஹிம் மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

தேசிய வருமானத்தில் கல்விக்காக 6 வீதம் ஒதுக்குதல், விரிவுரையாளர்களின் சம்பள உயர்வு உள்ளிட்ட பல பிரச்சினைகள் குறித்து கடந்த மூன்று வருடங்களாக அரசாங்கத்திடம் கோரிக்கை முன்வைத்து வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தமது கோரிக்கைகளை வலியுறுத்தி ஜூலை 4அம் திகதி தொடக்கம் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருவதால் நாட்டின் அனேகமான பல்கலைக்கழகங்களுடைய அன்றா நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

# தாதிய பயிற்சிக்கு சமூகமளிக்காத காரணத்தை தெரிவிக்குமாறு உத்தரவு

பயிற்சி பெறுவதற்கு நியமனம் கிடைக்கப்பெற்றும் தாதிய பயிற்சிக் கல்லூரியில் பயிற்சிக்கு சமுகமளிக்காத 60 பேரையும் சமுகமளிக்காத காரணத்தினை விரைவில் தெரியப்படுத்துமாறு யாழ்.தாதிய கல்லூரி அதிபர் ரஜிலாதேவி அறிவித்துள்ளார்.

216 பேர் தாதிய பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்டு சுகாதார அமைச்சினால் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

தாதிய பயிற்சிக்கு 5 வீதமானவர்களே ஆண்கள் தெரிவு செய்யப்படும் நிலையில் 29 பேர் தாதிய பயிற்சிக்கு நியமிக்கப்பட்டனர். அதில் 10 பேர் தாதிய பயிற்சி கல்லூரியில் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

பதிவுகளை மேற்கொள்ளாத 19 ஆண்களும், 41 பெண்களும் வேறு வேலை பார்க்கின்றார்கள் என்பது பற்றியும் தெரியப்படுத்தப்படாத காரணத்தினால் இது குறித்து உடனடியாக தாதிய பயிற்சிக் கல்லூரி அதிபருக்கு தெரியப்படுத்துமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 56 பேருக்கு நியமனக் கடிதங்கள் கிடைத்த போது 44 பேர் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர். 12 பேர் பதிவுகளை மேற்கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நல்லூரில் நகை திருடிய குற்றச்சாட்டு: ஏழு பேருக்கு விளக்கமறியல் நீடிப்பு

நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவத்தில் பக்தர்களின் 14 பவுண் தங்க நகைகளை திருடிய குற்றச்சாட்டிடு சுமத்தப்பட்டுள்ள 7 பேருக்கு மேலும் 14 நாட்கள் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 25ஆம் திகதி நல்லூர் ஆலயத்தில் நகைகளை திருட்டு கொடுத்தவர்கள் யாழ். பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டினை பதிவு செய்ததற்கு இணங்க, கடந்த மாதம் 26ஆம் திகதி புத்தளத்தினை சேர்ந்த 4 பெண்கள் உட்பட 3 ஆண்கள் யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

மேற்படி வழக்கு நேற்று யாழ். நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராஜா எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# வத்தேகம மேயர் கைது

வத்தேகம மாநகர சபை மேயர் வத்தேகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பழ விற்பனை நிலைய உரிமையாளர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பிலே இவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# நாம் தனித்து போட்டியிட்டால் ஐ.தே.க. தமிழர்களுக்கு மனோ நோய் பிடிக்கும்

## மனோ கணேசன்

நமது கட்சி ஐ.த.க.வுடன் கூட்டு சேராமல் தனித்து அல்லது வேறு கட்சிகளுடன் கூட்டு சேர்ந்து தேர்தல்களில் போட்டியிட்டால் ஐக்கிய தேசிய கட்சியில் உள்ள சில தமிழ் உறுப்பினர்களுக்கு காய்ச்சல் பிடிக்கும். இந்த காய்ச்சலுக்கு ஒரு விதமான மனோ வியாதிதான் காரணம். இந்த மனோ வியாதிய-ின் பெயர், மனோ கணேசன் வியாதி ஆகும். ஆனாலும் அதற்கு மனோ வைத்தியர்தான் மருந்து கொடுக்க முடியும். இந்த மனோ கணேசனால் ஒன்றும் செய்ய முடியாது என்று ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் மத்திய மாகாண சபை உறுப்பினருமான முரளி ரகுநாதன் தலைமையில், கொழும்பு பாமன்கடை பணிமனையில் நடைபெற்ற ஜ.தொ.கா செயற்குழு கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே மனோ கணேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஐக்கிய தேசிய கட்சி விதிக்கும் நிபந்தனைகளுக்கு இணங்கி அவர்களுடன் சேர்ந்து நாம் தேர்தல்களில் போட்டியிட்டால் சரி, இல்லாவிட்டால் நாம் தமிழ் வாக்குகளை உடைக்கின்றோம், அரசாங்கத்துடன் கள்ளத்தொடர்பு வைத்துள்ளோம் என்றெல்லாம் வாய்க்கூசாமல் பதுளையிலிருந்தும், கொழும்பிலிருந்தும், நுவரே லியாவிலிருந்தும் கூச்சல் எழுப்புவது இவர்களது வாடிக்கை.

இந்நாட்டில், அதிலும் குறிப்பாக தென்னிலங்கையில் வாழுகின்ற அனைத்து தமிழ் மக்களின் வாக்குகளும் ஐக்கிய தேசிய கட்சிக்கு எழுதி பட்டா போட்டு கொடுத்து விட்டதைப் போல்தான் இந்த ஐக்கிய தேசிய கட்சிகாரர்கள் நினைக்கிறார்கள். இவர்கள் கண்ணை திறந்து பார்க்கவும், காது கொடுத்து கேட்கவும், அறிவை பயன்படுத்தி சிந்திக்கவும் கற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ்நாதம்
Thamil Naatham
ஆகஸ்ட் மாதம் 08ஆம் திகதி புதன்கிழமை

## இலங்கை - இந்திய பொருளாதார ஒத்துழைப்பு: பரஸ்பரம் உதவ வேண்டும்

இந்திய அமைச்சர் ஆனந் சர்மாவின் அண்மைய இலங்கை விஜயம், இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பு நடவடிக்கைகளுக்கு ஓர் ஊக்கியாக அமையுமெனப் பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது. இரு நாடுகளுக்கிடையிலான 'செபா' உடன்படிக்கை செயலிழந்துபோன ஒன்றாகவே பெரும்பாலும் கருதப்பட்டது. 'பரந்த பொருளாதாரப் பங்குடமை ஒப்பந்தம்' என்ற விரிவான பதப் பிரயோகத்தின் சுருக்கமே 'செபா' ஆகும். இதுகாலவரை இரு நாடுகளுக்குமிடையில் முன்னெடுக்கப்பட்ட பொருளாதார மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை வைத்துப் பார்க்கையில், அது இந்தியாவுக்கே கூடுதலான அனுகூலத்தைத் தந்திருந்தது. அதற்காக இந்தியா மீது சேறு பூசுவது எமது நோக்கமல்ல.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றிய இந்திய அமைச்சர் ஆனந் சர்மா கீழ்க்கண்டவாறு கூறினார்.

"இந்தியா எந்தவித பிரதிபலனையும் எதிர்பாராது. இலங்கைக்கு விசேட முன்னுரிமை கொடுக்கக்கூடியதான சமச்சீரற்ற கொள்கையைக் கடைப்பிடிக்க நாம் கடமைப்பட்டுள்ளோம். இதனை நான் மிகத் தெளிவாகவே கூறுகிறேன். இந்தச் சந்தர்ப்பத்தைப் பற்றிப் பிடித்து, மேலும் அதனை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய பொறுப்பு இலங்கை - இந்திய வர்த்தகத் துறையைச் சார்ந்ததாகும்."

அற்புதமான வசனங்கள். இலங்கை வர்த்தகத் துறையினர் ஆரவாரித்து வரவேற்க வேண்டிய ஒரு விடயம் இது. ஆனால் இது காலவரை சமச்சீரான பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகள் எமது இரு நாடுகளுக்கிடையில் இல்லை என்றே கூற வேண்டும். இந்தியப் பொருட்களுக்கான ஒரு வர்த்தகச் சந்தையே இலங்கை, அல்லது இந்தியாவுக்கே கூடுதல் வாய்ப்புகள் உள்ளன என்ற முணுமுணுப்புகள் எமது நாட்டில் கேட்ட வண்ணமே இருந்திருக்கின்றன.

இலங்கையில் விசேட பொருளாதார உற்பத்தி வலயங்களை ஏற்படுத்த இந்தியா திட்டமிட்டுள்ளது என்ற செய்தி இனிப்பானதுதான். மருந்து உற்பத்தித் தொழில்துறை மற்றும் வாகன உதிரிப்பாக உற்பத்தித் தொழில்களை இலங்கையில் இந்தியா ஆரம்பிக்க உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்திய முதலீடுகள், இலங்கை வாழ் மக்களுக்குத் தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதாக அமையும். அத்துடன் பொருளாதார சுபீட்சத்துக்கும் உதவக்கூடும்.

இரு நாடுகளுக்குமிடையிலான பொருளாதார ஒத்துழைப்பை ஊக்குவிக்க இருதரப்புக் கூட்டுச் செயலணிக் குழுவொன்றின் உருவாக்கம் பற்றிக் கடந்த வாரம் இந்தியா அறிவித்திருந்தது. அந்தச் செயலணிக் குழுவில் அங்கம் வகிப்பவர்களின் பெயர்களையும் இந்தியா வெளியிட்டுள்ளது. இந்த அறிவிப்பு வெளிவந்து 24 மணித்தியாலங்கள் கழிவதற்கிடையில் மற்றொரு நல்ல செய்தியையும் இந்தியா தெரிவித்திருக்கிறது. அதாவது விசேட இந்தியத் தூதுகோஷ்டியொன்று எதிர்வரும் 14ஆம் திகதி இலங்கை வரவிருக்கிறது. இந்தியா இலங்கையில் நிறுவவுள்ள இரண்டு புதிய ஏற்றுமதி வலயங்களில் ஒன்றான மருந்துப் பொருள் உற்பத்தி பற்றிய ஆரம்ப முயற்சிகளை மேற்கொள்வதற்காகவே இந்தக் குழு இலங்கை வருகிறது. புடவைத் தொழில்துறையோடு சம்பந்தப்பட்ட தூதுகோஷ்டியொன்றும் அடுத்த மாதம் இலங்கை வரவிருக்கிறது.

இரு நாடுகளுக்குமிடையிலான பொருளாதார ஒத்துழைப்பு என்பது பரஸ்பரம் இரு தரப்புக்கும் நன்மை பயக்கக் கூடியதாக அமைய வேண்டும். இந்தியாவின் வர்த்தகச் சந்தையாக மட்டும் இலங்கை இருக்கக்கூடாது.

1977இல் ஆட்சிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் அரசாங்கம் கட்டுப்பாடற்ற திறந்த பொருளாதாரத்தைக் கட்டவிழ்த்து விட்டது. இதன் விளைவாக இந்திய உற்பத்திப் பொருட்களான பம்பாய் வெங்காயம், உருளைக்கிழங்கு போன்றவை கூட எமது உள்நாட்டுச் சந்தைகளை ஆக்கிரமித்துக் கொண்டன. இதனால் எமது உள்ளூர் விவசாயிகளின் சந்தை வாய்ப்புகள் பறிபோயின. விவசாயிகள் கஷ்டங்களை எதிர்நோக்கினார்கள்.

மறுமுனையில் சிறிமாவோ அம்மையாரின் ஆட்சிக் காலத்தில், மூடப்பட்ட பொருளாதார நிலைமைகளே நிலவின. பாணுக்குக் கூடக் கியூவில் நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. கட்டுப்பாடற்ற திறந்த பொருளாதாரம், கடுமையான மூடப்பட்ட பொருளாதாரம் இரண்டுமே நாட்டுக்குத் தீமையானவை.

இந்தியா எமது அண்டை நாடு. நீண்ட கால வரலாற்றுத் தொடர்புகளும் எம்மிரு நாடுகளுக்குமிடையில் உண்டு. இரு நாடுகளுக்கும் பரஸ்பரம் நன்மை பயக்கக்கூடிய விதத்தில் பொருளாதார ஒத்துழைப்பு அமைய வேண்டும்.

கட்டுப்பாடற்ற திறந்த பொருளாதாரமும், கடுமையான மூடப்பட்ட பொருளாதாரமும் தேசத்திற்கும் தேச மக்களுக்கும் நாசத்தை விளைவிக்கக்கூடியவை என்பதை இலங்கையின் கடந்த கால அனுபவங்கள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் ஒரு பிராந்திய வல்லரசு என்ற தன்மையைக் கொண்டது இந்தியா. நூற்றி இருபது கோடி மக்களைக் கொண்ட அந்த நாட்டில் வறுமையும் இருக்கிறது செழிப்பும் இருக்கிறது. சுமார் இரண்டரைக் கோடி மக்களைக் கொண்ட எமது சின்னஞ் சிறிய நாடு நேரடியாகவும் மறைமுகமாகவும் இந்தியாவிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் நிறையவே இருக்கின்றன.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர் பீட தொலைபேசி/பக்ஸ் 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com

# தமிழ்-முஸ்லிம் தலைவர்களின் பேச்சு முயற்சி வெறும் தேர்தல் காலத் தேவதைக் கதையா?



எம்.எஸ்.எம்.ஐயூப்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் காலஞ்சென்ற எம்.எச்.எம்.அஷ்ரபுடன் தமிழர் விடுதலைக் கூட்டணி நடத்திய பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் தற்போதைய முஸ்லிம் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி அரசியல் தீர்வு விடயமாக இணக்கப்பாடொன்றை ஏற்படுத்திக்கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், திருகோணமலையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றின் போது கூறியிருக்கிறார்.

அஷ்ரப் அவர்களுடன் அன்று நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது வட மாகாணத்துடன் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களை இணைத்து வடக்கு, கிழக்கு மாகாண சபை ஒன்றையும் கல்முனை, சம்மாந்துறை மற்றும் பொத்துவில் ஆகிய பிரதேசங்களை இணைத்து தென் கிழக்கு மாகாண சபை ஒன்றையும் உருவாக்குவது பற்றி ஆராயப்பட்டது.

அதன்படி வடமாகாண சபைக்கு தமிழர் ஒருவர் முதலமைச்சராகவும் முஸ்லிம் ஒருவர் பிரதி முதலமைச்சராகவும் இருக்க வேண்டும் என்றும் தென் கிழக்கு மகாண சபைக்கு முஸ்லிம் ஒருவர் முதலமைச்சராகவும் தமிழர் ஒருவர் பிரதி முதலமைச்சராகவும் இருக்க வேண்டும் என்றும் அந்த பேச்சுவார்த்தையின் போது முடிவு செய்யப்பட்டது. அந்த அடிப்படையிலேயே அரசியல் தீர்வொன்றைக் காண விரும்புகிறோம் என சம்பந்தன் அந்தக் கூட்டத்தில் கூறியிருக்கிறார்.

சம்பந்தன் கூறும் இந்தத் திட்டம் மிகவும் நியாயமானதாகவே தெரிகிறது. அதிகாரப் பரவலாக்கலின் உண்மையான நோக்கத்தை புரிந்துகொண்ட எந்தவொரு சிங்களவரும் இதனை நிராகரிக்க மாட்டார் என நம்பலாம். ஆனால் இது நடைமுறைச் சாத்தியமானதா என்பது சந்தேகமே. நடைமுறைச் சாத்தியப்படாத பட்சத்தில் இது வெறும் தேர்தல்கால தேவதைக் கதையாகி விடுவது தவிர்க்க முடியாது.

இந்தத் திட்டத்தின் மேலோட்டமான தோற்றத்தைப் பற்றி இணக்கப்பாட்டுக்கு வந்த போதிலும் அதனோடு தொடர்புடைய சில குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக தமிழ், முஸ்லிம் தலைவர்களிடையே இணக்கப்பாட்டுக்கு வர முடியுமா என்பது சந்தேகமான ஒரு விடயமாகும்.

முதலாவதாக, தமிழ் மற்றும் முஸ்லிம் தலைவர்களுக்கிடையே இந்தத் திட்டத்தின் நடைமுறை அம்சங்களைப் பற்றி இணக்கப்பாடொன்றை காண்பதாக இருந்தால் இரு சாராரும் பழைய அனுபவங்களைப் பற்றி ஆழமாகச் சிந்திக்க வேண்டியிருக்கும். எங்கு பிழை விட்டோம் என்பதைப் பற்றி இரு சாராரும் நேர்மையாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் 1987ஆம் ஆண்டு அமுலுக்கு வந்து சில காலங்களிலேயே அவ்வொப்பந்தத்தை ஆதரித்த சில தமிழ் தலைவர்களும் புதிய தீர்வுத் திட்டமொன்றை தேட முற்பட்டனர். ஈ.பி.டி.பி மட்டுமே தொடர்ந்தும் அதனை ஆதரித்து வந்துள்ளது.

தமிழ் மற்றும் முஸ்லிம் தலைவர்களுக்கிடையே பொது இணக்கப்பாடு காண்பதில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது முக்கிய முயற்சியாக 1988ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் தலைவர் அஷ்ரபும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் முன்னாள் தலைவர் குமார் பொன்னம்பலமும் ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாட்டை எடுத்துக் காட்டலாம். வடக்கு, கிழக்கில் முஸ்லிம்களுக்கும் மாகாணசபை ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று அப்போது இணங்கப்பட்டது. இந்தக் கருத்தை முதன் முதலாவதாக ஏற்றுக்கொண்ட தமிழ் தலைவர் குமார் பொன்னம்பலமே.

1988ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அப்போதைய தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையில் ஜனநாயக மக்கள் கூட்டணி என்ற பெயரில் எட்டுக் கட்சிகளின் கூட்டணியொன்று அமைக்கப்பட்டது. மு.கா. மற்றும் த.கா. ஆகிய இரு கட்சிகளும் இதில் இடம்பெற்றன.

எனவே அஷ்ரப் - பொன்னம்பலம் உடன்படிக்கையும் அந்தத் தேர்தல் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் பிரதேசங்கள் இணைக்கப்பட்டு ஒரு மாகாண சபையையும் இரு மாகாணங்களிலும் ஆங்காங்கே சிதறியுள்ள முஸ்லிம் பிரதேசங்கள் இணைக்கப்பட்டு பாண்டிச்சேரி பாணியிலான முஸ்லிம் மாகாண சபையொன்றையும் உருவாக்குவது என அத்தேர்தல் விஞ்ஞாபனம் கூறியது.

ஆனால் தேர்தலுக்கு முன்னரே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் காரணமாக மு.காவும், த.கா.வும் அக்கூட்டணியில் இருந்து விலகிக்கொண்டன. அவர்கள் விலகிய பின்னர் அக்கூட்டணியில் இருந்த மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்தன அந்த உத்தேச முஸ்லிம் மாகாண சபையை ஹெலிகொப்டர் மாகாண சபையென நையாண்டி செய்தார். பின்னர் காலப்போக்கில் த.காவும் மு.காவும் தமது உடன்படிக்கையை மறந்து விட்டார்கள் போலும்.

1988ஆம் ஆண்டு மற்றொரு முக்கிய தமிழ் - முஸ்லிம் உடன்படிக்கை ஏற்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் எம்.ஐ.எம்.முகைதீனின் தலைமையிலான முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணிக்கும் இடையிலேயே அந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இதற்காக கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத்தின் தலைமையிலான மு.ஐ.வி.மு. குழுவொன்று சென்னைக்குச் சென்று 1988ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15, 16 மற்றும் 19ஆம் திகதிகளில் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியது.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் முஸ்லிம்களினதும் தாயகமென்பதால் அங்கு தமிழ் மக்கள் அனுபவிக்கும் சகல உரிமைகளும் முஸ்லிம்களுக்கும் உண்டு என்பதை ஒப்பந்தம் ஏற்றுக்கொண்டது. எதிர்கால மாகாண சபையிலும் அதன் அமைச்சரவையிலும் 30 சத வீதத்திற்கு குறையாத பிரதிநிதித்துவத்தைப் பெற முஸ்லிம்களுக்கு உரிமையுள்ளது என்றும் ஒப்பந்தம் கூறியது. எதிர்கால காணிப் பகிர்வுகளின் போது கிழக்கு மாகாணத்தில் 35 சத வீதத்திற்கும் மன்னார் மாவட்டத்தில் 30 சதவீதத்திற்கும் வடமாகாணத்தின் ஏனைய பகுதிகளில் 5 சதவீதத்திற்கும் குறையாத வகையில் காணிகளைப்பெற முஸ்லிம்களுக்கு உரிமையுள்ளது என்றும் அந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டது.

முஸ்லிம் ஒருவர் முதலமைச்சராகாத பட்சத்தில் வடக்கு - கிழக்கு மாகாண சபையின் பிரதி முதலமைச்சராக முஸ்லிம் ஒருவர் நியமிக்கப்படுவார் என்றும் அதில் மேலும் கூறப்பட்டது. ஆனால் பின்னர் நடந்தவை வெறும் வாய்ச் சவடாலாகிப் போனது.

இதற்கு சில வாரங்களுக்குப் பின்னர் மு.ஐ.வி.மு. தமிழர் விடுதலை கூட்டணியுடனும் சென்னையில் வைத்து ஏறத்தாழ இதற்குச் சமமான உள்ளடக்கத்துடனான ஒரு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டது.

(7ஆம் பக்கம் பார்க்க)

# கடல் சட்டத்தின்படி சீன மீனவர்களை விடுவிக்கவோ, தண்டிக்கவோ இலங்கைக்கு அதிகாரம் உண்டு

இலங்கையின் கடல் பகுதியில் மீன்பிடித்து கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்ட சீன மீனவர்களை விடுவிக்கும்படி, சீனா வேண்டுகோள் விடுத்திருப்பதாக, சீன செய்தி நிறுவனம் சின்ஹுஆ தெரிவித்திருந்தது.

சர்வதேச கடல் சட்டங்களின்படி உரிய நடவடிக்கை எடுத்த பின் இவர்களை விடுவிக்குமாறு கொழும்பில் உள்ள சீன தூதரகம் கோரிக்கை விடுத்ததாகவும், சின்ஹுஆ செய்தி கூறியிருந்தது.

இலங்கையில் கிழக்கு கடல் பகுதியில் எல்லை கடந்து வந்து மீன்பிடித்துக் கொண்டிருந்த இரு சீன மீன்பிடிப் படகுகளை கைப்பற்றியுள்ளது இலங்கை கடற்படை. இரு படகுகளிலும் இருந்து 37 சீன மீனவர்கள் கைது செய்யப்பட்டு, இலங்கையின் திருகோணமலை கடற்கரைக்கு கொண்டு செல்லப்பட்டனர். கைதான இரண்டு இலங்கை மீனவர்களும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சீன மீனவர்கள், இலங்கையின் மட்டக்களப்பு நகரத்தில் இருந்து 13 கடல் மைல்கள் தொலைவுவரை வந்து மீன் பிடித்தபோது அகப்[illegible]டனர். இலங்கையின் கரையில் இருந்து 200 கடல் மைல்களுக்கு அப்பால்தான் இவர்கள் மீன்பிடிக்க முடியும்.

இங்கு குறிப்பிடப்படும் 200 கடல்மைல் கணக்கு என்பது ஒரு சர்வதேச கடல் சட்டம். இது உலக நாடுகள் அனைத்துக்கும் பொருந்தும் சட்டம் அது. 1982ஆம் ஆண்டின் கடல் சட்டம் பற்றிய ஐ.நா. சமவாயத்தின் எந்தவொரு நாட்டின் கடலிலும் 3 எல்லைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்தச் சட்டப்படி, ஒரு நாட்டின் கரையில் இருந்து 12 கடல் மைல்கள், நிர்வாகக் கடல் எல்லை எனப்படும். அதற்கு மேல் மற்றொரு 12 கடல் மைல்கள், தொடர் வலயம் எனப்படும். இந்த இரண்டையும் சேர்த்து, கரையில் இருந்து மொத்தம் 24 கடல் மைல்கள் குறிப்பிட்ட நாட்டின் முழு ஆதிக்கத்தில் உள்ள பகுதி. இதற்குள் மற்றைய நாட்டு கப்பல்களோ, படகுகளோ அனுமதியின்றி நுழைவது, அத்துமீறல்.

கரையில் இருந்து 200 கடல் மைல்கள் தொலைவில் உள்ள மற்றொரு எல்லை, பிரத்தியேகப் பொருளாதார வலயம் எனப்படும். அந்த கடல் பகுதிக்குள் கிடைக்கும் பொருளாதார வளங்கள் அனைத்தும், குறிப்பிட்ட நாட்டுக்கே சொந்தம். பொருளாதார வளங்களில் அந்தப் பகுதியில் பிடிக்கப்படும் மீன்களும் அடங் கும்.

இந்த 200 கடல் மைல்கள் எல்லைக்குள் (னோல், 24 கடல் மைல்களுக்கு வெளியே) வெளிநாட்டு கப்பல்கள், கடலில் கிடைக்கும் பொருளாதார பலன்களை கவராமல் நடமாட தடை கிடையாது. இதுதான் சர்வதேச சட்டம். 1982-ல் இருந்து உலகெங்கும் அமுலில் உள்ளது.

கரையில் இருந்து 12 கடல் மைல்களுக்கு உள்ளேயுள்ள நிர்வாகக் கடல் எல்லைக்குள் அகப்பட்டால் நிச்சய தண்டனை. 12 கடல்மைல்களுக்கும் 24 கடல் மைல்களுக்கும் இடையேயுள்ள தொடர் வலயத்தில் அகப்பட்டால், விரும்பினால் தண்டிக்கலாம், இல்லாவிட்டால் விட்டுவிடலாம் என்பதே சட்டம்.

சீனப் படகுகள் இலங்கை கரையில் இருந்து 13 கடல்மைல் தொலைவில் சிக்கியுள்ளன. இதனால் இலங்கையால் சட்ட ரீதியாக இவர்களை தண்டிக்கவும் முடியும். விட்டுவிடவும் முடியும். இலங்கைக்கு அரசு விரும்பிய முடிவை எடுக்க முடியும் என்பதே 1982ஆம் ஆண்டின் கடல் சட்டம் கொடுத்துள்ள அதிகாரம்.

# இன்றைய சிந்தனை

## உண்மையான சுதந்திரம் எது?

*- ஜோன் அலன்*

சிந்திப்பதும், பேசுவதும், செயல்படுவதும் தனி நபரின் அடிப்படை உரிமை என்றார் சாக்ரட்டீஸ். அந்த உரிமை இல்லை என்றால் சுதந்திரம் இல்லை. அவன் ஆட்சியதிகாரிகளின் அடிமையாகத்தான் இருக்க முடியும் என்பது அவருடைய கருத்து.

"சிந்தனையை ஒடுக்குவது பறவையின்
சிறகுகளை உடைப்பதற்குச் சமம்"

மக்கள் ஆட்சியாளரின் அக்கிரமங்களைத் தட்டிக் கேட்க வேண்டும். அடக்குமுறைகளை எதிர்த்து நிற்க வேண்டும் என்று விரும்பினார் அவர். அவர்களை அறிவிலும் பண்பிலும் சிறக்கச் செய்து துணிவுடன் செயல்படச் செய்வதையே அவர் தனது வாழ்வின் முதற் கடமையாகக் கொண்டிருந்தார்.

சாக்ரட்டீசிடம் சிந்திக்கும் திறன், சிந்தனையை நேர்த்தியாக வெளிப்படுத்தும் திறன், மக்களை நல்வழிப்படுத்தும் திறன் இருந்தன. அவர் முட்டாளை அறிவாளியாக்கினார். கோழையை வீரனாக்கினார்.மாற்றம் என்பது தானாக வருவதல்ல, நாம்தாம் அதைக் கொண்டு வந்தாக வேண்டும் என்று மக்களுக்கு உணர்த்தினார் அவர்.

சாக்ரட்டீஸ் வாழ்ந்த காலத்தில் தகவல் தொடர்பு சாதனங்களில்லை. அவர் மக்களை நேருக்குநேர் சந்தித்துத்தான், தனது கருத்துகளைச் சொல்ல வேண்டியிருந்தது. அவர் உண்மையைச் சொன்னார். உறுதிபடச் சொன்னார். தனது சொற்களால் மக்களுக்கு எழுச்சியூட்டினார்.

# யுத்தத்தின்போது காணாமல் போனவர்களைக் கண்டுபிடிக்க பிரிட்டிஷ் அரசின் உதவி

## - கோருகிறார் கன்சர்வேட்டிங் கட்சி எம்.பி.

இலங்கையின் இறுதி யுத்தத்தின்போது காணாமல் போனவர்கள் குறித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தெரிவித்துவரும் குற்றச்சாட்டுகள் குறித்து ஆராயப்பட வேண்டும் என்று பிரிட்டிஷ் எம்.பி. பொப் பிளக்மன் கூறினார். இறுதி யுத்தத்தின்போது ஆயிரக் கணக்கானவர்கள் காணா[illegible] போய் விட்டார்கள் என்றும் கொல்லப்பட்டனர் என்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு குற்றஞ்சாட்டுகிறது. இதுகுறித்து ஆராயப்பட வேண்டும் என்றும் பிரிட்டிஷ் கன்சர்வேட்டிங் கட்சி எம்.பி.யான பிளக்மன் கூறினார்.

இலங்கைக்கு பிரிட்டிஷ் எம்.பி. க்கள் குழு மேற்கொண்ட ஆறுநாள் விஜயத்தின் முடிவில் உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்தியாளர்களைக் கொழும்பில் சந்தித்துப் பேசிய போதே மேற்கண்டவாறு அந்த எம்.பி. கூறினார். "காணாமல் போன சிலர் செத்திருக்கலாம். இன்னும் சிலரைக் கண்டுபிடிக்க முடியும். சம்பந்தப்பட்ட அனைவருக்கும் திருப்தியளிக்கக்கூடிய வகையில் இந்தப் பிரச்சினை கையாளப்பட வேண்டும். இதனைக் கையாள்வதற்கு வழிவகையொன்றினை ஏற்படுத்தித் தருமாறு பிரிட்டிஷ் அரசாங்கத்தைக் கேட்கவுள்ளேன்" என்றும் அந்த எம்.பி. சொன்னார்.

# கடந்த 10 வருடங்களில் 570 பேர் கண்ணிவெடிகளால் பாதிக்கப்பட்டுள்ளனர்

வடக்கில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்ட இடங்களென இனங்காணப்பட்ட 2061 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பில், 1943 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பில் கண்ணிவெடிகள் இதுவரை அகற்றப்பட்டுள்ளன என்று இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிக சூரியா குறிப்பிடடார்.

அதாவது இனங்காணப்பட்ட நிலப்பரப்பில் 94.7 சதவீத நிலப்பரப்பிலிருந்து கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுவிட்டன. இன்னும் 5.3 சதவீத நிலப்பரப்பிலேயே கண்ணிவெடிகள் அகற்றப்பட வேண்டியுள்ளன என்றும் அவர் சொன்னார்.

கண்ணிவெடி அகற்றும் பணியில் இலங்கை இராணுவம் உட்பட மொத்தம் பதினொரு நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. கண்ணிவெடி அகற்றும் பணிகளில் மொத்தம் 3516 பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்களில் 337 பேர் பெண்களாவர். சுமார் 865,000 பல்வேறு வெடி பொருட்கள் இதுவரை அகற்றப்பட்டுள்ளன. 2002 ஆம் ஆண்டிலிருந்து இவ்வருடம் ஜூன் வரை 570 பேர் கண்ணிவெடிகளால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# கிராம வரைபடங்கள் தயாராகிறன

**சண்டிலிப்பாய்**

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் கிராம வரைபடம் தயாரிக்கும் பணிகள் சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட 28 கிராம அலுவலர் பிரிவுகளிலும், தனித் தனியாக கிராம வரைபடம் தயாரிக்கப்பட்டு வருகின்றன. குறித்த கிராமத்திலுள்ள அனர்த்த பாதுகாப்பு இடங்கள், இடி தாங்கிகள், பாடசாலைகள், குளங்கள், ஆலயங்கள், வீதிகள் உட்பட்ட விடயங்கள் இதில் அடக்கப்பட்டிருக்கின்றன. அனர்த்தம் நிகழும் காலங்களில் மக்களின் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பதற்கான வழிவகைகளைக் கண்டறிவதில் கிராம வரைபடம் உதவிகரமாக அமையும் என தெரிவிக்கப்படுகின்றது. கிராம அலுவலர்கள் மற்றும் பட்டதாரி பயிலுனர்கள் இணைந்து விரிவான ஆய்வினை மேற்கொண்டு வரைபடத்தினை தயாரித்து வருகின்றார்கள் எனச் சொல்லப் படுகிறது.

## பாண்டிச்சேரியிலிருந்து

# ஆஸி செல்ல முயன்ற 7 இலங்கையர்கள் காவலில்

பாண்டிச்சேரியிலிருந்து அவுஸ்திரேலியாவுக்கு இலங்கைத் தமிழர்களைக் களவாகக் கடல் வழியாகக் கடத்திச் செல்ல எடுக்கப்பட்ட முயற்சி தொடர்பாக இந்திய குற்றத்தடுப்பு மற்றும் புலனாய்வுப் பொலிசார் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியாவுக்குச் செல்வதற்காகப் பாண்டிச்சேரி, பெரிய களப்பேட்டை என்ற இடத்தில் ஒரு வீட்டில் தங்கியிருந்த இலங்கைத் தமிழர்கள் ஏழு பேர் கைது செய்யப்பட்டனர்.

ஜனா என்பவரே தம்மைப் பாண்டிச்சேரிக்கு அழைத்து வந்ததாக அவர்கள் கூறினர்.

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் ஏழு பேரில் ஒரு ஐந்து வயதுப் பைய னும் உள்ளார்.

கைதானவர்களில் சிலர் தமிழ் நாட்டிலுள்ள இலங்கை அகதிகள் முகாம்களில் பல வருடங்களாக வசித்து வருபவர்களாவர்.

இருவர் அவுஸ்திரேலியா செல்வதற்காக இலங்கையிலிருந்து அண்மையில்தான் பாண்டிச்சேரிக்கு வந்து சேர்ந்தனரெனப் பொலிசார் தெரிவித்தனர்.

# நாடெங்கும் வறட்சி 5000 குளங்கள் வற்றின

நாடெங்கும் வறட்சி காரணமாகச் சுமார் ஐயாயிரம் குளங்கள் வற்றிவிட்டன என்று கமநல சேவைகள் மற்றும் வன சீவராசிகள் அமைச்சின் பேச்சாளர் ஒருவர் கூறினார். பொலநறுவ பராக்கிரம சமுத்திரம், அனுராதபுரத்தில் கலாவேவ ஆகிய இரண்டு நீர்த் தேக்கங்களிலும் நீர் கணிசமான அளவுக்கு வற்றிவிட்டதாகவும் அவர் கூறினார். சுமார் இருபதாயிரத்துக்கு மேற்பட்ட விவசாயிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனா.

# தமிழ்-முஸ்லிம் தலைவர்களின்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

1990ஆம் ஆண்டு 8 தமிழ் அரசியல் கட்சிகள் மு.கா.வுடன் பேச்சுவார்த்தை நடத்தின. புலிகள் இந்த தமிழ் கட்சிகளுள் அடங்கவில்லை. இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது வடக்கு - கிழக்கில் தமிழ் மாகாண சபையொன்றையும் முஸ்லிம் மாகாண சபையொன்றையும் உருவாக்கி அவற்றுக்கு மேலால் அவற்றை இணைக்கும் உயர் சபையொன்றை (Apex council) உருவாக்குவது என தீர்மானிக்கப்பட்டது. ஆனால் தமிழ் முஸ்லிம் மாகாண சபைகளின் எல்லைகளை நிர்ணயிக்க முற்பட்ட போது ஏற்பட்ட சர்ச்சையின் காரணமாக அந்தப் பேச்சுவார்த்தைகளும் நின்றுவிட்டன.

சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில் 1996ஆம் ஆண்டு அப்போதைய அரசியலமைப்பு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸின் தலைமையில் இனப் பிரச்சினையை மையமாக வைத்து புதிய அரசியலமைப்பொன்றை தயாரிப்பதற்காக நாடாளுமன்ற தெரிவுக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. அந்தத் தெரிவுக் குழுவின் பேச்சுவார்த்தைகளுக்கு சமாந்தரமாக 1997ஆம் ஆண்டு மீண்டும் தமிழ் - முஸ்லிம் கட்சிகள் பேச்சுவார்த்தைகளை நடத்தின.

அப்போதும் வடக்கு - கிழக்கில் தமிழ் மாகாண சபையொன்றையும் முஸ்லிம் மாகாண சபையொன்றையும் உருவாக்கி அவற்றுக்கு மேலால் அவற்றை இணைக்கும் உயர் சபையொன்றை (Apex council) உருவாக்குவது என தீர்மானிக்கப்பட்டது. ஆனால் அப்போதும் தமிழ் முஸ்லிம் மாகாண சபைகளின் எல்லைகளை நிர்ணயிக்க முற்பட்ட போது ஏற்பட்ட சர்ச்சையின் காரணமாக அந்தப் பேச்சுவார்த்தைகளும் நின்றுவிட்டன.


சம்பந்தன் கூறுவதைப் போல் தமிழ் தேசிய கூட்டமைப்பு மீண்டும் முஸ்லிம் கட்சிகளுடன் குறிப்பாக மு.கா.வுடன் பேச்சுவார்த்தை நடத்துவதாயின் இருசாராரும் இந்த வரலாற்று அனுபவங்களை கருத்தில் கொண்டேயாக வேண்டும். வரலாற்றில் சந்தித்த இந்தத் தடைகளை மீறும் நிலைமை இருந்தால் மட்டுமே அவ்வாறான பேச்சுவார்த்தைகள் வெற்றி பெறும் வாய்ப்பு ஏற்படும். இல்லாவிட்டால் தற்போதைய அதிகார பரவலாக்கல் முறைமைக்குள்ளேயே பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளும் வழிவகைகளை தேட வேண்டியிருக்கும்.

***நன்றி: இணையம்***

# வீதி விபத்துக்களும்

## தெரிந்து கொள்ள வேண்டிய

# விதி முறைகளும்



சர்வதேச ரீதியாக விபத்துக்கள் குறைவடைந்து கொண்டு செல்கின்ற வேளை ஆசிய நாடுகளில் அண்மைக்காலமாக விபத்துக்கள் அதிகரித்துக் காணப்படுகின்றமை அதிர்ச்சி தரக்கூடிய நிகழ்வாகவே கருதப்படுகிறது. இலங்கை போன்ற சிறிய தீவுகளில் சனத்தொகையுடன் ஒப்பிடும் போது அதனை விஞ்சிய விபத்துக்கள் பதிவு செய்யப்பட்டிருப்பதை புள்ளி விபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன

1977ம்ஆண்டு தொடக்கம் 2007ம்ஆண்டு வரையிலான ஆய்வுகளின்படி இலங்கையில் விபத்துக்களில் உயிரிழந்தவர்களின் தொகையானது 40000.00 ஆகும். இக்காலப்பகுதியில் 370000.00 பேர் படுகாயமடைந்துள்ளனர். கடந்த முப்பது வருடத்தில் 1120848.00 வீதி விபத்துக்கள் இடம் பெற்றுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் அண்மையில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பொன்றில் கூறினார்.இலங்கையில் நாளொன்றிற்கு 150 விபத்துக்கள் இடம் பெறுகின்றன. அதில் 5-7மரணங்கள் சம்பவிக்கின்றன. 50க்கும் மேற்பட்டோர் காயமடைகின்றனர்.உண்மையில் இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் இவ்விபத்துக்கள் பாரிய நெருக்கடியைதோற்றுவிக்கவல்லன. சமூக பொருளாதார சுகாதாரப் பிரச்சினைகளை இவ்விபத்துக்கள் ஏற்படுத்துகின்றன.

75 சதவீதமான விபத்துக்களுக்கு மனிதர்களின் கவனயீனமே காரணமாக அமைந்து விடுகின்றது.

வீதி விபத்துக்கள் ஏற்படுவதற்கு பல காரணிகள் இனங்காணப்பட்டுள்ளன. இதில் முக்கியமாக சில காரணிகளை நோக்கலாம்.

**பாதசாரிகள் வீதி ஒழுங்குக்கட்டுப்பாடுகளை முறையாகக் கடைப்பிடிக்காமை :**

பாதசாரிகள் விபத்துக்களை தவிர்ந்து கொள்ளும் பொருட்டு அரசாங்கம் பல ஏற்பாடுகளை செய்து கொடுத்துள்ளது.எனினும் பெரும்பாலான பாதசாரிகள் இந்த ஒழுங்குகளை பின்பற்றுவதில்லை. பாதசாரிகள் விபத்துக்களை தவிர்ந்து கொள்வதற்கென முக்கிய இனங்காணப்பட்ட இடங்களில் மஞ்சல் கோடுகளை அமைத்துள்ளது.எனினும் சிவப்பு சமிக்ஞை விளக்குகளுக்கு காத்திருக்காமல் வாகனங்கள் சென்று கொண்டிருக்கும் இடைவெளிக்குள் நுழைய முற்பட்டு விபத்துக்கள் அதிகம் ஏற்படுவதுண்டு.

மேம்பாலம் சுரங்கப்பாதைகளும் மக்கள் செறிவாக வீதியை கடக்கும் முக்கிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. எனினும் சோம்பல் அவசரம் இலகுவாகவும் வேகமாகவும் காரியங்களை முடிக்க வேண்டும் என்ற பதற்றம் பாதசாரிகளின் நெரிசல் போன்ற இடர்கள் வீதி விபத்துக்களுக்கு காரணிகளாக அமைந்து விடுகின்றன.

**சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதில் உள்ள முறை கேடுகள்.**

முறையான சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்குப்பதிலாக இலஞ்சம் ஊழல் முறைகளைப்பின்பற்றி சாரதி அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளும் வழிமுறை இன்னும் இலங்கையில் சட்டவிரோதமாக நடைபெற்றுவருகின்றது. நாட்டில் அவ்வப்போது சுற்றிவளைக்கப்படும் போலிக்கச்சேரிகள் இதற்கோர் எடுத்துக்காட்டு.


குறித்த திணைக்களங்களில் இறுக்கமான சட்டங்கள் அமுலில் இருந்தாலும் சமூகவிரோதிகள் சில நுணுக்கங்களை கண்டுபிடித்து சட்டவிரோதமாக உள் நுழைந்து முறையற்ற சாரதிகளுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்கி வருகின்றனர்.இத்தகைய சாரதிகளால் பெரும்பாலான வீதி விபத்துக்கள் இடம்பெறுவதுண்டு. வீதியில் பொருத்தப்பட்டிருக்கும் வீதி ஒழுங்குகள் மற்றும் போக்குவரத்து விதிகள் குறித்த எந்த அறிவுமற்ற இவர்களால் சமூகப்பொருளாதார பின்னடைவை தேசம் அடிக்கடி சந்திக்க வேண்டியுள்ளது.

இலங்கையில் உள்ள சாரதிகளில் இரண்டு இலட்சம் பேருக்கு சாரதி ஆசனத்திற்கு பின்னால் நிற்பதற்கு கூட தகுதியில்லை!

மது போதையில் வாகனம் ஓட்டுவதால் வீதி விபத்துக்கள் அதிகம் ஏற்படுவதுபோல் கையடக்க தொலைபேசியில் உரையாடிக்கொண்டு வாகனங்களை செலுத்துவதாலும் வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றது.

இத்தகைய விபத்துக்களின் பின்புலத்தைகண்டறிந்தும் குறித்த சாரதிகள் மீது கடுமையான சட்டநடவடிக்கை எடுக்காததன் விளைவு அவர்கள் மற்றுமொரு விபத்து நேரக்காணியாக அமைந்து விடுகின்றனர்.

சில போக்குவரத்துப் பொலிசாரின் ஊழல் இலஞ்சம் பெறும் கீழ்த்தரமான நடவடிக்கைகளால் மேசமான சாரதிகளும் இலகுவாக தப்பித்துக்கொள்ளவும் தண்டனைகளிலிருந்து தற்காத்துக் கொள்ளவும் ஏதுவாக





08-08-2012
# கல்வி ஒளி
தமிழ்நாதம்
Thamil Naatham
மாணவர் உலகின் கலங்கரைவிளக்கம் கல்வி - 01 ஒளி - 08

## ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை - 2012



நேரம்: 45 நிமிடம் வினாத்தாள் - I ஆசிரியர்: ந. ஆனந்த சபேசன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்)



● வெற்றுச் சதுரத்திற்கு வரவேண்டிய பொருத்தமான படத்தினை அருகில் தரப்பட்டுள்ள விடையில் இருந்து தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

1.

(1) (2) (3)


2.


● அம்புக்குறி காட்டப்பட்ட திசையில் இருந்து நோக்கும் போது தெரியும் சரியான வடிவத்தின் கீழ்க் கோடிடுக.



3.



4.

இந்த உருவில் காட்டப்பட்டுள்ள கனவு பெட்டியை விரித்தால் தெரியும் தோற்றத்தின் கீழ்க் கீறிடுக.



5.சுற்றாடல் சார் செயற்பாட்டின்போது மாணவன் ஒருவன் தவறுதலாக வரைந்த படத்தினை தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.




6.வெசாக் கூடு ஒன்றை அலங்கரிப்பதற்கு மாணவன் ஒருவன் கடதாசியை மடித்து வெட்டிய விதம் கீழே தரப்பட்டுள்ளது. அதை பிரித்தால் தெரியும் சரியான படத்தின் கீழ்க் கோடிடுக.

7.தரப்பட்டுள்ள பென்சிலின் சரியான நீளம் எது?




1. 5 cm
2. 6 cm
3. 4 cm


8.நான் அசுத்தமான நீரில் என் வாழ்வை ஆரம்பிப்பேன். மனிதர்களுக்கு ஆபத்தான நோயை ஏற்படுத்துவேன். நான் உருவத்தில் மிகச் சிறியவன் நான் யார்?

1.இலையான் 2.எறும்பு 3.நுளம்பு

9.நான் நாட்டுக்கு நன்மை தரும் ஒருவனாவேன் என்பது மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாட்டில் எப்பிரிவில் அடங்கும்.

1.உறுதிப்பாடு 2.மலர்வு 3.பிரார்த்தனை

10.இப்படம் காட்டும் விளையாட்டின் பெயர் என்ன?



1.பல்லாங்குழி
2.தாயம்
3.சோகி


11.எனக்கு உச்சி இல்லை ஆனால் இரண்டு தட்டையான முகமும் ஒரு வளைந்த மேற்பரப்பும் உண்டு. நான் யார்?

1.கோளம் 2.கூம்பு 3.உருளை

12.வடக்கிற்கும் கிழக்கிற்கும் இடையே அமைந்துள்ள திசை யாது?

1.ஈசான மூலை 2.நிருதிமூலை 3.வாயுமூலை

13.இவ்விரு உருக்களினதும் பரப்புக்களில்




1.A பெரிது
2.B பெரிது
3.A,B இரண்டும் சமன்

14.இப்படத்தில் உள்ளவர்,



1.தலதா மாளிகையின் தியவன நிலமையாக கடமையாற்றியவர்
2.இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றி இசையமைத்தவர்
3.ருவன்வெளி தாது கோபுரத்திற்கு கவசம் வைத்தமை

15.நெல் வயலில் நிலத்தை மட்டப் படுத்துவதற்காக பயன்படுத்தும் உபகரணம் எது?

1.மட்டப்பலகை 2.பரப்புப்பலகை 3.மூலைமட்டம்



16.வீட்டில் அனைவரும் பொதுவாக பயன்படுத்தக்கூடிய பொருள் எது?

1.சீப்பு 2.தொப்பி 3.அலுமாரி


17.இலங்கையில் தேயிலைச் செடியை அறிமுகம் செய்த அந்நியர் யார்?

1.ஆங்கிலேயர் 2.போர்த்துக்கீசர் 3.ஒல்லாந்தர்

18."சத்தம் தொடர்ந்து போட்டிடுமே! நித்தம் வெளியில் காட்டிடுமே! தத்தித் தத்திச் சென்றிடுமே! தண்ணீர் என்றால் ஒன்றிடுமே!" இப்பாடலுடன் தொடர்புடைய உயிரினம் எது?

1.  2.  3. 

19.அருகில் உள்ள படம் எத்தனை சிறிய பெட்டிகளால் ஆக்கப்பட்டுள்ளது?



1.16
2.18
3.12

20.கம்பிகள் அதிர்வதனால் இசையை ஏற்படுத்தும் இசைக் கருவி எது?
1.வீணை 2.நாதஸ்வரம் 3.புல்லாங்குழல்

21.ஒருவன் வடக்குத்திசை நோக்கி நடந்து சென்று, பின்வலக்கை பக்கமாக திரும்பிநேரே சென்று, மீண்டும் வலக்கைபக்கமாக திரும்பி நின்றான் எனின் அவன் பார்க்கும் திசை யாது?
1.கிழக்கு 2.மேற்கு 3.தெற்கு

22.இக்குறியீடு உணர்த்துவது

1.இலங்கை அஞ்சல்
2.சமாதானம்
3.ரூபவாகினி தொலைக்காட்சி

23.தேசப்படத்தில் நதிகளை குறிக்க பயன்படும் நிறம்
1.சிவப்பு 2.நீலம் 3.கபிலம்

24.காலை 8.30 மணிக்கு ஆரம்பித்த பயணம் ஒன்று மதியம் 12.45 மணிக்கு நிறைவு பெற்றது. எனின் பயணம் செய்த காலம் எவ்வளவு?
1.5.15 மணித்தியாலம் 2.4.30 மணித்தியாலம் 3 4.15 மணித்தியாலம்

● எழுத்து பிழைகளற்ற சொல்லின் கீழ்க் கோடிடுக.

25.காய்ச்சல், காச்சல், காய்சல்

26.புடவை, புடைவை, பிடவை

● கீறிட்ட இடத்திற்கு வரவேண்டிய சரியான சொல்லின் இலக்கத்தை எழுதுக.

| 1.மூசு | 2.மஞ்சரி | 3.அமுத |
|---|---|---|

27.ஒரு தண்டில் பல பூக்கள் .............................. எனப்படும்.


28.பலாவின் இளம் பிஞ்சு ............................. எனப்படும்

29.80ஆவது ஆண்டின் இறுதியில் ............................. விழா கொண்டாடப்படும்.

பொருத்தமான நிறுத்தற் குறியீடு இடப்பட்டுள்ள வாக்கியத்தினை தெரிவு செய்க.

30. 1.அவன் "கணிதம், தமிழ், ஆங்கிலம்" ஆகிய பாடங்களில் "கூடிய புள்ளிகள் பெற்றபின்
2."இன்று மழை பெய்யுமா?" என்று கேட்டான்.
3.ஆகா, அழகான மலர்!

31.இப்படத்தில் உள்ள தாவரம்



1.குப்பை மேனி

2.பொன்னாங்காணி

3.வல்லாரை

32.கீழ்வரும் அட்டவணையைக் கொண்டு விடை தருக.

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | 4 | 7 | 8 | 2 |
| X | A | S | C | L |


33.முகம் பார்க்கும் கண்ணாடியில் மாற்றம் இன்றி தெரியும் ஆங்கில எழுத்துக்கள்

1.A யும் X உம் 2.A யும் S உம் 3.X உம் L உம்

34.S,X,A,L என்ற ஆங்கில எழுத்துக்களால் பெறக்கூடிய எண்களின் பெறுமதி

1.20 2.16 3.17

35.அருகில் காட்டப்பட்டுள்ள உடுக் கோலத்திற்கு வழங்கும் பெயர் யாது?



1.சிம்மம்

2.கலப்பை

3.விருட்சிகம்

36.ஒரு கூட்டினுள் உள்ள முயல்களின் கால்களினதும் கண்களினதும் எண்ணிக்கை 36 எனின், கூட்டில் உள்ள முயல்களின் எண்ணிக்கை யாது

1,36 2.42 3.18

37.4m 48cm அளவுடைய கம்பித்துண்டு ஒன்றை நான்கு துண்டுகளாக வெட்டும்போது கிடைக்கும் ஒரு தண்டின் நீளம் யாது?

1.1m 14cm 2.1m 12cm 3.1m 10cm


38.பதிவுத் தபால் ஒன்றை அனுப்புவதற்குரிய முத்திரையின் பெறுமதி யாது?

1.35 ரூபாய் 2.50 ரூபாய் 3.30 ரூபாய்

39.எதிரொலி மூலம் பயணம் செய்யும் பிராணி

1.பாம்பு 2.வௌவால் 3.ஆட்காட்டி குருவி

40.பின்வரும் சூரிய நமஸ்கார செயற்பாடு குறிக்கும் இலக்கம் யாது?



1.படிமுறை 2

2.படிமுறை 8

3.படிமுறை 7

**இந்துநாகரிகம் - பகுதி I விடைகள் (31-50) 2012.07.25ஆம் திகதி வெளியாகிய "கல்வி ஒளி"யில் பிரசுரமாகியிருந்த இந்து நாகரிகம் - (பகுதி - 1) இறுதி இருபது கேள்விகளுக்கான விடைகள் வருமாறு.**

| | | | |
|---|---|---|---|
| 31. 1 | 36. 3 | 41. 5 | 46. 4 |
| 32. 4 | 37. 5 | 42. 1 | 47. 1 |
| 33. 5 | 38. 4 | 43. 5 | 48. 2 |
| 34. 4 | 39. 2 | 44. 2 | 49. 3 |
| 35. 3 | 40. 4 | 45. 4 | 50. 3 |

**பின்வரும் வினாக்களில் பகுதி 1இல் இரண்டு வினாக்களையும் பகுதி II இல் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களிற்கு மாத்திரம் விடை தருக.**

## பகுதி - I

1."வேதமோடாகமம் மெய்யாம் இறைவன்நூல்"
அ)வேதம் என்பதன் பொருள் யாது?
ஆ)வேதம் போற்றிடும் முக்கிய தெய்வங்களையும் பாசுரங்களின் எண்ணிக்கையையும் தருக.
இ)இருக்கு வேதகால வழிபாட்டு முறைகளை சுருக்கமாக தருக.
ஈ) வேதம் கூறும் இறை கோட்பாடினை சுருக்கமாக தருக.

2."மனமே திருமுறையோ தாயோ"
அ)திருமுறை எழுந்த காலமும் தொகுத்த காலத்தினையும் அதன் பொருளையும் தருக.
ஆ)திருமுறை அமைப்பினைத் தருக.
இ)திருமுறைகள் சைவர்கள் வாழ்வில் பெற்ற முக்கியத்துவத்தை தெளிவுபடுத்துக.
ஈ) பன்னிரண்டாம் திருமுறை எழுச்சிபற்றிச் சுருக்கமாய் தருக.

3.யாழ்ப்பாணக் கலாசாரம் கந்தபுராண கலாசாரம்"
அ)கௌமார நெறியின் தோற்றமும், வளர்ச்சியும் பற்றி தருக.
ஆ)முருகவழிபாட்டின் பிரமாண நூல்களைத் தருக.
இ)மூர்த்திபேதம் எத்தனை? அதில் ஒன்றின் பிரதிமாலட்சண தத்துவத்தைத் தருக.
ஈ) முருக வழிபாட்டு நெறிமுறைகளைத் தெளிவுபடுத்துக.

## பகுதி II

4."பதி பசு பாசம் எனப்பதர் மூன்றில்......." பதிக்கோட்பாட்டை சைவசித்தாந்தம் எவ்வாறு முன்னிலைப்படுத்தியது என்பதை மேல்வருவன அடிப்படையில் விடை தருக.
அ)உண்மைநிலை ஆ)இயல்பு இ)இலட்சணம் ஈ)தொழில்

5."பல்லவர் காலம் பக்திநெறிக்கு மட்டுமல்ல தத்துவக் கலைக்குரிய காலமும் என்பர்"
அ)பக்தி நெறி வளர்ச்சி பற்றித் தெளிவுபடுத்துக.
ஆ)கட்டடக் கலை வளர்ச்சியைத் தெளிவுபடுத்துக.
இ)அத்துவைதம் என்ற வேதாந்தக் கொள்கையை எழுந்த சூழ்நிலையோடு சுருக்கமாய்க் கூறுக.

6.நாட்டார் வழிபாட்டில் ஈழத்தில் இன்று ஐயனார் வழிபாடு அல்லது கண்ணகி வழிபாடு பெற்றுள்ள நிலையை சடங்குகள், தோற்றம், வழிபாடு என்பவற்றால் விளக்குக.

7.அ)இந்துக்களின் வாழ்வில் விரதம் பண்டிகைகள் பெற்றுள்ள இடத்தினை மதிப்பிடுக.
ஆ)சிவவிரதங்களை வகைப்படுத்தி ஒன்றினை தெளிவாக பேணும் நிலையைக் கூறுக.

8.அ)கிராமியக் கலைகளைத் தருக.
ஆ)காவடியின் தோற்றம் வளர்ச்சியைத் தருக.
இ)காவடியின் வகையும் பக்தி நிலையையும் தருக.
ஈ)காவடியின் தத்துவத்தையும் தருக.

9.பின்வரும், எவையேனும் நான்கினுக்குச் சிறுகுறிப்பு வரைக.
1)கடையிற்சுவாமி 2)திருக்கேதீஸ்வரம் 3)நடராஜர் 4)காசிவாசி நெந்திநாத ஐயர்
5)சிவஞானபோதம் 6)அறம்

02. (A) $H_2O_2$, $SO_2$ ஆகியன ஒட்சியேற்ற தாழ்த்தல் தொழிற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்கான ஒவ்வொரு தாக்கத்தைத் தருக.

01. $H_2O_2$ ஒட்சியேற்றியாக.........................

02. $H_2O_2$ தாழ்த்தியாக ..........................

03. $SO_2$ ஒட்சியேற்றியாக .....................

04. $SO_2$ தாழ்த்தியாக ..........................

(B) இரும்பின் வெவ்வேறு ஒட்சியேற்ற நிலைகளையுடைய கற்றயன்கள் அடங்கியுள்ள நீர்க்கரைசலின் மொத்த Fe அளவைத் துணிவதற்காக நடத்தப்பட்ட ஒரு பரிசோதனை வருமாறு: இடைவெளிகளை நிரப்புக, தேவையற்ற சொற்களை கீறிவிடுக.

$Fe^{2+}$, $Fe^{3+}$ அயன்கள் அடங்கியுள்ள கரைசலின் 25ml ஐ எடுத்து அதனுள் ............. வாயுவை செலுத்தினால் அதில் அடங்கியுள்ள ........... அயன்கள் ................. அயன்களாக மாறும். தெளிவான கரைசல் கிடைக்கும். இதற்காகப் பயன்படுத்திய வாயு ஒட்சியேற்றியாக / தாழ்த்தியாகத் தொழிற்பட்டுள்ளது. பின்னர் கரைசலைக் கொதிக்க வைத்து அதில் கரைந்திருந்த ........ வாயு அப்புறப்படுத்தப்பட்டது. கிடைத்த கரைசலை $H^+ / KMnO_4$ உடன் நியமித்த போது .......... கரைசலில் அடங்கியிருந்த ................ அயன்கள் .................... அயன்களாக ஒட்சியேற்றம் / தாழ்த்தல் அடைந்தன. இங்கு $MnO_4^-$ அயன்கள் ஒட்சியேற்றியாக / தாழ்த்தியாகத் தொழிற்படுகின்றது. இந்த நியமிப்பின் போது நியமிப்புக் குடுவையில் காட்டியாக / காட்டியாகவல்லாது சிறிதளவு $H_3PO4$ சேர்க்கப்படுகின்றது.


(C) A எனும் சேதனப் பொருளை பிரித்தெடுப்பதற்கான தொடர்புடைய கொதிநீராவி வடிப்பு முறை வருமாறு: இடைவெளிகளை நிரப்புக.

A எனும் சேதனப் பொருள் நீரில் ............. அது நீரின் அளவுக்கு எளிதில் ........................ A உம் நீரும் கொண்ட கலவையை வெப்பமேற்றும்போது ......... உம் ......... உம் தனித்தனியே ஆவியாவதால் பகுதியமுக்கம் ஏற்படுத்தப்படும். ஆவியின் மொத்த அமுக்கம் P ஆயின் P= ................ + ................. ஆகும். P = .............. ஆகும் பொழுது கலவை கொதிக்கும். கலவை கொதிக்கும் பொழுது A இன் பகுதியமுக்கம் ................ அமுகத்தை விடக் குறைவடையும். $H_2O$ இன் பகுதி அமுக்கம் .................. இன் அமுக்கத்தைவிடக் குறைவானது. எனவே கலவையானது ............, ........... ஆகியவற்றின் கொதிநிலைகளை விட .............. வெப்பநிலையிலேயே கொதிக்கும்.


03) பின்வரும் வினாக்களில் கீழே தரப்பட்ட தாக்கு பொருள்கள் கரைப்பான்கள் என்பவற்றை மட்டும் பயன்படுத்தி சேர்வைகள் A ஐயும் B ஐயும் எவ்வாறு தொகுப்பீர் எனக் காட்டுவதுடன் A யும் B யும் தாக்கம் புரிந்து கிடைக்கும் விளைபொருள் C இன் கட்டமைப்பையும் எழுதுக.

Sn, znlHg, $Br_2$, CO, CCl4, NaNO2, நீரற்ற $AlCl_3$, நீர், ConHCl, Con H2SO4, Con HNO3, dil NaOH, $CH_3COCl$, CH3COCH3, ⌬


(i)




(ii)




(iii)





4. [a] ஐந்து படிகளுக்கு மேற்படாமல்




என்னும் மாற்றீட்டை நிறைவேற்றுக.

[b]




என்பவற்றைக் கருதுக.

A யானது B இன் சமபகுதியாகும்.


i.கட்டமைப்பு சமபகுதியத்தின் எவ்வகையான அமைப்பை இவை காட்டுகின்றன

.......................

ii.A,B ஐ வேறுபடுத்துவதற்கான இரசாயனச் சோதனை தருக.

..............................

(C) கீழே பெட்டிகளின் மூலம் காட்டப்பட்ட தாக்கத்திட்டத்தைக் கவனிக்குக.




(i) A,B,C,D,E இன் கட்டமைப்புக்களைத் தருக.

A: ..........................        D: ..............................

B: ..........................        E: .............................

C: ..........................

(ii) P,Q,R,S,T இற்கான நிபந்தனைகளைத் தருக.


P: ......................        S:.......................

Q: ......................        T:.......................

R:......................

(iii) வாயு L,M ஐ இனங்காண்க.

L: ........................        M: ..............................

(D)  ஆனது குறித்த நிபந்தனையின் கீழ் 

ஆக மாற்றப்படக்கூடியது.

(i) இங்கு உண்டாகும் இலத்திரன் நாட்ட சோதனைப் பொருள் யாது?


.................................

(ii) வினா (i) இல் அச் சோதனைப் பொருள் உருவாதலுடன் தொடர்புடைய தாக்கத்தை எழுதுக.

...........................

(iii) இத் தாக்கத்தில் $HNO_3$ இன் தொழிற்பாடு யாது?


............................

(iv) இங்கு 

உருவாதலுக்கு முன் உருவாகும் இடைநிலை விளைவின் கட்டமைப்பை வரைக.

............................

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 08.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது




விடுகின்றன.
வாகனத்தை செலுத்துதல்
யில் வாகனத்தை செலுத்தும் அதி வேக
கரங்களில் பொருத்தப்பட்டிருந்தாலும்
ன சாரதிகள் அவற்றை கவனத்திற்கொள்வதே


டைந்த நாடுகளில் சாரதிகளின் கவனத்தைக்
ருட்டு நியோன் விளக்குகளால்
ப்பட்டு வாகன வீதி வேகத்தடைகள்
ட்டிருப்பது போல் இங்கும் அவை
கு கொண்டு வரப்படல்
லங்கையில் வேகமாக வாகனங்களை
சாரதிகளை கண்காணிக்கவென
துப்பொலிசாரும் கருவிகளும் போதாது.
கண்காணிப்பை தன் சக சாரதிகளுக்கு
மலம் அடையாளப்படுத்தும் சாரதிகளின்
யும் விபத்துக்களுக்கு தூபம் போடுகின்றன.
த்துப்பொலிசார் நிற்கும் இடங்களில் வேகம்
ளவும் அதி வேகமாக வாகனங்களை
சாரதிகளை கண்கானிக்கவும் அதிகபட்ச
பெற்றுக் கொடுக்கவும் இலங்கை
து சட்டங்களில் திருத்தங்களை கொண்டு
.பாதை ஒழுங்கையும் கோடுகளையும் மீறி
ல எத்தனிக்கும் வாகனங்களாலும்
அதிகம் ஏற்படுவதுண்டு.இலஞ்சம் பெறாத
ால் 80 வீதமான விபத்துக்களை குறைக்க

ன் அதிகரிப்பு:
பில் அண்மைக்காலமாக தீவிரமாக
ம் திறந்த பொருளாதாரக் கொள்கையானது
 வாகனங்களின் இறக்குமதிக்கு
ள்ள வீதி அபிவிருத்தி திட்டமிடப்படாத
அதிகரித்த வாகனப்பாவனையும்
ருக்கு காரணியாக அமைந்து விடுகின்றது.
ள் மட்டுமன்று கால நேர விரயமும்
ற்படும் பொருளாதாரப்பின்னடைவும்
காள்ளப்படவேண்டும். வீதி அபிவிருத்திக்கு
 தொகையை விட விபத்துக்களால்
மக்களின் சிகிச்சைக்காக அரசாங்கம்
க பணத்தை வருடாந்தம் ஒதுக்குகின்றது
டு கவனிக்கத்தக்கது.வீதி விபத்துக்களில்
நபர்கள் ஆபத்தான கடுமையான காயம்
யம் அல்லது மரணம் போன்ற
ல் பாதிப்புக்குள்ளாவதுண்டு. இதனால்
ாருளாதாரப்பின்னடைவை விட உளவ-
ன தாக்கங்களுக்கே அதிகம் முகம்
னர்.

க்களை தவிர்ப்பதற்கான
ர்:
ன வீதி போக்குவரத்து
 உருவாக்கலும்
படுத்தல்
 மட்டத்தில்
களை வழங்கள்
தல்
ளுக்கு பொலிசாரின்
துக்கள் மற்றும்
கள் பற்றி

கமெராக்கள் மூலம்
ன சாரதிகளின்
களை கண்காணித்தல்
த்து துறையில் நிகழும் இலஞ்சம் ஊழல்
களை முற்றாக ஒழித்தல்
ளின் பின் அரச ஊழியர்கள் தெரிந்து
ண்டிய விதி முறைகள்
ளின் பின் அதற்குரிய நட்டயீட்டுத்தொகை-
காள்ள சில வழிமுறைகள் நடைமுறையில்
வற்றில் அனேக விதிமுறைகளை நாம்
த்திருக்காததன் காரணமாக உரிய
ழப்பீட்டுத்தொகையயினைப்பெற
போவதுண்டு.
றையில் பணிபுரிபவர்கள் விபத்தொன்று
ல நாழிகைகளில் உரிய நிறுவனத்திற்கு
 மூலம் விடுமுறையினை
ள்ளவும் குறித்த நிறுவனத்தின் வைத்திய
ப்பெற்றுக்கொள்ளவும் முடியும்.
று சம்பவித்த மறு வினாடியில் அவசியம்
த தெரியப்படுத்த வேண்டும்.நமது சொந்த
 அதற்குரிய நஷ்டயீட்டைப்பெறவும்
 சட்டநடவடிக்கை எடுக்கவும் பொலிசாரின்
க முக்கியம்.கவனக்குறைவான சாரதியை
வதும் அல்லது சமரசம் பேசுவதும்
விபத்துக்கு வழிவிடும் செயலாகும்.
ஊழியர்கள் கடமைக்குச்செல்லும் போதும்
தம் வெளியே செல்லும் போதும்
ள சந்திக்க நேரிடுகிறது.அரசாங்க
 தவறுகளால் அல்லாமல் பிறரால் ஏற்படும்
க்கு அரச ஊழியர்களுக்கு சம்பளத்துடன்
றையுடன் நஷ்டயீடும் பெற்றுக்கொள்ளலாம்.
ாவையின் 12ம்அத்தியாயத்தில் 09ம்பிரிவில்
து லீவுக்கான ஏற்பாடுகள் விபரமாக

குறிப்பிடப்பட்டுள்ளன.1986.11.20 திகதியிடப்பட்ட 352ம் இலக்க சுற்றறிக்கையிலும் இது குறித்து விபரமாக குறிப்பிடப்பட்டுள்ளன.1993.09.21 திகதியிடப்பட்ட சுற்றறிக்கையிலும் (23 -93) கடமையில் ஈடுபட்டிருக்கும் போது காயத்திற்குள்ளாகும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு நஷ்டயீடு வழங்குவது தொடர்பான திருத்திய விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.மேற்படி சுற்றறிக்கையில் - 03ம்பிரிவில் காயத்தின் தன்மைக்கேற்ப மருத்துவ சபையின் சிபாரிசுக்கமைவாக பின்வரும் அடிப்படையில் லீவுகள் வழங்கப்பட வேண்டும் என விதந்துரைக்கப்பட்டுள்ளது.



வருடமொன்றுவரை சம்பளமுள்ள லீவுகளும் அதன் பின்னர் ஆறு மாதம் அரைச் சம்பள லீவுகளும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஓராண்டு லீவுக்கும் மேலதிகமாக தகைகுறித்தான கடந்த லீவில் பெற்றுக்கொள்ள அனுமதி உண்டு.

நட்டயீடு,அல்லது ஓய்வூதியங்கள் திட்டத்தின் கீழ் அரச ஊழியர் ஒருவர் காயமடைந்தால் மரணமடையும்,அல்லது நிரந்தர இயலாமைக்கு உட்படும் உத்தியோகத்தர் ஒருவர் 55 வயதிற்கு குறைந்தவராக இருப்பின் அவர் 55 வயதில் இளைப்பாறியதாக கவனத்திற்கொண்டு விபத்தில் சிக்கியவருக்கு ஓய்வூதியக்கணக்கில் அவரது சம்பளம் வைப்பிலிடப்படும்.

காயத்தினால் மரணம் ஏற்பட்டால் நஷ்டயீடுகள் தொடர்பாக ஆய்வு செய்யும் குழுவின் சிபாரிசுக்கு அமைவாக ஓய்வூதிய பணிப்பாளரினால் மரணமடைந்த அரச உத்தியோகத்தரில் தங்கியிருப்போருக்கு 60 மாதச்சம்பளம் நஷ்டயீடாக வழங்கப்படும்.

2011.07.02ம்திகதி அரசாங்க நிருவாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பீ.வீ அபேகோன் அவர்களினால் கையொப்பமிட்டு அனுப்பப்பட்ட சுற்றறிக்கையின் படி அரசாங்க ஊழியர்களின் விபத்து தொடர்பான மேன்முறையீடுகளுக்கென உயர் மட்டக்குழுவொன்று நியமிக்கப்பட்டு சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

அலுவலகர் கடமைக்கு வரும்போது அல்லது கடமை முடிந்து வீடு திரும்பும் போது விபத்து நேர்ந்திருப்பின் அறிக்கையில் பின்வரும் விடயங்கள் கவனத்திற் கொள்ளப்படவேண்டும்.

அலுவலகர் ஒருவர் சாதாரணமாக வேலைக்கு வர வேண்டிய நேரம் சேவை முடிந்து வீடு செல்ல வேண்டிய நேரம்.

வந்த நேரமும் திரும்பிச்சென்ற நேரமும்.

அலுவலகர் சாதாரணமாக சேவை நிலையத்திற்கு வரும் முகவரி விபத்து நிகழ்ந்த இடத்திற்கு உள்ள தூரம் வந்த விதம் பிரயாண செய்த தூரமும சென்றிருந்த தூரமும் (சாதாரணமாக பிரயாண வழிக்கு அப்பாற்பட்ட இடமொன்றில் விபத்து நிகழ்ந்திருப்பின் அது பற்றிய மேலதிக விளக்கம் இணைக்கப்படல் வேண்டும்)

முடியுமான சந்தர்ப்பங்களில் அலுவலரின் கூற்றிலும் விபத்தை நேரில் கண்டோரின் கூற்றுக்களிலும் உள்ளடங்கியுள்ள விடயங்கள் பற்றிய அவதானிப்புகள்.

வார இறுதியில் அல்லது அரச விடுமுறை நாட்களில் விபத்த நிகழ்ந்திருப்பின் குறித்த சேவை நிலையத்தில் பணி புரிவதற்கு முன் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கின்றதா என்பது பற்றிய விபரம்.

மோட்டார் வாகனம் அல்லது மோட்டார் சைக்கிள் அல்லது வேறு வாகனங்களை செலுத்திக் கொண்டிருக்கைளில் விபத்து நிகழ்ந்திருப்பின் சாரதி அனுமதிப்பத்திரமும். வாகன அனுமதி பத்திரம் மற்றும் காப்புறுதிப்பத்திரம் ஆகியன உள்ளதா என்பது பற்றிய விபரம்.

(உரிய சந்தர்ப்பங்களில் வரவுப்பதிவேட்டுப்பிரதி சாரதி அனுமதிப்பத்திர இன்சுரன்ஸ் லைசன்ஸ் பிரதிகள் இணைத்து அனுப்படல் வேண்டும்)

திடீர் விபத்துக்களின் போது அலுவலகரின் விண்ணப் பத்தில் அவரின் தேசிய அடையாள அட்டை இலக்கத் தையும் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.விபத்து நிகழ்ந்து ஒரு வருட காலத்திற்குள் நஷ்டயீட்டு விண்ணபத்தி னையும் உரிய ஆவணங்களையும் தாபனப்பணிப்பாளர் நாயகத்திடம் ஒப்படைக்கல் வேண்டும்.ஒரு வருடத்திற்கு பிந்திய நஷ்டயீட்டு விண்ணப்பங்களுடன் தாமதித்தமைக் கான நியாயமான காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு அமைச்சின் செயலாளரால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப் படல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட விபரங்களை நோக்கும் போது அரச அலுவலகர் ஒருவர் விபத்துக்களின் போது சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் பற்றிய அடிப்படை அறிவைப்பெற்றுக்கொள்ளமுடியும்

விபத்து நடைபெற்றபின் நஷ்டயீட்டுப்பணம் கிடைக்காமல் இருப்பதற்கு ஆவணங்களின் குறைபாடும் முறையாக விண்ணப்பிக்காமையுமே பிரதான காரணியாகும்.

அரச அலுவலகங்களில் மட்டுமல்ல பாடசாலைகளிலும் கடமை தவிர்ந்த ஏனைய புறகிருத்தியப்பணிகளில் ஆசிரியர்கள் பணிபுரிய வேண்டிய நிலை ஏற்படுவதுண்டு.

விளையாட்டுப்போட்டி மேலதிக வகுப்புக்கள் அல்லது பாடசாலை அபிவிருத்திகளுக்கான பணிகள் போன்ற செயற்பாடுகளில் முன் அனுமதி பெற்று செயற்படும் போது நிகழும் விபத்திற்கு நட்டயீட்டைப்பெற விண்ணப்பிக்க முடியும்.

கல்வி அமைச்சில் அல்லது திணைக்களத்தலைவரின் முன் அனுமதி பெற்று செல்லும் கல்விச்சுற்றுலா கள ஆய்வுகளின் போது ஏற்படும் விபத்துகளுக்கும் நஷ்டயீட் டைப்பெற பின்வரும் ஆவணங்களை சமர்ப்பிப்பதன் மூலம் விண்ணப்பிக்க முடியும்.

சம்பளத்திரட்டுப்பதிவேடுகள்

பொலிஸ் நிலைய முறைப்பாட்டுப்பதிவுகள்

நேரத்தை அத்தாட்சிப்படுத்தும் சாட்சியங்கள்

பின்வரும் விபத்துக்களால் பாதிப்பு ஏற்பட்டால் கடமை லீவோ நட்டயீடோ வழங்கப்படமாட்டாது இதற்காக விண்ணப் பிக்கவும் முடியாது.

அரச அலுவலரின் கவனயீனத்தினால் நிகழும் விபத்து

அரச அலுவலரின் தவறினால் நிகழும் விபத்து

சட்ட விதிகளுக்கு முரணான முறையில் ஏற்படும் விபத்து

திணைக்கள கட்டளைகள் வீதிப்பிரமாணங்களை மீறும் வகையில் செயற்பட்டதினால் நிகழும் விபத்து

மது போதையில் ஏற்பட்ட விபத்து சட்டவிதிகளுக்கு முரணாக செயற்பட்டு அரசாங்க ஊழியர் அல்லாத ஒருவர் விபத்தில் காயம்பட்டு பாதிக்கப்படும் போது அவர் எந்தத் தரப்பிலிருந்தும் உதவிகளைப் பெறமுடியாத நிர்க்கதிக் குள்ளாக்கப்டுகிறார்.

எனவே வீதி ஒழுங்கைப் பேணுவதுடன் வாகனங்க ளைச் செலுத்தும் போதும் சட்டவிதிகளைப் பின்பற்றி ஒழுகினால் பெரும்பாலான விபத்துக்களை தவிர்ந்து கொள்ள முடியும் ■

# மைலோ வெற்றிக் கிண்ணம் யூனியன் இரண்டாமிடம்

தெல்லிப்பழை

தேசிய மட்ட மைலோ வெற்றிக் கிண்ண வலைப்பந்தாட்டப் போட்டி பொலநறுவை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இத் தேசிய மட்ட வலைப்பந்தாட்டத்தில் 18 வயதுப் பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி பங்குபற்றி இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது.

மைலோ கிண்ணப் போட்டியின் இரண்டாம் இடத்தைப் பெற்று யாழ். மாவட்டத்திற்கும் வடமாகாணத்திற்கும் பெருமைசேர்த்துள்ளது 68 பாடசாலைகள் பங்குபற்றிய மைலோ கிண்ணத் தேசிய மட்ட வலைப்பந்தாட்ட தொடரில் யூனியன் கல்லூரி முதல் சுற்றுப் போட்டியில் கம்பஹா கோலிகுரோஸ் அணியை 9--4 கணக்கில் வெற்றிபெற்று இரண்டாம் சுற்றுக்குத் தகுதிபெற்றது. இரண்டாம் சுற்றில் அனுராதபர நிவர்த்தக தேசிய மத்திய வித்தியாலயத்தை எதிர்கொண்டு 11-4 என்ற கணக்கில் வெற்றிபெற்றது.

மூன்றாம் சுற்றில் டங்கொடுவல் பாலிகா வித்தியாலயத்தை எதிர்கொண்ட யூனியன் கல்லூரி அணியினர் சிறப்பாக விளையாடு 24-05 என்ற கணக்கில் இலகுவாக வெற்றிபெற்று காலிறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.

அடுத்து களுத்துறை பாலிகா வித்தியாலயத்தோடு மோதியது காலிறுதியில் யூனியன் கல்லூரி அணியினர் 24-20 என்ற கணக்கில் கைப்பற்றி அரையிறுத்திக்குள் பிரவேசித்த யூனியன் கல்லூரி அணி அரையிறுதிக்குள் பிரவேசித்த யூனியன் கல்லூரி அணி அரையிறுதியில் மியூசியஸ் கல்லூரியோடு மோதியது. இரு அணிகளும் தமது முழுத்திறமையும் வெளிப்படுத்தி விளையாடின இறுதியில் யூனியன் கல்லூரி அணியினர் 14-16 என்ற கணக்கில் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்கு தகுபெற்றது.

இறுதிப்போட் டியில் குருநாகல் திருக்குடும்ப கன்னியர் மடத்தை எதிர்கொண்டு 31-23 என்ற கணக்கில் தோல்வியைத் தழுவி தேசிய மட்ட மைலோக் கிண்ணத்தில் இரண்டாம் இடத்தை யூனியன் கல்லூரி அணியினர் பெற்றனர்.

அடுத்த மாதம் அகில இலங்கை பாடசாலைகள் தேசிய மட்ட வலைப் பந்தாட்டப் போட்டிகள் ஆரம்பமாகவுள்ள நிலையில் இவ் வெற்றி யூனியன் கல்லூரி வீராங்கனைகளுக்கு பெரும் உற்சாகத்தைக் கொடுத்துள்ளதாக இச் சிறந்த அணியை பயிற்றுவித்து வருபவரும் அக் கல்லூரி ஆசிரியையுமான ஜெ. ஜெயந்தி தெரிவித்தார்.



வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்திய வலைப்பந்தாட்டப் போட்டியில் மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட கிளிநொச்சி மாவட்ட அணியைப் படத்தில் காணலாம்.
படத்தில் கிளிநொச்சி மாவட்ட வீராங்கனைகளுடன் வட மாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.அண்ணாத்துரை கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அலுவலர் சதானந்தன் மற்றும் பயிற்றுவிப்பாளரும் காணப்படுவதைக் காணலாம்.

# தோல்வியை தழுவியது வடமாகாணம்

தெல்லிப்பழை

38வது தேசியவிளையாட்டு போட்டிகள் ஆரம்பமாகிய நிலையில் வடக்கு மாகாண அணிகள் தோல்வியை தழுவியுள்ளன இதன் முதல் போட்டிகளாக ஹொக்கி, எல்லேப்போட்டிகள் பங்கேற்ற வடமாகாண அணியினர் முதல் சுற்றோடு தோல்வியடைந்து வெளியேறியுள்ளனர்.

நிச் அவ னியு ஹொக்கி மைதானத்தில் நடைபெற்ற ஹொக்கிப்போட்டியில் வடமாகாண ஆண்கள் அணி யினர் தென்மாகாண அணியிடம் 7-0 என்ற அடிப்படையிலும் வட மாகாண பெண்கள் அணியினர் மேல்மாகாண அணியிடம் 16-0 என்ற அடிப்படையிலும் தோல் வியடைந்தனர்.

டொறிங்டன் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற எல்லேப் போட்டியில் வடமாகாண ஆண்கள் அணியினர் மேல்மாகாண அணியிடம் 11-4 என்ற கணக்கிலும் வடமாகாண பெண்கள் அணியினர் 21-7 என்ற கணக்கிலும் தோல்வியை தழுவிக்கொண்டனர்.

# இந்து இளைஞர் சம்பியன்

தெல்லிப்பழை

வடமாகாண ரீதியில் கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகத்தின் 47ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் கிண்ணத்தை சுவிகரித்துள்ளது. இறுதிப் போட்டியில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன. ஏராளமான ரசிகர்கள் மத்தியில் நடைபெற்ற இறுதிப்போட்டி

ஐந்து சுற்றுக்களைக்கொண்டதாக அமைந்தது. ரசிகர்களின் ஆரவாரத்தோடு ஆரம்பித்த முதல் சுற்றில் ஆவரங்கால் இந்துஇளைஞர் விளையாட்டுக்கழகம் அபாரமாக ஆடி 25க்கு 23 என்ற புள்ளியடிப்படையில் முதல் சுற்றை கைப்பற்றியது .

2வது சுற்றில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியின் ஆதிக்கமே ஓங்கியிருந்தது.இச்சுற்றை 25க்கு 22 என்ற புள்ளியடிப்படையில் 2வது சுற்றையும் கைப்பற்றியது. 3வது சுற்று பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் இரு அணிகளுக்கும் முக்கியமான சுற்றாக அமைந்தது இச்சுற்றை ஆவரங்கால் இந்து இளைஞர் அபாரமாக ஆடி 25 க்கு 22 என்ற நேர்செட் கணக்கில் கைப்பற்றி இத்தொடரின் வெற்றியாளர்களாக ஆவரங்கால் இந்து இளைஞர் அணி வெற்றிவாகை சூடியது. இன்னொரு பிரிவாக நடைபெற்ற தென்மராட்சி பிரதேசத்திற்கு உட்பட்ட கழகங்களுக்கிடையிலான கரப்பந்தாட்ட தொடரின் இறுதிப்போட்டியில் மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக் கழகமும் கைதடி அம்பிகை விளையாட்டுக்கழகமும் மோதின. முதல் சுற்றை மட்டுவில் ஐங்கரன் விக 25க்கு 18 என்ற கணக்கிலும் 2ம் சுற்றை 25க்கு 20 என்ற கணக்கிலும் 3ம் சுற்றை 25க்கு 21 என்ற நேர் செட்களில் வெற்றிபெற்று வெற்றிக்கிண்ணத்தை கைப்பற்றிக்கொண்டது.


# அடுத்த போட்டி எனது இறுதிப் போட்டியாக அமையலாம் - பீற்றர்சன்

இங்கிலாந்து - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் இடம்பெறவுள்ள 3ஆவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி இங்கிலாந்து சார்பாகத் தான் பங்குபற்றும் இறுதிப்போட்டியாக அமையாது என்பதற்கான உறுதி யைத் தன்னால் வழங்க முடியாது என இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றர் சன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இங்கிலாந்து அணியின் ஒருநாள் சர்வதேசப் போட்டிகள், டுவெண்டி டுவெண்டி அணியிலிருந்து ஓய்வுபெற்ற கெவின் பீற்றர்சன் இலங்கையில் செப்டெம்பரில் இடம்பெறவுள்ள உலக 20- டுவெண்டி தொடருககான இங்கிலாந்து அணியில் இடம்பெற விருப்பம் தெரிவித்திருந்தார்.

அவர் ஆரம்பத்தில் டுவெண்டி டுவெண்டி சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வுபெற விரும்பியிருக்காத போதிலும், இங்கிலாந்துக் கிரிக்கெட் சபையின் விதிப்படி அவரால் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலிருந்து மாத்திரம் ஓய்வினை அறிவிக்க முடிந்திருக்கவில்லை.

உலக 20- டுவெண்டி அணியி-ல் இடம்பெறவிரும்பும் கெவின் பீற்றர்சனின் விருப்பமும், ஐ.பி.எல் போட்டிகளில் முழுமையாகப் பங்குபற்றும் அவரது விருப்பமும், குடும்பத்தினரோடு அதிக நேரத்தைச் செலவிட விரும்பும் விருப்பமும் இங்கிலாந்துக் கிரிக்கெட் சபையால் ஏற்றுக் கொள்ளப்படாத நிலையிலேயே கெவின் பீற்றர்சன்



அடுத்த போட்டி தனது இறுதிப் போட்டியாக அமையாது என உறுதி மொழி வழங்க முடியாது எனத் தெரிவித்திருந்தார்.

இங்கிலாந்து சார்பாக டெஸ்ற் போட்டிகளில் விளையாடத் தான் விரும்புவதாகவும், எனவே அடுத்த போட்டி தனது இறுதிப் போட்டியாக அமைந்தால் அது மிகப்பெரிய ஏமாற்றமாக அமையும் எனவும் கெவின் பீற்றர்சன் தெரிவித்தார்.

# தேசியமட்ட உதைபந்தாட்டப் போட்டி

தெல்லிப்பழை

தேசியமட்ட கூடைப்பந்தாட்டப் போட்டி எதிர்வரும்10, 11, 12 ம் திகதிகளில் கொழும்பு விமானப் படை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதற்காக வடமாகாண ஆண்கள்,பெண்கள் கூடைப்பந்தாட்ட அணிகள் 7ம் திகதி புறப்பட்டன.

வடமாகாண ஆண்கள், பெண்கள் கூடைப்பந்தாட்ட அணிகள் அங்கு சென்று தேசியமட்ட போட்டிகளுக்கு தயாராகும் வண்ணம் பலபயிற்சிப்போட்டிகளிலும் ஆடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் தவறான தீர்ப்பு இந்திய ரசிகர்கள் கொதிப்பு

லண்டன் ஒலிம்பிக் குத்துச்சண்டை போட்டியில் ஆடவர் பிரிவில் இந்திய வீரர்களுக்கு தொடர்ந்து பாரபட்ச தீர்ப்பை நடுவர்கள் வழங்கி வருகின்றனர். லண்டனில் நடைபெற்று வரும் ஒலிம்பிக் குத்துச்சண்டைப் போட்டியில் ஏற்கனவே 81 கி.கி பிரிவில் பங்கேற்ற சுமித் சங்வானுக்கு புள்ளிகள் குறைவாக கொடுத்து தோற்றதாக அறிவிக்கப்பட்டார்.

அதேபோல 69 கி.கி பிரிவின் காலிறுதியில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்ட விகாஸ் கிருஷ்ணன் சிறிது நேரத்தில் தோல்வியுற்றதாக அறிவித்தனர்.

இந்நிலையில் மீண்டும் ஆடவர் குத்துச்சண்டை 64 கிலோ எடை பிரிவில் இந்தியாவின் மனோஜ் குமார் (26), பிரிட்டனின் தாமஸ் ஸ்டாக்கருடன் நேற்று மோதினார்.

மூன்று சுற்றிலுமே மனோஜ் ஆதிக்கமே கொடிகட்டிப் பறந்தது. அவரது சரமாரியான குத்துகளை சமாளிக்க முடியாமல் ஸ்டாக்கர் தடுமாறியது எல்லோருக்குமே தெளிவாகத் தெரிந்தது. முதல் சுற்றில் ஸ்டாக்கருக்கு சாதகமாக 7-4 என புள்ளிகளை வழங்கியவர்கள் 2வது சுற்றிலும் 9-5 என்ற கணக்கில் புள்ளிகள் கொடுத்தனர்.

கடைசி சுற்றில் மட்டுமே மனோஜுக்கு போனால் போகிறதென்று 7-4 புள்ளிகளை வழங்கினர். இதையடுத்து, இங்கிலாந்து வீரர் ஸ்டாக்கர் 20-16 என்ற புள்ளிக் கணக்கில் வென்றதாக அறிவித்தனர்.

நடுவர்களின் இந்த பாரபட்சமான முடிவால் மனோஜ் குமாரும் இந்திய அணியினரும் கடும் அதிர்ச்சி அடைந்தனர்.

அவரது பயிற்சியாளர் பிளாஸ் பெர்ணாண்டசும் (கியூபா), நடுவர்கள் பாரபட்சமாக செயல்பட்டதாலேயே மனோஜ் தோற்க நேரிட்டதாக குற்றம்சாட்டி உள்ளார்.

குத்துச்சண்டையில் இந்திய வீரர்கள் சங்வான், விகாஸ், மனோஜ் குமார் ஆகியோர் நடுவர் களின் தவறான முடிவுகளால் தோற்று வெளியேற நேரிட்டதால் இந்திய ரசிகர்கள் ஆத்திரம் அடைந்துள்ளனர்.

# இந்தியத் தொடரில் டானியல் விட்டோரி இல்லை

இந்தியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் செய்யவுள்ள நியூசிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. அறிவிக்கப்பட்டுள்ள அணியில் நியூசிலாந்து அணியின் சகலதுறை வீரரும் முன்னாள் தலைவருமான டானியல் விட்டோரி இணைத்துக் கொள்ளப்படவில்லை.

அவர் இந்தியத் தொடரில் பங்குபற்றுவது 90 சதவீதம் சந்தேகத்திற்குரியது என நியூசி லாந்து அணியின் தலைவர் குறிப்பிட்டிருந்த நிலையிலேயே தற்போது அறிவிக்கப்பட்டுள்ள நியூசிலாந்து அணியில் டானியல் விட்டோரி சேர்த்துக் கொள்ளப்படவில்லை.


மேற்கிந்தியத் தீவுகளுக்கான கிரிக்கெட் சுற்றுலாவின் போது காயமடைந்த டானியல் விட்டோரி இன்னமும் குணமடையாததன் காரணமாகவே நியூசிலாந்து அணியில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என நியூசிலாந்துக் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

சுழற்பந்து வீச்சாளரான டானியல் விட்டோரி போட்டிகளில் பங்குபற்றாத நிலையில் அவருக்குப் பதிலாக ஜீதன் பட்டேல் நியூசிலாந்து அணியில் சேர்க்கப்பட்டுள்ளதோடு, ஏற்கனவே மேற்கிந்தியத் தீவுகள் சுற்றுலாவின் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்த தருண் நெதுல்லாவும் அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இந்தியாவின் ஐ.பி.எல் போட்டிகளில் பங்குபற்றி மும்பை இன்டியன்ஸ் அணி சார்பாக சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்திய ஜேம்ஸ் பிராங்ளினும் இந்த அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்திய ஆடுகளங்கள் பற்றிய அவரது பரிச்சயத்திற்காகவும் அவரது சகலதுறைத் திறமைகள் காரணமாகவுமே அவர் அணியில் சேர்க்கப்பட்டுள்ளதாக நியூசிலாந்து கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இந்தியாவுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள நியூசிலாந்து அணி 2 டெஸ்ற்



போட்டிகளிலும், 20- ருவெண்டி போட்டிகளிலும் பங்குபற்றவுள்ளது. முதலாவது டெஸ்ற் போட்டி எதிர்வரும் 23ம் திகதி ஆரம்பிக்கவுள்ளது.


அறிவிக்கப்பட்டுள்ள அணி:

மார்ட்டின் கப்ரில், டானியல் பிளைன், பிரெண்டன் மக்கலம், ஸ் ரெய்லர், கேன் வில்லியம்ஸன், பி.ஜே வற்லிங், ஜேம்ஸ் ராங்ளின், குருகர் வான் வைக், டக் பிரேஸ்வெல், ரிம் சௌதி, நீல் வக்னர், ட்ரென்ட் போல்ட், தருண் நெதுல்லா, ஜீதன் பட்டேல், றிஸ் மார்ட்டின்.

# பெண்ணிலை வேறுபாடுகள்

மனித இனம் என்பதற்கு அப்பால் ஆண்-பெண் என்ற பாகுபாடு அம்மனித இனம் தோன்றிய காலத்திலிருந்தே பார்க்கப்பட்டு வருகிறது. காலத்திற்குக் காலம் நோக்குகைகள் வித்தியாசப்பட்டாலும் ஆணுக்கும் பெண்ணுக்குமான வேறுபாடு பேணப்பட்டு வருகின்றது. இவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட பண்புகள், குணாதிசயங்கள் இருபாலாராலும் ஏற்றுக்கொள்ளப் பட்டவையாகவே நடைமுறைச் சமூகங்களில் காண முடிகிறது. இதற்கான காரணம் என்ன என நோக்குவது அறிவுபூர்வமானதாகும்.

ஒரு குழந்தை பிறந்து அது தான் பிறந்த சமூகத்திற்குரியதாக மாறுவது அவசியமானதாகும். அப்பிள்ளையை அச்சமூகத்திற்குரியதாக மாற்றுவது அதாவது சமூகமயமாக்குவது குடும்பத்தின் கடமையாகிறது. இவ்வாறான சமூகமயமாக்கல்



செயற்பாட்டின் போதுதான் ஆண், பெண் நடிபங்குகள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. ஆண் நடிபங்குகள் என வரையறுத்து வழங்கப்படுபவை பெண் நடிபங்குகளாக வழங்கப்படுபவையோடு ஒப்பிடுகையில் உயர்வானவை எனக் கருதப்படுவதானது பெண்ணிலைவாதச் சிந்தனைக்கு வழி அமைத்துக் கொடுக்கிறது.

ஆயினும், உலகில் எல்லாச் சமூகங்களிலும் இவ்வாறுதான் இடம்பெறுகிறது என்றும் கூறிவிட முடியாது. இவ்வாறான சமூகமயமாக்கல் இயல்புகளிடையே பண்பாட்டுக்குப் பண்பாடு காணப்படும் வேறுபாடுகளை Margaret Mead ன் ஆரம்பகால மானிடவியல் ஆய்வுகள் விளக்குகின்றன. நியூகினிப் பழங்குடியினரான Arapesh மக்களின் சமூகமயமாக்கலில் ஆண் பெண் இருபாலாரும் மெல்லியல்புகளு டன் வளர்க்கப்படுகின்றனர். கூட்டுவாழ்வும் உதவும் பண்பும் இயல்பாய் வழங்கப்படுகின்றன. Mundugamore மக்களிடையே ஆண்களும் பெண்களும் வல்லியல்புகளுடன் வளர்க்கப்படுகின்றார்கள். Tschambuli பண்பாட்டில் ஆண்களைவிட பெண்கள் ஆதிக்கம் செலுத்துபவர்களாக, ஆண்களைவிடப் பொறுப்பும் முகாமைத்துவத் திறனும் கொண்டவர்களாகச் சமூகமயப்படுத்தப்படுகிறார்கள்.

இவ்வாறு சமூகமயமாக்கலின் ஊடாகவே ஆண்-பெண் பால்நிலை வேறுபாடுகள் புகுத்தப்படுகின்றன.

பால்நிலை பாத்திரவகைப்பாட்டுக்கான ஏற்பாடுகள் ஒரு பிள்ளை பிறந்தது முதற்கொண்டு நடைபெறுகின்றன. ஆண் உறுதியானவன், பெண் மென்மையானவள் என்ற எண்ணங்கள் பதியவைக்கப்படுகின்றன. ஆண் குழந்தையின் விளையாட்டுப் பொருட்களாக இராணுவ பொம்மைகள், வாகனங்களும் பெண் குழந்தைகளுக்குப் பாவைப் பிள்ளைகளும், சமையல் விளையாட்டுப் பாத்திரங்களும் வழங்கப்பட்டு பால்நிலை வேறுபாடுகள் தெளிவாக வரையறுத்து வழங்கப்படுகின்றன. மேலும் மனவெழுச்சிகளை வெளிப்படுத்துவதிலும் வேறுபாடுகள் வரையறுக்கப்படுகின்றன. ஆண் பிள்ளை அழக்கூடாது, கோபம் ஆணுக்குரியது என்றும் பெண்பிள்ளை பொறுமையாகவும் அதிகம் சிரிக்காமலும் இருக்க வேண்டும் என்றும் அழுகை பெண்களுக்குரிய தென்றும் கருத் தேற்றங்கள் செய்யப்படுகின்றன. இவை அப்பிள்ளையின் வாழ்நாள் பூராகவும் தொடர்ந்துவிடுகிறது. குடும்பத்தில் தனக்கு மூத்தவரோ, இளையவரோ ஆண்களுக்குப் பணிந்து நடக்கும் பண்பை அக்குழந்தை இயல்பாகவே தன்னுள் பெற்றுக்கொள்கிறது. இதுவே பெண் அடக்குமுறை யாக உருவெடுக்கிறது. பெண்ணிலைவாதம் என்ற கருத்து நிலையில் தோற்றத்திற்கு இதுவே முக்கிய அடிப்படைக் காரணமாகும்.



இத்தகைய மரபு ரீதியாக சமூகமயமாக்கல் அவர்களது வளர்ந்தோர் பருவத்தில் மீள் வலியுறுத்தப்படுகின்றது. பெண்கள் குடும்பத்திலுள்ள ஆண்க ளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதைத் தமது இயல்பாக்கிக் கொள்கின் றனர். பாடசாலைக் காலத்தில்


பொறியியல் துறை ஆண்களுக்குத்தான் சரி பெண் பிள்ளைக்கு ஆசிரியர் தொழில்தான் பொருத்தம் என்ற கருத்து ஊட்டப்படுகிறது. திருமணமானபின் பெண்ணின் உரிமைகள் கணவனின் கைக்கு மாறுகிறது. கணவனின் சொற்களுக்குக் கட்டுப்படாவிடின் சமூகம் தன்னை மதிக்காது என்பதால் என்பதால் ஒரு பெண் அதற்கும் கட்டுப்பட்டு வாழ்கிறாள். இவ்விடயத்தில் எல்லா ஆண்களையும் குற்றவாளிக்கூண்டில் நிறுத்துவது சரியாகாது. எந்தவொரு விதிக்கும் விதிவிலக்கு உண்டு என்பது இதற்கும் பொருந்தும்.

பால்நிலை வேறுபாடுகளுக்கு ஆண் பெண் உயிரியல் நிலையும் காரணமா என்பது சிந்திக்கற்பாலது. ஆண்-பெண் என இரு இனம் வரும் போதே அங்கு ஏதோ வித்தியாசம் இருக்கும் என்பது தெளிவு. அண்மைக்கால ஆய்வொன்றில் பெண்களைவிட ஆண்கள் கணிதவியல் நுண்ணறிவு கூடியவர்கள் என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது அதற்காகப் பெண்கள் ஆண்களைவிடத் தாழ்ந்தவர்கள் என்ற முடிவுக்கு வருவதுதான் பிழையானது. எல்லா ஆண்களும் நுண்ணறிவு கூடியவர்களாக இருந்துவிடுவதில்லை. கணிதத்துறையில் ஆண்களைவிடச் சிறந்து விளங்கும் மாணவிகளையும் நாம் சாதாரணமாகக் காண்கின்றோம். உயிரியல் ரீதியில் ஆண்கள் நுண்ணறிவு கூடியவர்களாகப் படைக்கப்பட்டுள்ளனர் என ஒரு வாதத்திற்கு எடுத்துக்கொண்டால், பெண்களும் பிள்ளைப்பேறு எனும் ஆண்களால் முடியாத காரியத்தைச் செய்கிறார்கள் தானே! இவ்வாறு பார்த்தால் உயிரியல் ரீதியில் ஆண்களும் பெண்களும் சமமானவர்களே. ஏனெனில், ஆண்களால் முடியாத விடயத்தைப் பெண்களுக்கும் பெண்களால் முடியாத விடயத்தை ஆண்களுக்கும் கொடுத்து இயற்கை மனித இனத்தில் ஒரு சமநிலையை ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலம் உயிரியல் ரீதியில் ஆண்கள் உயர்ந்தவர்கள், பெண்கள் தாழ்ந்தவர்கள் என்ற கற்பிதம் நமது சமூகம் ஏற்படுத்திக் கொண்டதேயன்றி வேறில்லை என்பதும் தெளிவாகின்றது. நமது சமூகமயமாக்கல் செயன்முறையும் இதற்கு ஏற்றாற்போல் இருப்பது தான் வருத்தத்திற்குரியது.

பால்ரீதியான பாகுபாட்டுச் சிந்தனையை ஒழிக்க வேண்டுமாயின் அதற்கான முயற்சி ஒரு பிள்ளை பிறந்தது முதலே ஆரம்பிக்கப்பட வேண்டும். அதன் சமூகமயமாக்கல் செயன்முறையின் அமைப்பொழுங்கு மாற்றியமைக்கப்பட வேண்டும். ஆண்களும் பெண்களும் படைப்பால் ஒரே மனித குலத்தைச் சேர்ந்தவர்கள் எனும் கருத்தைப் பிள்ளைகளில் ஊட்டிச் செயற்படுகையில் இவ்விலக்கை அடைவது இலகுவானதாகும். 21 ஆம் நூற்றாண்டிலும் ஆதிக்கக் கருத்தியலாகக் கொள்ளப்படும் பெண்ணிலைவாதம் ஒரு முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டுமாயின், இவ்வாறு செய்யப்படுவது இன்றியமையாததாகின்றது.

- சறியா ஹாமீம்




எப்படி நிகழ்ந்ததோ அது
ஆணுக்கு பெண் -
அடக்கம் என்னும் சமாச்சாரம்,

சமபங்கு கொடுப்பதாய்
உன்னையும் வேலைக்கனுப்பி
உன் திறமைகளை
வெளிப்படுத்த எண்ணி
பாவம் அவளும் கஷ்டப்
படுவானேன்
நிம்மதியாய் வீட்டில்
இருக்கட்டுமே என
நினைத்த இடத்தில் தான்
துரோகம் இழைக்கப்
பட்டுவிட்டது போல்

உடல் கூசப் பார்க்கும்
கயவர்களுக்கு மத்தியில்
மனம் கூசி போவாயோ
வீட்டில் தான் இருந்து விடேன்
உனக்காக உழைக்கத் தான் -
நானிருக்கேனே என்று
எண்ணியதில் தான்
துரோகம் இழைக்கப்
பட்டுவிட்டது போல்

அக்கம் பக்கம் கடைக்கு
செல்கையில்
சோர்ந்து போகும் நீ -
பேருந்தில் எறி,
நான்கு தெரு நடந்து,
எல்லோருக்கும் பதில்
சொல்லி,
எத்தனையோ எரிச்சல்களுக்கு
மத்தியில் சிரித்து
நான் படும் இன்ன பிற
அவஸ்தைகளை
சரிபங்காய் நீயும் படுவானேன்
என
தவறாய் யோசித்த
இடத்திலிருந்து -
துரோகம் இழைக்கப்
பட்டுவிட்டது போல்

நானும் போயி -
நீயும் போயி -
இருவருக்கு மத்தியிலும்
வாழும் பிள்ளைகள்
பாசமற்று ஏங்கிப் போகுமோ
என்று நினைத்த சுயநலத்தில்
தான்
உனக்கான துரோகம் -
இழைக்கப் பட்டுவிட்டது போல்

ஆணுக்கும் பெண்
சமமாக வேண்டும்
எவருக்கு எவரும் தாழ்வாக
வேண்டாம்
என்றெல்லாம் எண்ணினாலும் -
எங்கோ இழைக்கப் பட்ட
துரோகம்
எதற்கோ எனக்கு நீ பயந்து
நடுங்குகையில் -
உள்ளே உரைக்காமலில்லை
வலிக்காமலில்லை.
என்னால் உன்னை
"டி "என அழைக்க சம்மதித்த நீ,
என்னை "வா" போவென்றும்
சொல்ல அனுமதித்திடாத என்
நடத்தை
ஒரு பக்கம் தாழ்ந்த தராசில்
தானே
நிற்கிறது? என -
எல்லோரும் யோசிக்கும் நாள்
வெகு தேவையாகிப் போனது
- இக்காலத்தில்.

உலகம் முழுக்க
பெண்ணியம் பேசுகிறார்கள்
நானும் ஆமென்று தலை
அசைக்கிறேன்,
வீட்டில் -
உனக்கந்த சுதந்திரம்
தரப்பட்டதா எனில்
இல்லை என தலைகுனியும்
அசிங்கம்
யாரால் -
காலவேகத்தினுள் புகுத்தப்
பட்டதோ?? என
கூட்டம் போட்டெல்லாம்
வேண்டாம்
அவரவர் மனதிலாவது
யோசிக்க வேண்டிய
தருணத்தில் தான் நிறைய பேர்
நிலை கொண்டுள்ளோமோ?

"உலகம் சென்று உபதேசம்
செய்வதற்கு முன் -
வீட்டை சுற்றி பார்" என
எழுதியதால்
நானும் அவ்வப்பொழுது
பார்க்கிறேன்
என் வீட்டை -
ஆங்காங்கே காறி உமிழ்கிறது என்
மனசாட்சி, என்னையும் இன்னும்
நிறைய பேரையும்.

இதெல்லாம் தாண்டி -
வேறென்ன தான் உனக்கு
செய்வதென்று
யோசிக்கையில் -
வீடு நிறைந்த மங்கலமாய்
வாழும்
மொத்த பெண்ணினத்தின்
குரல்களும்
காதில் இப்படித் தான்
கேட்கிறது -
"மொத்த ஆண்களும் சேர்ந்து
இப்படி யோசிக்கவாவது
செய்யுங்க -
"வீட்டில் மிக வீரமாக எழும்
கூச்சலின் வேகம்"
சற்று குறையவாவது
செய்யட்டும்!

---

வித்யாசாகர்

"எனக்குத் தெரிந்த வரையில் படிப்பதற்குத் தகுதியான விஷயம் எதுவும் கிடையாது" என்று அது சொல்லும். க்ளோவர் எழுத்துக்களையெல்லாம் கற்றுக்கொண்டு விட்டது. ஆனால் எழுத்துக்களைக் கூட்டி வார்த்தைகளை அமைக்க அதற்குத் தெரியவில்லை.

பாக்ஸரால் ஆரம்ப எழுத்துக்களில் நாலாவது எழுத்தைத் தாண்ட முடியவில்லை, தாண்டினால் முதலில் கற்றுக்கொண்ட நாலு எழுத்துக்களும் அதற்கு மறந்துவிடும். ஐந்தாவது எழுத்து என்ன என்று எவ்வளவு யோசித்தாலும் அதற்கு ஞாபகம் வராது. தெரிந்த நாலு எழுத்துக்களை அது அடிக்கடி தன் முன்னங்கால்களால் தரையில் எழுதிப்ப பார்த்து ஆனந்திக்கும்.

சில சமயம் நாலு எழுத்துக்கள் மட்டுமே அதற்கு ஞாபகம் இருக்கும். முதல் நாலும் மறந்துவிடும். பின்னால் வருகிற நாலும் மறந்துவிடும். நாளடைவில் தெரிந்த நாலு எழுத்துக்களே போதும் என்று அது




திருப்தியடையத் தொடங்கிவிட்டது. தினம் இரண்டொரு தடவைகள் அவற்றை மட்டும் எழுதி மறந்து விடாமல் காப்பாற்றிக்கொண்டது அது.


மாலியைப் பற்றியவரையில் தன் பெயரில் இருந்த ஆறு எழுத்துக்களைத் தவிர வேறு எந்த எழுத்துக்களையும் கற்றுக் கொள்ள அது மறுத்துவிட்டது. மரக்குச்சிகளை வைத்து அழகாக தன் பெயரை அது அடுக்கி வைக்கும். பிறகு அந்தப் பெயருக்கு அலங்காரமாக மரக்குச்சிகளில் புஷ்பங்களை வைத்து ஆனந்திக்கும். தன் பெயரைச் சுற்றிச் சுற்றி வந்து களிக்கும் அது. பண்ணையிலுள்ள மற்ற விலங்குகளில் எதுவும் முதல் எழுத்துக்கு அப்பால் போகவில்லை.

அது மட்டுமல்ல, ஆடுகள், கோழிகள், வாத்துகள் போன்ற சமர்த்தில்லாத ஜந்துக்களால் ஏழு விதிகளைக் கூட மனப்பாடமாகக் கற்றுக்கொள்ள முடியவில்லை என்பது நாளடைவில் தெரிய வந்தது. நீண்ட சிந்தனைக்குப்பின் ஸ்நோபால் அந்த ஏழு விதிகளின் சாராம்சத்தையும் ஒரே வாக்கியத்தில் அடக்கிவிடலாம் என்று கூறியது.

"நாலு கால் நல்லது, இரண்டு கால் கெட்டது" என்பதுதான் அந்த வாக்கியம். விலங்கு தத்துவத்தின் அடிப்படைக் கொள்கைகள் எல்லாம் இந்த வாக்கியத்தில் அடங்கிவிட்டன என்று அது சொல்லிற்று. இதைச் சரிவர அறிந்து கொண்டவர்கள் மனிதர்களுக்கு மீண்டும் அடிமைப்பட்டுவிட மாட்டார்கள் என்றது அது.

(நாளை...)

## வரைவோம் வாருங்கள்!



## சிறுவர் அமுதம்


## "இலங்கை அஞ்சல்" சேவை



இலங்கை அஞ்சல் துறையில் நாடு முழுவதும் 609 அஞ்சல் அலுவலகங்களும், 3440 உப அஞ்சல் நிலையங்களும், 536 முகவர் அஞ்சல் நிலையங்களும், 46 அஞ்சல் கடைகளும் இயங்கி வருகின்றன. இவற்றில் திணைக்களத்தின் வழமையான சேவைகளான அஞ்சல் முத்திரை, முத்திரையிடப்பட்ட பொருட்கள், எழுது கருவிகள், தொலைபேசி அழைப்புக்கள், தொகை அஞ்சல் பொருட்கள் பாரமெடுத்தல், விரைவு அஞ்சல் சேவை, அஞ்சல் தேசிய சேமிப்பு வங்கிச் சேவைகள், அஞ்சல் பெட்டி, அஞ்சல் பை சேவைகள், தந்திச் சேவைகள், தொலைநகல், போட்டோ பிரதிகள், பதிவஞ்சல், சாதாரண அஞ்சல் சேவைகள், உள்நாட்டு வெளிநாட்டு பொதிச் சேவைகள், காப்புறுதி அஞ்சல் சேவைகள், அஞ்சல் அறிமுக அட்டை, புதினப் பத்திரிகைகள் பதிவு செய்தல் என்பவற்றுடன் மேலும் பல நவீன காலத்திற்கு வேண்டிய புதிய பல சேவைகளும் செயற்பட்டு வருகின்றன.

## யானையம்மா யானை!

- உயிரினங்களில் யானையால் மட்டுமே துள்ளி குதிக்க முடியாது. தண்ணீர் இருப்பதை சுமார் 5 கிலோ மீட்டர் தூரத்தில் வரும்போதே வாசனை மூலம் தெரிந்துகொள்ளும்.
- யானையின் பற்கள் சுமார் 5 கிலோ நிறையுடையது. ஆறு முறை பற்கள் விழுந்து முளைக்கும்.
- நன்கு வளர்ந்த ஆபிரிக்க யானையின் தந்தத்தின் நீளம் சுமார் ஏழு அடிகள் வரை இருக்கும்.
- துதிக்கையின் மூலம் 7.5 லிட்டர் வீதம் ஒரு நாளைக்கு சுமார் 350 லிட்டர் தண்ணீரை குடிக்கும்.



## வடை



பாட்டி சுட்ட வடையிது
பருப்பும் உளுந்தும் கலந்தது
வட்ட வடிவ வடையிது
வாய்க்கு ருசியாய் இருக்குது
மிருதுவான வடையிது
மென்று தின்ன ருசிக்குது
மூக்கை வாசம் துளைக்குது
மொறு-மொறுன்னு
இருக்குது
தின்ன தின்ன கேட்குது
தினமும் கேட்க தோணுது

## விடுகதைகள்




1.உருவத்தில் சிறியவன் உழைப்பில் பெரியவன், அவன் யார்?

2.யாரும் செய்யாத கதவு தானே திறக்கும் தானே மூடும். அது என்ன?

3.அடிக்காமல்,திட்டாமல் கண்ணீரை வரவழைப்பாள் அவள் யார்?

4.வெள்ளை ராஜாவுக்கு கறுப்பு உடை அது என்ன?

5.தொட்டுப் பார்க்கலாம் எட்டிப் பார்க்கமுடியாது அது என்ன?

1.எறும்பு 2.கண் இமை 3.வெங்காயம் 4.உழுந்து 5.முதுகு

### சுடோக்கு எண் 24 விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 6 | 4 | 8 | 7 | 1 | 9 | 2 | 3 |
| 9 | 8 | 7 | 3 | 5 | 2 | 6 | 4 | 1 |
| 2 | 3 | 1 | 4 | 9 | 6 | 8 | 7 | 5 |
| 3 | 7 | 6 | 2 | 4 | 8 | 1 | 5 | 9 |
| 4 | 5 | 8 | 9 | 1 | 7 | 3 | 6 | 2 |
| 1 | 9 | 2 | 6 | 3 | 5 | 4 | 8 | 7 |
| 7 | 4 | 5 | 1 | 6 | 3 | 2 | 9 | 8 |
| 8 | 1 | 9 | 5 | 2 | 4 | 7 | 3 | 6 |
| 6 | 2 | 3 | 7 | 8 | 9 | 5 | 1 | 4 |

### சுடோக்கு எண் 25

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | | | 3 | | 9 | | |
| | | | | 8 | | | 2 | |
| 1 | | 3 | | | 4 | | | |
| | 2 | 8 | 6 | | 1 | | | 5 |
| | | 9 | | | | 2 | | |
| 3 | | | 2 | | 9 | 6 | 7 | |
| | | | 7 | | | 5 | | 6 |
| | 5 | | | 9 | | | | |
| | | 1 | | 6 | | | 3 | |

**குழந்தைகளே!**

3 முதல் 12 வயது வரையான பிள்ளைகளின் பிறந்தநாள் வாழ்த்து தமிழ்நாதத்தில் பிரசுரமாகும். நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:

ஏதாவதொரு விடயத்தைப் பூர்த்தி செய்தல். அத்துடன் பெயர், ஊர் பிறந்ததினம் என்பவற்றை மாத்திரம் எழுதி உங்கள் புகைப்படத்தையும் இணைத்து எமக்கு தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

**சிறுவர் அமுதம், தமிழ்நாதம், 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

# ஆலோசனைக் கூட்டம்

(மருதனார்மடம்)

சர்வதேச இந்து மத குருபீடம் நடத்தும் 15வது ஆண்டு ஆன்மீகப் பெருவிழா இம்மாத பிற்பகுதியில் நடைபெறவுள்ளது. இவ்விழா சம்பந்தமான ஆலோசனைக் கூட்டமொன்று இன்று (புதன் கிழமை) பிற்பகல் 1.00மணிக்கு சங்கானை குளக்கரை ஐ.டி.எம். பிரதான மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி சபரிமலைக்குருஜீ ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாசாரியார் தலைமையில் நடைபெறும் மேற்படி கூட்டத்தில் சிவாசாரியார்கள், இந்து சமய பிரமுகர்கள் மற்றும் கலைஞர்கள் ஆகியோரை கலந்துகொள்ளுமாறு குருபீடத்தின் யாழ் மாவட்ட நிர்வாகப் பணிப்பாளர் பிரமஸ்ரீ நித்திய சுதானந்த சர்மா அறிவித்துள்ளார். (01)

# ஆன்மீகச் சொற்பொழிவு

(மருதனார்மடம்)

நல்லூர் கோவில் வீதி ஸ்ரீ ராகவேந்திரர் சுவாமி கோயிலில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று வருகின்றன. இன்று புதன்கிழமை மாலை 6.30 மணிக்கு "பெரியாழ்வாரும் கிருஷ்ணனும்" எனும் தலைப்பில் சைவப் புலவர் செ. கந்த சத்திய தாசன் ஆற்றும் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. ஆசியுரையை பிரதமகுரு பிரமஸ்ரீ மாணிக்கராஜ சர்மா ஆசியுரை வழங்குவார். (01)

# அன்பளிப்புப் பொருட்கள் கையளிப்பு

(மருதனார்மடம்)

யாழ் லயன்ஸ் கழகத்தினால் கைதடி முதியோர் இல்லத்திற்கு, பதினெட்டு இலட்சம் ரூபா பெறுமதியான வைத்தியசாலைக் குரிய கட்டில்கள், காற்று மெத்தைகள் மற்றும் அன்பளிப்புப் பொருட்கள் என்பன வழங்கப் படவுள்ளன.


இக் கையளிப்பு வைபவம் நாளை (வியாழக்கிழமை) காலை 10.00 மணிக்கு கைதடி முதியோர் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

கழகத்தின் மாவட்ட ஆளுனர் லயன் எஸ்.எஸ். தங்கராஜா இந்நிகழ்வில் கலந்துகொண்டு மேற்படி அன்பளிப்புப் பொருட்களை வைபவ ரீதியாக கையளிக்கவுள்ளார்.

பிரான்ஸ் ஸ்ரீ ஐயப்பன் ஆதீனத்தைச் சேர்ந்த இந்திரஜித் குடும்பத்தினர் இதற்கு அனுசரணை வழங்கியிருக்கிறார்கள் என யாழ். லயன்ஸ் கழகத் தலைவர் மு. ஜெயந்தன் தெரிவித்துள்ளார். (01)

# நல்லைக் கந்தன் மகோற்சவம்

## இன்று பதினாறாம் நாள்



**வாழ நாம் வைத்திடும் நல்லையே!**

ஊழிதோ றூழிகள் தாமவை மாறினும்
ஆழிநேர் அல்லவில் ஆழ்ந்திட நேரினும்
மாழுடல் வீழ்ந்துபின் வந்துதான் தோன்றினும்
வாழநாம் வைத்திடும் வான்புகழ் நல்லையே!

*- பண்டிதர் சி. கார்த்திகே*

**நித்தமும் போற்றுகிறோம் நிம்மதி தந்திடையா!**

பக்தி தருநல்லை தனில் பரிமளிக்கும் கந்தனே
பக்தர் களைநாளும் பரிந் தேற்றும் குமரனே
எத்திசை யும்பணியும் எழிலாறு முகம் கொண்டாய்
நித்தமும் போற்றுகிறோம் நிம்மதி தந்திடையா!

*-சைவப்புலவர் செ. கந்த சத்தியதாசன்*

**நல்லைக் கோயிலுறை நாயகனே!**

இருடன்னிற் கிடக்குமெனை வெளியே தூக்கி
யெடுத்தருள வேண்டுமையா விலங்கு நாட்டங்
குருடுகொண்டோன் கயத்துறையில் வீழ்ந்தால் யாருங்
கூடிநின்று பார்ப்பரோ கொள்வ ரன்றோ
பெருகுபல வின்கனியின் பிரச மோடிப்
பீடுடைய செஞ்சாலி பெருக்கு நல்லைக்
குருபரனே குடவளையின் முழக்க நீங்காக்
கோயிலுறை நாயகனே குமர வேளே!

*-பண்டிதர் நெ.வை.செல்லையா*
*நல்லைச் சண்முகமாலை)*

# வரலாற்றுப் பெருமைமிக்க நல்லூரின் சிறப்பு

நல்லூர் நல்ல ஊர். யாழ்ப்பாணத்து நல்லூர், தமிழ்நாட்டு திருவெண்ணெய் நல்லூர், ஆதித்த நல்லூர் போன்ற அரும் பெருஞ் சிறப்பு வாய்ந்த பழைய நகர். நல்லூரைத் தலைநகராகக் கொண்டு ஆரியச்சக்கரவர்த்திகள் அகன்ற பெருநிலப் பரப்பை அரசு செய்த போது தமிழ்நாட்டு இராமேஸ்வரத்தையும் பரிபாலித்து சேதுகாவலர் என்னும் சிறப்புப் பட்டமும் பெற்றிருந்தார்கள்.

தமிழ் தெய்வமாம் முருகனுக்குத் தமிழ் மக்கள் வதியும் இடமெல்லாம் கோயில்கள் எழுப்பப பட்டுள்ளன. முருகனுக்கும் தமிழுருக்குமிடையில் உள்ள தொடர்பு வரலாற்றுக்கும் அப்பாற்பட்டதெனலாம்.

செந்தமிழும் சைவ நெறியும் தலையெடுத்த நல்லூரின் பழைய அரசிருக்கைக்கு அருகிலமர்ந்த நல்லூர்க் கந்தனாலயத்தைச் சூழ நாற்றிசையிலும் காவற் கோயில்கள் அமைந்திருந்தன. கிழக்கில் வெயிலுகந்த பிள்ளையார் கோயில், தெற்கில் கைலாசநாத சிவன் கோயில், மேற்கில் வீரமாகாளி அம்மன் கோயில், வடக்கில் சட்டநாதர் சிவன் கோயில் அமைந்திருந்தன. அரசர்கள் நந்திக் கொடியும் நந்தி முத்திரையும் கொண்டவர்களாய்ப் பரிபாலனம் செய்தனர்.

கல்வளை அந்தாதி பாடிய சின்னத்தம்பிப் புலவர், அவரது தந்தையாராகிய வில்லவராய முதலியார், ஆறுமுக நாவலர் போன்ற அறிஞர் பெருமக்களும் நல்லூரின் பெருமைக்குக் காரணமாயிருந்தனர்.

ஈழத்துச் சித்தர் பரம்பரையில் முன்னோடியாகவும் முதல்வராகவும் திகழ்ந்த முத்தியானந்தர் என்ற பெயரையுடைய கடையிற் சுவாமிகளுடைய நடமாட்டம் ஏற்பட்ட பின் நல்லூரில் ஒரு தெய்வீக அலை வீசத் தொடங்கியது. நாள் தோறும் வளர்ந்துவந்த நல்லூரின் சிறப்பும் வனப்பும் புகழ் பெற்றனவாயின. கிழக்குப் புறத்தில் அமைந்த தேரடிக்குத் தனிச்சிறப்பு உண்டாகியது. அங்கே காவல் தெய்வமாய் வைரவக் கடவுளின் ஆனந்த கோலாகல அருள் வீச்சும், அதனால் கவரப் பெற்ற அடியார் கூட்டமும் கருங்கல் மனத்தையும் கரையப் பண்ணின. கற்பூர வரிசையும் காவடிகள் வரிசையும், கந்தன் மீது பக்திப் பாடல்கள் வரிசையும் தேரடியைத் தெய்வலோகம் ஆக்கின.

**"ஒரு பொல்லாப்பு மில்லை**
**நாமறியோம், ஆரறிவார்?**
**எப்பவோ முடிந்த காரியம்**
**முழுதும் உண்மை."**

என்ற மகா வாக்கியங்களை யோகர் சுவாமிகளுக்கு உபதேசம் செய்து ஆட்கொண்ட செல்லப்பா சுவாமிகள் தேரடியில் இருக்கத் தொடங்கியபின் அந்த இடத்தில் ஓர் ஆத்மீக அலை வீசத் தொடங்கியது.

# இன்றைய சிறப்பு நிகழ்ச்சிகள்

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில்**

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் சிறப்பு நிகழ்ச்சித் தொடரில் இன்று சைவப்புலவர் கா. கமலநாதன் "கிரியைகளின் பயன்" என்ற பொருளில் சொற்பொழிவாற்றுகிறார்.

மாலை 3.00 மணிக்கு ஆரம்பமாகும் இன்றைய நிகழ்வின்போது சங்கானை மாவடி ஞானவைரவ அறநெறிப் பாடசாலை மற்றும் சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தான அறிநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்ச்சிகள் சிறப்பு அம்சங்களாக இடம்பெறவிருக்கின்றன. (க)

***************************************************

**துர்க்காதேவி மணி மண்டபத்தில்**

நல்லூர் இளங்கலைஞர் மன்றம், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் ஏற்பாடு செய்து நடத்தும் தெய்வீக இசையரங்கு நிகழ்ச்சித் தொடரில் இன்று திருமதி யசோதா ஸ்ரீகுமரன், திருமதி கவிதா தில்லைராசா ஆகியோர் வழங்கும் இன்னிசை இடம்பெறுகிறது.

மாலை 7.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும் இந்நிகழ்வின்போது திருமதி கயல்விழி ரகுநாதன் (வயலின்) என். சதீஸ்குமார் (மிருதங்கம்), ஏ. செல்வரத்தினம் (கடம்) ஆகியோர் பக்கவாத்தியம் வழங்குவார்கள் (க)

***************************************************

**நடராசா பரமேஸ்வரி மணி மண்டபத்தில்**

சைவத் தமிழ் பண்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடந்துவரும் தெய்வீகப் பேருரைத் தொடரில் இன்று சைவப்புலவர் கா. கமலநாதன் "கிரியை வழிபாடு" என்ற பொருளில் சொற்பொழிவாற்றுகிறார்.

மாலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்நிகழ்வு கழகத்தின் அமைப்பாளர் மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் தலைமையில் இடம்பெறும். (க)

# கந்தன் கருணையும் கதிர்காமப் பெருமையும்


**கந்தன் கருணை**

முருகப் பெருமான் அசுரருடன் சமர்புரிந்து வென்ற இடம் எதுவென்பது பற்றி மாறுபட்ட கருத்துக்கள் எழுந்துள்ளன. பண்டைக் காலந் தொட்டு முருகனுறையும் தலங்களாக பல பிரசித்தி பெற்ற சைவத்தலங்கள் உள. அவற்றுள் சிறந்த திருப்பதிகள் ஆறுபடை வீடுகள் காணப்படுகின்றன திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் எனப்படும் திருச்செந்தூர், திருவாவினன்குடி எனப்படும் பழனி (பழம் நீ), திருஏரகம் எனப்படும் சுவாமிமலை, குன்று தோறாடல் எனப்படும் திருத்தணிகை, பழமுதிர்ச்சோலை எனப்படும் அழகர்மலை என்பனவே முருகனின் ஆறுபடை வீடுகளாகும்.

மேற்கூறிய திருப்பதிகளில் ஒன்றிலாவது ஏழுமலைத் தொடர் கிடையாது. இருந்தும் திருப்பரங்குன்றமே கந்தனின் உறைவிடமென்று பலர் கருதுகிறார்கள். உலகை வலம்வந்து சிவனிடமிருந்து மாம்பழத்தைப் பரிசாகப் பெறுவதில் அண்ணன் கணேசனிடம் தோல்வியுற்றதால் ஆத்திரமும் அவமானமும் கொண்டு பழனியம்பதியை நாடினான். மேற்குறிப்பிட்ட பதிகளில் ஒன்றிலாவது வள்ளியை மணம்புரிந்ததாக சான்றுகளில்லை. கதிர்காமத்தில் மட்டுமே ஏழுமலைத் தொடர் உண்டு. கதிர்காமத்தில் தான் வள்ளியை கந்தன் காதல் மணம் புரிந்தான் என்பதற்கு அத்தாட்சிகளும் இருக்கின்றன. தேவேந்திரன் மகளான தெய்வயானையை முருகன் திருமணம் செய்து கொண்ட திருத்தலமாக திருப்பரங்குன்றம் சொல்லப்படுகிறது.

**கதிர்காமக் கந்தன் சிறப்பு**

ஆதிகாலத்தில் இலங்கையும் தென்பாரதமும் ஒன்றாயிருந்தது என்பது வரலாற்றுத் தகவல். பின்னர் ஏற்பட்ட கடல்கோளினால் இலங்கை தனிப்பட்ட தீவாகும் வரை - இந்தியாவின் பல பாகங்களிலுமிருந்து, ஏன் வடமேற்கு எல்லையிலிருந்துங் கூட முருக பக்தர்கள் கந்தனை வழிபடுவதற்கு பாதயாத்திரையாக கதிர்காமத்திற்கு வந்திருக்கிறார்கள். கடற்பிரிவு ஏற்பட்டபின் கடல் கடந்து யாத்திரை செய்ய முடியாதவர்கள் திருச்செந்தூரில் கந்தப் பெருமானை வழிபாடு செய்தனர். பிராமண குலத்தினர் கடல்கடந்து யாத்திரை செய்தால் அவர்கள் தூய்மையற்று விடுவார்களென்று சாஸ்திர விதியுண்டு. இதன் காரணமாக திருச்செந்தூர் பிரபலமடைந்ததால் காட்டின் மத்தியில் உள்ள கதிர்காமம் கைவிடப்பட்டது.



கதிர்காமத்தில் மூன்று முக்கிய கோயில்கள் உள்ளன. அதிமுக்கியமானது கந்தன் எழுந்தருளியிருக்கும் கோயில். சிங்களத்தில் மகா தேவாலே (பெரிய கோயில்) என்பர். நேர் எதிரே ஆயிரம் அடி தூரத்தில் உள்ளது வள்ளியம்மன் கோயில். வடகிழக்கே சுமார் 150 அடி தூரத்தில் உள்ளது தெய்வயானை அம்மன் கோயில். இம்மூன்று கோயில்களிலும் நித்திய பூசைகள் இன்றும் நடைபெறுகின்றன. தெய்வயானை, வள்ளி, கந்தன் ஆகிய மூவருக்கும் தனித்தனி கோயில்கள் ஒரே இடத்தில் அமைந்திருப்பதை அகில பாரதத்தில் ஓரிடத்திலாவது காணமுடியாது. கதிர்காமத்தில் மட்டுமே இந்தச் சிறப்பைக் காணலாம்.

# அமெரிக்க சீக்கிய கோவிலில் 7 பேரை சுட்டுக் கொன்றவர் முன்னாள் இராணுவ அதிகாரி



அமெரிக்காவின் விஸ்கான்சின் மாகாண சீக்கியர் கோவிலில் துப்பாக்கி சூடு நடத்தியவர் முன்னாள் இராணுவ வீரர் என்ற அதிர்ச்சி தகவல் தற்போது வெளியாகி உள்ளது.

அமெரிக்காவின் விஸ்கான்சின் மாகாணத்தில் உள்ள ஓக் கிரிக் பகுதியில் சீக்கியர் கோவில் உள்ளது.

ஏழாண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட இந்த கோவிலில் நேற்று முன்தினம் பக்தி சொற்பொழிவு நடந்தது.

இந்தியாவிலிருந்து வந்தவர் சொற்பொழிவாற்றியதால் 400க்கும் அதிகமான சீக்கியர்கள் இந்த கோவிலில் கூடியிருந்தனர்.

அப்போது குருத்வாராவுக்குள் நுழைந்த மர்ம ஆசாமி திடீரென பக்தர்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டான். இதில் ஆறு பேர் பலியாகினர், ஒரு பொலிஸ் அதிகாரி உட்பட மூன்று பேர் காயமடைந்தனர்.

பொலிசார் நடத்திய பதிலடி தாக்குதலில், மர்ம ஆசாமி கொல்லப்பட்டான். இந்த சம்பவம் குறித்து அமெரிக்க எப்.பி.ஐ அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். இச்சம்பவத்தை உள்நாட்டுப் பயங்கரவாதச் செயலாகக் கருதுவதாக, விஸ்கான்சின் பொலிஸ் அதிகாரி ஜான் எட்வர்டு தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் துப்பாக்கி சூடு நடத்தியவர் முன்னாள் இராணுவ வீரர் என்பது தெரியவந்துள்ளது. இவர் ஓக் கிரிக் பகுதியில் வாடகைக்கு குடியிருந்துள்ளார்.

இந்த குடியிருப்பை வாடகை விட்ட குர்த் வீன்ஸ் தன்னுடைய சமூக வலைதளத்தில் குறிப்பிடுகையில், சிகாகோ நகரைச் சேர்ந்தவர் என்றும், இராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவர் என்றும், 40 வயது மதிக்கத்தக்க வழுக்கை தலையானவர் என்றும் தெரிவித்துள்ளார்.

வெள்ளையின வெறியராக இவர் இருக்கலாம். எனவே இவருடைய பெயரை தெரிவிக்க வேண்டாம் என குர்த் வீன்சிடம் பொலிசார் வற்புறுத்தியுள்ளனர்.

# இங்கிலாந்தில் மகளின் காதலன் மீது இனவெறி தாக்குதல்: பெற்றோருக்கு சிறைத் தண்டனை

தனது மகள் கறுப்பின ஆண் நண்பருடன் பேசிக் கொண்டிருப்பதை பார்த்த பெற்றோர், கோபத்தில் இனவெறி தாக்குதல் நடத்திய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இங்கிலாந்தின் சுவன்சீ பகுதியைச் சேர்ந்தவர்கள் டேவிட் மற்றும் பிரான்செஸ் சாம்பியன். இவர்களது மகள் ஜானே சாம்பியன் (வயது 17).

இவர் தனது கறுப்பின ஆண் நண்பரான அப்லோன்ஸ் க்யூப்வுடன் உணவகம் ஒன்றில் பேசிக் கொண்டிருப்பதை பார்த்தனர்.

இதை தங்கள் குடும்பத்திற்கு அவமானமாக கருதிய தம்பதியர், இருவரையும் கையால் குத்தியும் அடித்தும் கடுமையாக தாக்கியுள்ளனர்.

இதில் பலத்த காயமடைந்த அந்த கறுப்பின வாலிபரின் பெற்றோர்கள் இது குறித்து நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். இவ்வழக்கை விசாரித்த நீதிமன்றம் ஜானே சாம்பியனின் தந்தைக்கு 12 மாதங்களும், தாய்க்கு 9 மாதங்களும் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

மது அருந்திவிட்டு குடிபோதையில் அவ்வாறு செய்ததாக குற்றத்தை ஒத்துக் கொண்ட அவர்கள், தற்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

# போராட்டக்காரர்களுடன் இணைந்தார் சிரிய பிரதமர்: ஜனாதிபதிக்கு பலத்த அடி



சிரியா பிரதமர் ரியாட் ஹிஜாப் அரசாங்கத்திலிருந்து விலகி, போராட்டக்காரர்களுடன் இணைந்துள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளது.

ஜனாதிபதி பஷர் அல் அசாத்திற்கு எதிரான போராட்டம் ஆரம்பமானதில் இருந்து, அரசாங்கத்திலிருந்து விலகிச் சென்ற மிக உயர் பிரமுகர் ரியாட் ஹிஜாப் ஆவார்.

இவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக சிரியா அரசாங்க தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் ரியாட் ஹிஜாப் குடும்பத்துடன் தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அவர் ஜோர்தானுக்கு சென்றுள்ளதாக முன்னர் செய்திகள் வெளியாகின. எனினும் அச்செய்திகளை ஜோர்தான் நிராகரித்துள்ளது.

# சோம்பேறிகள் மிகுந்த நாடுகளின் பட்டியலில் இங்கிலாந்து



உலகில் மொத்தம் 122 நாடுகளில் மக்களின் நிலை குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

அதில் சோம்பேறிகள் மிக அதிகம் உள்ள நாடுகளில் ஒன்றாக இங்கிலாந்து இருப்பது தெரிய வந்துள்ளது.

இங்குள்ள மக்கள் தொகையில் 63.3 சதவிகிதம் பேர் வேலை எதுவும் செய்யாமல் சோம்பேறியாக உள்ளனர்.

மால்டாவில் 71.9 சதவிகிதம் பேரும், சுவிட்சர்லாந்தில் 69 சதவிகிதம் பேரும் வேலை ஏதும் செய்யாமல் பொழுதை கழிக்கின்றனர்.

சவுதி அரேபியா உள்ளிட்ட ஐக்கிய அரபு எமிரேட் நாடுகளில் 62.5 சதவிகிதம் பேரும், தென் ஆப்பிரிக்காவில் 52.4 சதவிகிதம் பேரும், பூடானில் 52.3 சதவிகிதம் பேரும், வட அமெரிக்காவில் 40 சதவிகிதம் பேரும் சோம்பேறியாக உள்ளனர்.

சோம்பேறிகள் நிறைந்த நாடுகள் பட்டியலில் மால்டா, சுவிட்சர்லாந்து, சவுதி அரேபியா, ஐக்கிய அரபு நாடுகள் மற்றும் பூடான் ஆகிய நாடுகள் 20-வது இடத்தில் உள்ளன.

வட அமெரிக்கா 46 வது இடத்தில் உள்ளது. சோம்பேறிகள் மிகவும் குறைந்த நாடாக கிரீஸ் திகழ்கிறது.

# உலக பார்வை

## சீனாவில் கடும் சேதத்தை ஏற்படுத்திய டாம்ரே புயல்: நிலச்சரிவில் சிக்கி மக்கள் தவிப்பு



சீனாவில் டாம்ரே புயல் காரணமாக தொடர்ந்து கனமழை பெய்து வருவதால், பல்வேறு இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.

தேஜியா என்ற கிராமத்தில் நேற்று காலையில் ஏற்பட்ட நிலச்சரவில் 200க்கும் மேற்பட்டோர் சிக்கியுள்ளனர்.

இவர்களில் 80 பேர் இன்று பிற்பகல் மீட்கப்பட்டதாக உள்ளூர் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.



நாடு முழுவதும் கடும் சேதத்தை ஏற்பத்திய டாம்ரே புயலால், சுமார் 20 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு லட்சத்து 10 ஆயிரம் பேர் வீடுகளை இழந்துள்ளனர்.

சாண்டோகே மற்றும் ஜிகி ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதால், பென்ஸி நகரில் கட்டுமானப் பணி நடைபெற்ற பகுதி மூழ்கியது.

அதில் சிக்கிய 300 தொழிலாளர்களை தீயணைப்பு வீரர்கள் கயிறு கட்டி வெளியே இழுத்து காப்பாற்றினர்.

மத்திய சீனாவின் ஹியூபே மாகாணத்தில் மழை வெள்ளத்தில் 100க்கும் மேற்பட்டோர் சிக்கி தவிப்பதாக மற்றொரு செய்தி தெரிவிக்கிறது.



தென் ஆபிரிக்க, குனுவில் உள்ள முன்னாள் தென் ஆபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலாவை அவரது வீட்டில் சந்தித்த அமெரிக்க செயலாளர் ஹிலாரி கிளின்டன்

## பாலியல் அடிமைகளாக நடத்தப்படும் சிறுமிகள்

வட ஆபிரிக்க நாடானமாலியில் செயல்படும் தீவிரவாத குழுக்களில் சிறுவர்கள் கட்டாயமாக சேர்க்கப்படுகவதாக சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனம் கவலை தெரிவித்துள்ளது.

இது குறித்து மாலியில் செயல்படும் குழந்தைகள் நல அமைப்பு கூறுகையில், சிறுவர்களை ஆயுத பயிற்சி அளிப்பது, கண்ணி வெடிகளை அகற்ற பயன்படுத்துவது, உளவு வேலை பார்க்க அனுப்புவது, சமையல் பணியில் ஈடுபடுத்துவது உள்ளிட்டவற்றுக்கு பயன்படுத்துகின்றனர்.

சிறுமிகளாயிருந்தால் அவர்களை பாலியல் அடிமைகளாக நடத்துகின்றனர் என்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக குழந்தைகள் நல அமைப்பின் தலைவர் மௌமூத் லாமைன் சிப்ஸ கூறுகையில், தீவிரவாத குழுக்களில் கட்டாயமாக சேர்க்கப்படும் இச்சிறுவர், சிறுமிகளில் பெரும்பாலானோர் மாலி, செனகல் மற்றும் நைஜேரைச் சேர்ந்தவர்களாவர்.

இத்தகைய கொடூரமான செயலை தடுத்து நிறுத்த சர்வதேச அமைப்புகள் முன் வர வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்தார்.

இப்போது மாலியின் வடக்குப் பகுதியில் தீவிரவாத குழுக்கள் சிறுவர்களை தேர்ந்தெடுத்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

ஒருகாலத்தில் ஸ்திரமான ஜனநாயக நாடாகக் கருதப்பட்ட மாலியில் தற்போது உள்நாட்டுக் கலவரம் அதிகம் காணப்படுகிறது.

மாலியில் இப்போது இரண்டு குழுக்கள் செயல்படுவதால் ஸ்திரமான அரசை உருவாக்க முடியவில்லை.

கடந்த மார்ச் மாதம் 22ஆம் திகதி ஆட்சி கவிழ்ப்பு முயற்சியும் நடந்தது. பொதுவாக வடக்குப் பகுதியில் தான் அடிக்கடி இதுபோன்ற கலவரங்கள் ஏற்படுகின்றன.

# இந்தியர்களின் உயிருக்கு போதிய பாதுகாப்பு வேண்டும்


## கிருஷ்ணா வலியுறுத்தல்

அமெரிக்காவின் விஸ்கான்சின் மாகாணத்தில் உள்ள குருத்வாரா வில் நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக முழுமையான விசாரணை நடத்தப்படவேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக அமெரிக்கா வின் வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டனை இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

அப்போது அமெரிக்காவில் உள்ள வழிபாட்டுத் தலங்களில் பாதுகாப்புகளை பலப்படுத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

மேலும் அமெரிக்காவில் வாழும் இந்தியர்களின் உயிருக்கும் உடைமைக்கும் போதிய பாதுகாப்பு



அளிக்கப்படும் என்கிற உறுதியை அந்நாட்டு அரசு வழங்க வேண்டும் என்றும் கிருஷ்ணா கேட்டுக்கொண்டதாக தெரிகிறது.

இந்தியர்களின் பாதுகாப்புக்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று ஹிலாரி கிளிண்டன் உறுதி அளித்ததாகவும் வெளிவிவகாரத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

அமெரிக்காவின் விஸ்கான்சின் மாகாணத்தில் உள்ள குருத்வாரா ஒன்றில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற தாக்குதலில் 6 இந்தியர்கள் பலியானார்கள். காவல் துறையினர் நடத்திய பதில் தாக்குதலில் துப்பாக்கி சூடு நடத்திய நபரும் சுட்டுக்கொல்லப்பட்டார்.


வேட் மைக்கேல் பேஜ் என்ற அந்த நபர் தனியாக இந்த துப்பாக்கிச் சூடு தாக்குதலில் ஈடுபட்டதாக அமெரிக்க காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். அவர் நிறவெறி அமைப்புகளுடன் நீண்ட காலமாக தொடர்பு வைத்திருந்ததும் தெரியவந்துள்ளது.

# இந்திய செய்திகள்

# டுபாயில் பதுக்கி வைத்த ராசாவின் பணம் கண்டுபிடிப்பு

## "ரா" உளவுப் பிரிவு

டுபாயில் உள்ள Emirates NBD வங்கியில் ஆ.ராசாவின் பணம் என்று கருதப்படும் ரூ.110 கோடி ராஜேஷ் ஜெயின் என்பவரின் கணக்கில் பினாமி யாக முதலீடு செய்யப்பட்டுள்ளதாக "ரா" உளவுப் பிரிவு தெரிவித்துள்ளது.



இந்தப் பணம் முறைகேடான ஹவாலா முறையில் இந்தியாவிலிருந்து துபாய்க்கு வந்து சேர்ந்துள்ளதாகவும் "ரா" கூறியுள்ளது.

2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டு ஊழல் தொடர்பாக முன்னாள் தொலைத் தொடர்பு துறை அமைச்சர் ஆ.ராசா, அந்தத் துறையின் சில அதிகாரிகள், தொலைத் தொடர்பு நிறுவன அதிபர்கள், திமுக எம்.பி கனிமொழி, கலைஞர் டிவி முன்னாள் நிர்வாகி சரத்குமார் என பலர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் பிணையில் வெளியே வந்துவிட்டனர்.

இந்த வழக்கு டெல்லி சிபிஐ சிறப்பு நீதிமன்றத்தில் விசாரிக்கப் பட்டு வருகிறது. இந்த விவகாரத்தில் பொருளாதாரக் குற்றங்கள், அன்னிய செலாவணி முறைகேடுகள், வெளிநாட்டு தொடர்புகள் போன்ற அம்சங்கள் அடங்கி இருப்பதால் இது குறித்து சி.பி.ஐ. மற்றும் அமலாக்கப் பிரிவு ஆகியவற்றுடன் இந்தியாவின் வெளிநாட்டு உளவுப் பிரிவான "ரா" உளவு அமைப்பும் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் விசாரணை நடத்தி வருகின்றது.

# கிரனைற் முறைகேட்டில் கருணாநிதி பேரன் துரை தயாநிதி சிக்கினார்

தமிழ்நாட்டில் கிரனைற் முறைகேடு தொடர்பாக Cloud Nine Movies துரை தயாநிதி மீதும், அவரின் பங்குதாரர் நாகராஜ் மீதும் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

துரை தயாநிதி, மத்திய அமைச்சர் மு.க.அழகிரியின் மகன் ஆவார். இவரும் நாகராஜ் என்பவரும் ஒலிம்பஸ் என்ற கிரானைட் நிறுவனத்தை நடத்தி வருகின்றனர்.

இந்த நிறுவனம், அரசு நிலத்தில் உள்ள கிர னைற் குவாரிகளில் இருந்து கற்களை வெட்டி எடுத்துள்ளதை என மதுரை கலெக்டர் சகாயம் மற்றும் அதிகாரிகளின் ஆய்வில் தெரியவந்துள்ளது. இதையடுத்து இவர்கள்



மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்களின் அமைதிக்கு இடையூறாக இருப்பதுடன், அவர்களது வாழ்வாதாரத்திற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாகவும் கூறி, ரங்கசாமிபுரத்தில் உள்ள சிந்து கிரனைற் குவாரிக்கு அதிகாரிகள் நேற்று சீல் வைத்துள்ளனர்.

மேலும் பி.ஆர்.பி கிரனைற் நிறுவன உரிமையாளர் மீது, சட்டவிரோதமாக பொது இடத்தை ஆக்கிரமித்தல், ஆதாரங்களை அழித்தல், பொதுச் சொத்தைத் திருடுதல், அரசு சொத்துக்களைச் சேதப்படுத்துதல் ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டத்தில், கிரானைட் குவாரிகளால் அரசுக்கு சுமார் ரூ.16 ஆயிரம் கோடி அளவுக்கு இழப்பு ஏற்பட்டதாக, அங்கு ஆட்சிய ராக இருந்த சகாயம், தமிழக அரசுக்கு அறிக்கை அனுப்பியிருந்தார்.



முதல்வர் ஜெயலலிதா, கோடநாட்டிலிருந்து சென்னை செல்வதை காண, எஸ்டேட் கேற் அருகே கொட்டும் மழையிலும் காத்திருந்த படுகரின பெண்கள்.

# மீண்டும் அசாமில் கலவரம் வெடித்தது: பலி எண்ணிக்கை 64 ஆக உயர்வு

அசாம் மாநிலத்தின் கோக்ராஜ்கர் பகுதியில் பாதுகாப்பு படையினருக்கும், கலவரக்காரர்களுக்கும் இடையே நேற்று காலை நடந்த துப்பாக்கிச்சூட்டில் 3 பேர் பலியாயினர்.

அசாம் மாநிலத்தில் கடந்த சில தினங்களுக்கு முன்பு ஓய்ந்த கலவரம் மீண்டும் வெடிக்கத் தொடங்கியுள்ளது.

இதனால் கடந்த சில நாட்களில் உயிரிழந்தவர்களின் எண்



ணிக்கை 64 ஆக உயர்ந்துள்ளது.

ராணிகுலி பொலிஸ் நிலையத்தைக் குறிவைத்து கலவரக்காரர்கள் நடத்திய தாக்குதலை கட்டுப்படுத்த பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

இதில் 3 பேர் பலியாயினர். 2 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

கடந்த 48 மணி நேரத்தில் அசா மில் நடைபெற்ற 2வது துப்பாக்கிச்சூடு தாக்குதல் இது என்பது குறிப்பிடத்தக்கது.

# அ.தி.மு.கவை ஆட்சியிலிருந்து எளிதில் அகற்றி விடலாம்

## விஜயகாந்த்

ஜெயலலிதாவின் வழக்குகளைக் கண்டு அஞ்சாபோவதில்லை என்றும் அ.தி.மு.கவை எளிதில் ஆட்சியை விட்டு அகற்றி விடலாம் எனவும் விஜயகாந்த் அதிரடியாக அறிவித்துள்ளார்.

தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த் மீது முதல்வர் ஜெயலலிதா அவதூறாக பேசியதன் காரணமாக வழக்கு தொடர்ந்துள்ளார்.

இது குறித்து விஜயகாந்த் கூறியதாவது, தி.மு.க.வை கஷ்டப் பட்டு ஆட்சியிலிருந்து அகற்றினோம்.

இந்நிலையில் அ.தி.மு.க்.வை எளிதில் ஆட்சியை விட்டு அகற்றி விடலாம். இனி அவர்கள் ஆட்சிக்கு வரமுடியாது என்றார்.

மேலும் ஜெயலலிதா தன் மீது தொடர்ந்துள்ள வழக்குகளுக்கு அஞ்சப்போவதில்லை என தைரியமாக விஜயகாந்த் கூறினார்.

# இன்ஜினியரிங் கல்லூரி இடிந்து விழுந்ததில் ஒன்பது பேர் பலி

காஞ்சிபுரம் அருகே கட்டடம் இடிந்து விழுந்ததில் 9 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர், மேலும் பலர் கட்டட இடிபாடுகளிடையே சிக்கி படுகாயம் அடைந்துள்ளனர்.

காஞ்சிபுரம் மாவட்டம் சுங்குவார் சத்திரம் அருகே உள்ள குன்னம் என்ற இடத்தில் தனியார் இன்ஜினியரிங் கல்லூரிக்காக புதிதாக 4 மாடிகளைக் கொண்ட கட்டடம் ஒன்று கட்டப்பட்டு வருகின்றது.

இதில் அசாமைச் சேர்ந்த தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இந்நிலையில், நேற்று மாலை திடீரென அந்த கட்டடம் இடிந்து விழுந்தது.

இதில் இந்த இடிபாடுகளிடையே சிக்கி 9 பேர் பலியாகினர். மேலும் 6 பேர் காயமடைந்து காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற இந்தியர்களுக்கு அபிஷேக் வாழ்த்து

லண்டனில் நடந்து வரும் ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் வென்ற இந்தியர்களுக்கு பாலிவுட் நடிகர் அபிஷேக் பச்சன் வாழ்த்து கூறியுள்ளார். லண்டனில் 30வது ஒலிம்பிக் போட்டிகள் கோலகலமாக நடைபெற்று வருகின்றது. இப்போட்டிகளில் சீனா, அமெரிக்கா, இந்தியா உட்பட 204 நாடுகள் விளையாடுகின்றது.

இப்போட்டிகளில் பதக்கம் வென்ற இந்திய வீரர்களுக்கும், பதக்கங்களை வேட்டையாட காத்திருக்கும் குத்துச்சண்டை வீராங்கனை மேரி கோம் உள்ளிட்ட வீரர்களுக்கும் இந்திய பாலிவுட் நட்சத்திரம் அபிஷேக் பச்சன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

லண்டனில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற அபிஷேக் பச்சன், இந்தியாவில் கிரிக்கெட் விளையாட்டைப் போல மற்ற விளையாட்டுகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

# ஒலிம்பிக் குழுவுக்கு பயிற்சியாளர் இல்லை செலவை குறைக்கவா? அனுராத கூரே கேள்வி

லண்டன் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக லண்டன் சென்றுள்ள இலங்கை விளையர்ட்டுக் குழுவில் பயிற்சியாளர்கள் எவரும் இடம்பெறவில்லை என்று வீரர் ஒருவர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக 7 விளையாட்டு வீரர்களைக் கொண்ட இலங்கை அணி லண்டன் சென்றுள்ள போதிலும், அவர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கு அவர்களது பயிற்சியாளர்கள் எவரும் செல்லவில்லை என்று அவர் குற்றம் சாட்டுகிறார்.

அந்த அணியில் அதிகாரிகள் பலர் வந்திருப்பதாகவும், ஆனால் பயிற்சியாளர்கள் எவரும் இடம் பெறவில்லை என்றும் ஆண்களுக்கான மரதன் போட்டியில் கலந்து கொள்ளும் அநுராத கூரே கூறியுள்ளார்.


"ஒரு அணியில் உள்ள வீரர்கள் என்ன செய்ய வேண்டும், அவர்களது தேவை என்ன, இலக்கு என்ன, முக்கியத்துவம் என்ன என்பது அவர்களது பயிற்சியாளர்களுக்குத்தான் தெரியும். பயிற்சியாளர் இருக்கும் போது ஒரு விளையாட்டு வீரர் தான் வழமையாக செயற்படுவதைவிட சிறப்பாகவும், தன்னம்பிக்கையுடனும் செயற்படுவார். ஆனால் இலங்கை அணியில் எவரும் கிடையாது" என்றார் அவர்.

தான் லண்டனிலேயே இருந்து, தனது சொந்த பயிற்சியாளரை வைத்திருப்பதால், தனக்கு அது நல்லதாகப் போய்விட்டது என்றும் அவர் கூறினார்.

ஒரு விளையாட்டு வீரரின் பலமே அவரது பயிற்சியாளர்தான் என்று கூறும் அநுராத கூரே, செலவுக் குறைப்புக்காக இலங்கை அணி இவ்வாறு செய்துள்ளதா என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

லண்டன் ஒலிம்பிக்ஸில் இது வரை நடந்த போட்டிகளில் தெற்காசிய அணிகள் பெரிதாக சோபிக்கவில்லை.

இந்திய அணி இரு பதக்கங்களை மாத்திரம் பெற்றிருக்கின்ற போதிலும், இலங்கை அணி இது வரை பதக்கம் எதனையும் பெறவில்லை.




எந்த தெற்காசிய அணி யும் இந்த போட்டியில் தங்கப் பதக்கத்தை பெறவில்லை.

இன்று பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி நடந்தது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடக்கவிருக்கும் மரதன் போட்டியிலேயே ஆண்களுக்கான பிரிவில் அநுராதகுரே கலந்துகொள்கிறார்.

# சாய்னாவின் வெற்றிக் கொண்டாட்டம்

தங்கப் பதக்கத்தை இழந்த சோகத்தை வெண்கலப் பதக்கம் வென்று ஈடு செய்தார் சாய்னா. சாய்னாவை எதிர்த்து விளையாடிய சீன வீராங்கனை தசைப் பிடிப்பு காரணமாக போட்டியிலிருந்து விலகியதால் சாய்னா வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, வெற்றியின் மகிழ்ச்சியை சிறப்பிக்க துரித உணவுகளை தனது பயிற்சியாளர் முன்பே உண்டதோடு, அவரையும் சாப்பிட வைத்தார் சாய்னா. ஒலிம்பிக்கில் பங்கேற்பதால் துரித உணவுகள், கொழுப்பு அடங்கிய உணவுப் பொருட்களை சாப்பிடக் கூடாது என்று சாய்னாவுக்கு உணவுக் கட்டுப்பாடு விதித்திருந்தார் அவரது பயிற்சியாளர் கோபிசந்த்.




இந்நிலையில், இந்த வெற்றியை சிறப்பிக்காமல் இருப்பது தவறு என்றும், எனவே தான் சாய்னாவுடன் சேர்ந்து தானும் விரும்பும் பொருட்களை உண்டு வெற்றியை கொண்டாடியதாகவும் கூறினார்.

# வேகத்தின் சொந்தக்காரன் உசைன்!

ஆண்கள் 100 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் நடப்பு சாம்பியன் உசேன் போல்ட் (ஜமைக்கா) புதிய ஒலிம்பிக் சாதனையுடன் தொடர்ந்து 2ஆவது முறையாக தங்கப் பதக்கம் வென்று அசத்தினார். உசைன் போல்ட்டுடன் சக ஜமைக்கா வீரரும் உலக சம்பியனுமான யோகன் பிளேக், அசபா பாவெல், அமெரிக்காவின் நட்சத்திர வீரர்கள் ஜஸ்டின் காட்லின் (2004 ஒலிம்பிக் சாம்பியன்), டைசன் கே என உலகின் முன்னணி வீரர்கள் இறுதிக்குத் தகுதி பெற்றதால், இந்த போட்டியை ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்தனர்.

அதிவேக வீரர் யார் என்பதை அறிவதற்காக லண்டன் ஒலிம்பிக் ஸ்ரேடியம் நிரம்பி வழிந்தது. கடந்த சில போட்டிகளில், தவறான தொடக்கம் காரணமாக தகுதிநீக்கம் செய்யப்பட்டிருந்ததால், உசைன் போல்ட் மிகவும் கவனமாக செயல்பட்டார். மற்ற வீரர்களை விட சற்று தாமதமாகவே ஓட்டத்தை தொடங்கினாலும், 50 மீற்றருக்கு பிறகு அவர் சிறுத்தைப் பாய்ச்சலில் முன்னேறினார். மின்னல் வேகத்தில் எல்லோரையும் முந்திய போல்ட் 9.63 விநாடிகளில் பந்தய தூரத்தைக் கடந்து தங்கப்பதக்கத்தை தட்டிச் சென்றார்.




எனினும் அவரால் தனது முந்தைய உலக சாதனையை (9.58 விநாடி, பேர்லின், ஆக. 2009) முறியடிக்க முடியவில்லை. ஜூலையில் நடந்த ஒலிம்பிக் தகுதிப் போட்டியில் சக ஜமைக்கா வீரர் யோகன் பிளேக்கிடம் தோற்றிருந்ததாலும், தசைநார் காயத்தால் அவதிப்பட்டு வந்ததாலும், ஒலிம்பிக் இறுதியில் போல்ட்டால் சாதிக்க முடியாது என்ற விமர்சகர்களின் கருத்தை தவிடு பொடியாக்கிய அவர், பீஜிங் ஒலிம்பிக்கை தொடர்ந்து லண்டனிலும் அதிவேக வீரர் என்ற பெருமையை தக்கவைத்துக் கொண்டார். சக ஜமைக்கா வீரர் யோகன் பிளேக் (9.75 வி.) வெள்ளிப் பதக் கமும், அமெரிக்காவின் ஜஸ்டின் காட்லின் (9.79) வெண்கலமும் வென்றனர்.

# தன்னம்பிக்கையின் நாயகன் அரை இறுதியுடன் சென்றார்

ஆண்கள் 400 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் களமிறங்கிய தென்னாபிரிக்க வீரர் ஆஸ்கர் பிஸ்டோரியஸ் (25), இறுதிப் போட்டிக்கு முன்னேறத் தவறினார். இரண்டு கால்களும் இல்லாத நிலையில் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்ற முதல் வீரர் என்ற பெருமைக்குரிய பிஸ்டோரியஸ், தகுதிச் சுற்றில் 2ஆவது இடம் பிடித்து அரை இறுதிக்கு முன்னேறியது குறிப்பிடத் தக்கது. அரை இறுதியில் 46.53 விநாடிகளில் பந்தய தூரத்தைக் கடந்து கடைசி இடத்தை பிடித்தாலும்,

தன்னம்பிக்கை மற்றும் விடா முயற்சிக்கு முன்னுதாரணமாக விளங்கிய அவருக்கு ஸ்ரேடியத்தில் இருந்த 80 ஆயிரம் ரசிகர்களும் இருக்கையில் இருந்து எழுந்து நின்று கைதட்டி பாராட்டு




தெரிவித்தனர். அடுத்து 4ஒ400 மீட்டர்ரிலே போட்டியில் தென்னாபிரிக்க அணி சார்பில் களமிறங்க உள்ளார்.

# பதக்கப் பட்டியல்

லண்டனில் இடம்பெற்று வரும் ஒலிம்பிக் போட்டிகளில் சீனா இழந்த முதலிடத்தை மீண்டும் கைப்பற்றியது.

நேற்று இரவு 10 மணி-வரையான முன்னிலை வகிக்கும் முதல் 20 நாடுகள் வெல்லப்பட்ட பதக்க பட்டியல் வருமாறு:-

| நிலை | நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | சீனா | 32 | 19 | 14 | 65 |
| 2 | ஐ.அமெரிக்கா | 29 | 15 | 19 | 69 |
| 3 | பிரித்தானியா | 19 | 12 | 12 | 43 |
| 4 | தென் கொரியா | 11 | 5 | 6 | 22 |
| 5 | பிரான்ஸ் | 8 | 9 | 10 | 27 |
| 6 | ரஷ்யா | 7 | 17 | 18 | 42 |
| 7 | இத்தாலி | 7 | 6 | 4 | 17 |
| 8 | கஷகஸ்தான் | 6 | 0 | 1 | 07 |
| 9 | ஜேர்மனி | 5 | 11 | 07 | 23 |
| 10 | நெதர்லாந்து | 4 | 3 | 4 | 11 |
| 11 | ஹங்கேரி | 4 | 1 | 3 | 08 |
| 12 | வடகொரியா | 4 | 0 | 1 | 05 |
| 13 | கியூபா | 3 | 3 | 1 | 07 |
| 14 | பேலர்ஸ் | 3 | 2 | 3 | 08 |
| 15 | நியூஸ்லாந்து | 3 | 1 | 4 | 08 |
| 16 | தென்னாபிரிக்கா | 3 | 1 | 0 | 04 |
| 17 | உக்ரைன் | 3 | 0 | 6 | 09 |
| 18 | யப்பான் | 2 | 12 | 14 | 28 |
| 19 | அவுஸ்திரேலியா | 2 | 12 | 8 | 22 |
| 20 | ருமேனியா | 2 | 4 | 2 | 08 |
| 20 | டென்மார்க் | 2 | 4 | 2 | 08 |

# இராணுவத்தில் புறக்கணிப்பு தொடர்கிறது வெள்ளிப்பதக்கம் வென்ற இந்திய வீரர்

லண்டன் ஒலிம்பிக் துப்பாக்கி சுடுதலில் வெள்ளி வென்று சாதனை படைத்த இந்திய வீரர் விஜய் குமார் விரக்தியின் உச்சத்தில் இருக்கிறார். தனக்கு பதவி உயர்வு தராமல் புறக்கணிக்கும் ராணுவத்தில் இருந்து விலக முடிவு செய்துள்ளார்.

இமாச்சல பிரதேசத்தை சேர்ந்தவர் விஜய் குமார், 26. லண்டன் ஒலிம்பிக் துப்பாக்கி சுடுதல் 25 மீ., "ரேபிட் பயர் பிஸ்டல் பிரிவில் வெள்ளி வென்றார். தற்போது ராணுவத்தில் சுபேதார் அந்தஸ்தில் பணியாற்றுகிறார். இவர் பல போட்டிகளில் பதக்கம் வென்ற போதும் எவ்வித அங்கீகாரமும் அளிக்கப்படவில்லையாம். இதையடுத்து ராணுவத்துக்கு "குட்பை சொல்ல முடிவு எடுத்துள்ளார்.

ஒலிம்பிக்கில் வெள்ளி வென்றதும் இவருக்கு, இமாச்சல பிரதேச அரசு ரூ. 1 கோடி பரிசு அறிவித்தது. ஆனாலும் அரசு விருது எதுவும் தனக்கு வழங்கப்படவில்லை என குறை கூறுகிறார்.

இது குறித்து விஜய் குமார் கூறுகையில் "கடந்த 2006 முதல் பல்வேறு சர்வதேச போட்டிகளில் பங்கேற்று நாட்டுக்காக நிறைய பதக்கம் வென்றுள்ளேன். 2010ல் டில்லியில் நடந்த காமன்வெல்த் போட்டியில் 3 தங்கம், ஒரு வெள்ளி வென்றேன். துப்பாக்கி சுடுதல் பயிற்சிக்கு தேவையான வசதிகளை மட்டும் ராணுவம் செய்து கொடுத்தது. மற்றபடி எனது பெயரை எந்த ஒரு சலுகைக்கும் "சீனியர்கள் பரிந்துரை செய்யவில்லை. ராணுவத்தில் பதவி உயர்வு அல்லது கவுரவு விருது உட்பட எதுவுமே வழங்கப்படவில்லை. சுபேதார் பணியில் பல காலமாக நிடிக்கிறேன். ஒலிம்பிக்கில் வெள்ளி வென்ற பின்பும், எனக்கு பதவி உயர்வு வழங்க மறுத்தால், ராணுவத்தில் இருந்து விலகி விடுவேன்.

தேசிய, சர்வதேச போட்டிகளில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கு வழங்கும் இமாச்சல பிரதேச அரசின் "பரசுராம், "இமாச்சல் கவுரவ் போன்ற விருதுகளும் எனக்கு அளிக்கப்படவில்லை ,என்றார்.

ரொக்க பரிசு:

இதற்கிடையே விஜய் குமாரை சமாதானம் செய்யும் முயற்சியில் ராணுவம் இறங்கியுள்ளது. இவரது பதவி உயர்வு பற்றி பரிசீலிக்கப்படும் என்றும், நாடு திரும்பியதும், ரொக்க பரிசு வழங்கி கவுரப்படுத்த இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 08.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது